வாழ்க்கைக் கலை

அ. கி. பரந்தாமனார் எம்.ஏ

மலர் நிலயம்
133, பிராட்வே... சென்னை-1

ஆசிரியரின் பிற நூல்கள்

பேச்சாளராக

நல்ல தமிழ் எழுத வேண்டுமா?

***

கவிதை

இயற்கை இன்பம்

காதல் நிலைக் கவிதைகள்

THE MADURAI TAMIL SANGAM

வாழ்க்கைக் கலை

அ.கி. பரந்தாமனார் எம்.ஏ

விற்பனை உரிமை:

மலர் நிலையம்
133, பிராட்வே...சென்னை-1

முதற் பதிப்பு: மார்ச்சு, 1955.
இரண்டாம் பதிப்பு: ஏப்ரல், 1956.
பதிப்புரிமை பெற்றது.

சாதாரண பதிப்பு

விலை ரூ. 2—8—0.

பரிசுப் பதிப்பு

விலை ரூ. 3—0—0.

வெளியிடுவோர்:

தமிழ் இந்தியா பதிப்பகம்,
18, முத்து முதலி தெரு,
புரசை, சென்னை—7.

வாழ்க்கையில் புகுவோர்க்கு

வாழ்க்கை அரிய கலைகளினும் அரியகலை. ஒருவர் அதனை நன்கு நடத்தினால் அடைதற்கு அரிய இன்பம் அடைவது உறுதி. ஆதலால், வாழ்க்கையில் புகுவோர்க்கு இவ் "வாழ்க்கைக் கலை" என்னும் நூல் ஓரளவு செவ்வையான வழிகாட்டியாக இருக்கக் கூடும். வாழ்க்கையில் புகுந்தவர்களுக்கும், இனியும் வாழ்க்கையை இனிதாகக் கழிக்க விழைபவர்களுக்கும் இது பயன்படும்.

பலபல ஆண்டுகளாகப் பற்பலர் வாழ்க்கையை அண்மையிலிருந்தும் சேய்மையிலிருந்தும் கூர்ந்து கவனித்து வந்ததால் அறிந்து கொண்ட அனுபவ உண்மைகளும், நல்வாழ்வுக்கு வேண்டி அறிஞர்கள் பலர் கூறிய அரிய நற்கருத்துக்களும் இந் நூலில் இடம் பெற்றுள்ளன.

தமிழ் நாட்டுச் செல்வங்களும் இந்நாட்டு எதிர்காலச் சிற்பிகளுமான இளம்பெண்கள் இளங்குமரர்கள் ஆகிய இவர்களுடைய வாழ்வு இனிதாக விளங்க வேண்டும் என்பது தான் என் அணையாத ஆவலாகும்.

வாழ்க்கையில் புகும் இளைஞர்கள், வாழ்க்கையின் உண்மைகளையும் தன்மைகளையும் நன்குணர்ந்து, எதுவரினும் அஞ்சாது, இன்பமாக, அன்புகொண்டு, தாழ்விலாது வளத்தோடு நீடு வாழ்வார்களாக !

"கொண்டல் மாமழை பொழிந்த
நுண்பஃ றுளியினும் வாழிய பலவே',

(புறநானூறு—34)

என்று வாழ்க்கையில் புகுவோரை வாழ்த்துகிறேன்.

அ. கி. ப.

பதிப்புரை

'தமிழ்நாடு' நாளிதழ் ஞாயிறு மலரில் வாழ்க்கைக் கட்டுரை வரிசையில் வந்த கட்டுரைகளைத் தொகுத்து இந் நூலாக வெளியிட்டுள்ளேன். இப் பதிப்பில் 'அண்டை வீடு போற்ற வாழும் பண்பாடு' என்னும் கட்டுரை புதிதாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது.

முதன்மையாகத் 'தமிழ்நாடு' ஆசிரியர் குழுவுக்கு என் நன்றி உரித்தாகும். 'தமிழ்நாடு' நாளிதழில் வெளிவந்து கொண்டிருந்த காலத்தில், அவ்வப்போது வேண்டிய திருத்தங்களைச் செய்த என் நண்பர் 'தமிழ்நாடு' நாளிதழ் துணையாசிரியர் திரு. M. SP. சண்முகம், எம்.ஏ. அவர்களுக்கு என் நன்றியும் வாழ்த்தும் உரித்தாகுக.

இந்நூலை நல்ல முறையில் வெளிவருமாறு பல்லாற்றானும் உதவி செய்த மலர் நிலைய நிருவாகி திரு. பழநியப்பன் அவர்களுக்கு நான் மிகவும் நன்றியுடையேன்.

அ. கி. ப.

பொருளடக்கம்

		பக்கம்
வாழ்க்கைக் கலை	...	9
'வாழு, வாழவிடு'.	...	18
இல்வாழ்க்கையை இன்பமாக்கும் வழிகள்	...	24
காதல்	...	34
இன்றைய மணவாழ்வு	...	44
மன்பதையில் மாதர்க்குரிய இடம்	...	51
குழந்தை வளர்ப்பு	...	60
பிள்ளை வளர்ப்பு	...	69
குடும்பத் திட்டம்	...	77
இல்லாண்மை	...	85
உணவுச் சீர்திருத்தம்	...	94
பழமையும் புதுமையும்	...	104
விதியும் மதியும்	...	111
நண்பராகா நாயகங்கள்	...	120
வாழ்வதும் வீழ்வதும்	...	127
இயல்பறிவு	...	132
பொது அறிவின் அவசியம்	...	137
அண்டை வீடு போற்ற வாழும் பண்பாடு	...	146
பொழுது போக்கு	...	151
உடல் நல வழிகள் சில	...	159
நீண்ட காலம் வாழ	...	166
சான்றாண்மை	...	174
முன்னேற வழிகள்	...	180
மணமக்களுக்கு	...	190

வாழ்க்கைக் கலை

ஆய கலைகள் அறுபத்து நான்கு என்று நம் நாட்டில் அறிஞர்கள் கலைகளை வகுத்து வைத்திருப்பதை அறிவோம். திறம்படச் செய்வதே சிறந்த கலை. நடனம், இசை, செய்யுள் இயற்றுதல், காவியம் செய்தல், ஓவியம் தீட்டுதல் முதலியவை அறுபத்து நான்கு கலைகளுள் சிலவாகும். இவற்றுள் அடங்காத கலையும், ஆய கலைகள் அறுபத்து நான்கினும் அரிய பெரிய கலையும், மானிடர்க்கு இன்றியமையாத கலையுமாக இருப்பது **வாழ்க்கைக் கலையே** என்பதில் ஐயமில்லை.

ஒருவர் ஒல்காப் புகழுடைய தொல்காப்பியர் இயற்றிய இலக்கணக் கலையில் வல்லுநராக இருக்கலாம். மற்றொருவர் ஞான நூற்கலையிலும் வானநூற் புலமையிலும் விற்பன்னராக விளங்கலாம். இன்னொருவர் தன்னேரிலாத் தமிழிலக்கியக் கலையிலும், மன்னுலகமெல்லாம் பொன்னெனப் போற்றும் ஆங்கில இலக்கியக் கலையி

லும் பாங்குறச் சிறந்திருக்கலாம். ஓர் அம்மையார் இசைக்கலையிலும் இனிய நடனக்கலையிலும் நாடகக்கலை யிலும் இம் மாநிலம் போற்றப் புகழ் பெற்றிருக்கலாம். இவர்களனைவரும் வாழ்வாங்கு வாழ வழிகாட்டும் வாழ்க் கைக் கலையை அறிந்திராவிட்டால், யாது பயனடைவர்? கற்ற கலைகளாலும் உற்ற புகழாலும் இவர்கள், வாழ்க்கை தரும் வளம்மிக்க இன்பத்தை நுகர முடியுமா? முடியாது.

கலைகளிலும் பெரிய கலை வாழ்க்கைக் கலை. கலைக ளெல்லாம் வாழ்க்கையின் நிழல்கள். வாழ்க்கையோ கலைகளுக்கெல்லாம் உயிர். 'வாழ்க்கையின் பிரதி பலிப்பே கலை' என்றார் அரிஸ்டாட்டில். இவ்விடத்தில் ஆங்கிலச் சிறுகதை நினைவிற்கு வருகிறது. கலைஞர்கள் சிலர் படகில் ஏறி அமர்ந்து கடலில் உல்லாச உலாவந்து கொண்டிருந்தார்கள். படகினுள் இருந்தவர்கள் தத்தம் பெருமைகளைப் பேசத் தொடங்கினார்கள். ஒருவர், "எனக்கு விலங்கு நூற்கலை தெரியும்" என்றார். மற் றொருவர், "நான் உடல் நூற்கலை அறிவேன்" என்றார். இன்னொருவர், "எனக்கு உளத்தியல் நூற்கலை தெரி யும்" என்றார். இங்ஙனம் அவர்கள் பேசிக்கொண் டிருந்தார்கள். அப்பொழுது கடல் கொந்தளிக்கத் தொடங்கியது. அலைகள் மோதின. படகு கடலில் மூழ்கி விடுவதுபோல் காணப்பட்டது. அந்நிலையில் படகோட்டி அவர்களைப் பார்த்து, "கலை வல்லுநர்களே, அலைகடலில் வீழ்ந்தால் அமிழ்ந்து போகாது உயிர் பிழைக்க உங்க ளுக்கு நீந்தற்கலை தெரியுமா?" என்று கேட்டானும். அவன் கேட்டதில் தவறுண்டா? இல்லை. எக் கலைகள் கற்றிடினும், பொதுவாக எல்லாரும், சிறப்பாக வாழ்க்

கைப் பாதையை நோக்கி வழி நடக்கும் இளைஞர்கள் அனைவரும், தக்கவாறு இப்புவியில் வாழ வாழ்க்கைக் கலையை அறிந்துகொள்ள-ஏன்? - கற்றுக்கொள்ள வேண்டுவது அவசியம் என்று சொல்லத் தேவை இல்லை.

வாழ்க்கை, கண்ணுடியில் காணும் தோற்றம் போன்றதல்ல; கற்பனை விளையாட்டும் அல்ல; இனிய தென்றல் வீசும் கனிகள் நிறைந்த மரங்கள் செறிந்த மாஞ்சோலையும் அல்ல; நீரும் நிழலுமற்ற பாலைவனமும் அல்ல; அலையடித்துக் கொந்தளிக்கும் ஆழ்கடலும் அல்ல; முட்களும் கற்களும் மலிந்த காட்டு வழியும் அல்ல. வாழ்க்கை என்பது இனிய கவிதை போன்றது; பந்தய விளையாட்டுப் போன்றது. ஆண்களும் பெண்களும் வாழ்க்கையை நினைத்து அஞ்சவேண்டுவதில்லை; துன்பம் மிக்கது என்று எண்ண வேண்டுவதும் இல்லை. ஆனுல், எவரும் வாழ்க்கை மிக மிக எளியது என்று கருதுவதும் கூடாது. விழிப்போடு வழிமேல் விழி வைத்து நடக்கவேண்டுவது வாழ்க்கை என்பதை ஒருவரும் மறத்தலாகாது.

வாழ்க்கை என்பது யாது? இன்பம் துன்பம், போராட்டம் அமைதி, உழைப்பு ஓய்வு, வெற்றி தோல்வி, அன்பு ஆசை, பசி காதல், உள நிறைவு நிறைவின்மை இவற்ருல் ஆனதுதான் இவ் வாழ்க்கை. எனவே, பிறப்பிலிருந்து இறப்பு வரைக்கும் உள்ள காலத்தில் வாழ்வில் இன்பம் துன்பம் எல்லாம் இருக்கும். இவை இல்லாமல் ஒருவருடைய வாழ்க்கையும் இருக்க முடியுமா? இருப்பதுதான் இயற்கையா? இல்லை. இங்ஙனம் உள்ள வாழ்க்கையை எங்ஙனம் நடத்த

வேண்டும் என்று தெரிந்து நடப்பதுதான் அறிவுடைமை. இதுதான் வாழ்க்கைக் கலை.

எல்லா மொழி இலக்கியங்களும் வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுகின்றன. வாழும் இலக்கியங்கள் எல்லாம் வாழ்க்கையையே அடிப்படையாகக் கொண்டுள்ளன என்பதை ஒருசில இலக்கியங்களைப் படித்தவர்களும் நன்குணர்வார்கள். தண்டமிழ்க் காப்பியங்களும் உலகப் பொதுமறையாகிய திருக்குறளும் பிற அற நூல்களும் வாழ்க்கைக்கே வழி வகுத்துக் காட்டுகின்றன. ஆதலால், இலக்கியங்களைப் படித்தால் நாம் ஓரளவு வாழ்க்கையை நடத்த வழிகளைத் தெரிந்து கொள்ளலாம்.

எறும்பு முதல் யானை ஈறாக உள்ள எல்லா உயிர்களும் வாழ்க்கையில் விரும்புவது இன்பமே. படைப்பின் மணிமுடியாக விளங்கும் மானிடரும் அடைய விழைவது இன்பமே. மக்கள் முதலான மன்னுயிர் அனைத்திற்கும் நோக்கம் இன்பவாழ்வன்றி வேறில்லை. இன்ப வாழ்வை அடைய வாழ்க்கைக்கு அடிப்படைத் தத்துவம் வேண்டும். ஒரு சிலர் வாழ்க்கைக்குத் துன்ப நோக்கை அடிப்படைத் தத்துவமாகக் கொள்வர். இவர்கள்,

> "பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்;
> பிறவார் உறுவது பெரும்பேர் இன்பம்"

என்று கருதி வாழ்க்கையைத் துன்பம் நிறைந்ததாக எண்ணுவார்கள். இந் நோக்கு நல்லின்ப வாழ்க்கைக்கு இடம்தாராது. அழுமூஞ்சிகளால் இன்பம் அடைய முடியுமா? முடியாது. மற்றவர்கள்,

> "எதுவரினும் சரியே இதுவாழ்வின் நெறியே"

என்று கருதி இன்பமல்லால் துன்பமில்லை என மனவுறுதியோடு இன்ப நோக்கை வாழ்க்கையின் அடிப்படைக் கொள்கையாகக் கொண்டு வாழ்வார்கள். இவர்களது வாழ்க்கை நோக்கமே தாழ்விலாத நல்லின்பத்தை அளித்து உலக வாழ்க்கையை இனிதாக்க வல்லது. நல்வாழ்வு வாழ விழைபவர்கள் நாடவேண்டிய நோக்கம் இதுவேயாகும்.

இன்றைய வாழ்வில் சமயத்துக்கும் விஞ்ஞானத்துக்கும் ஏற்படும் போராட்டத்தால், நல்வாழ்வு வாழ விரும்பும் இளைஞர்களும் கடவுளுக்குத் தங்கள் நெஞ்சில் இடங்கொடுக்க அஞ்சுகிறார்கள்; விஞ்ஞான ஆராய்ச்சியால் கடவுளை ஏற்க மறுக்கிறார்கள். கடவுளை நம்புவது கண்மூடிப் பழக்கம் என எண்ணிவிடலாகாது. பெரும்பாலும் கற்றாரும் கல்லாதாரும் ஒழுக்க நெறியில் வழுவாது நடப்பதற்கும், துன்பமிகுந்து மனம் முறியுங்காலத்தில் இன்பவொளி காண்பதற்கும் கடவுள் எண்ணம் பெருந்துணை செய்யும் என்பதை அனுபவத்தில் காணலாம். விஞ்ஞான முறையில் நடத்தும் வாழ்க்கை எஞ்ஞான்றும் இன்பம் அளிப்பதில்லை. எனவே, கடவுள் பற்று இன்ப வாழ்க்கைக்கு இன்றியமையாதது என்பது மிகையாகாது. தன்னலத்தைக் குறைத்துத் தாயுமானார் எண்ணியது போன்று,

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாது வேறென்(று) அறியேன் பராபரமே"

என்று எண்ணி, மக்கட்குத் தொண்டு புரிந்து இன்பமுறவும் இவ் வெண்ணம் பெரிதும் பயன்படும். 'ஒருவனே தேவன்' என்னுங் கடவுள் பற்றே ஓவ்வொருவர் உள்ளத்திலும் இருக்க வேண்டிய பற்றாகும்.

வாழ்க்கைக் கலைக்கு அறிவது அறிந்து அடங்கி, அஞ்சுவது அஞ்சி, செய்வது உலகு உவப்பச் செய்து, பெறுவதனால் உளம் நிறைவு கொள்ளும் இயல்பு வேண்டும். இவ்வியல்புடையோர்க்கு என்றும் இன்பமன்றித் துன்பம் இல்லை. இங்ஙனம் நாலடியார் கூறுவதைக் கீழ்வரும்,

> "அறிவ(து) அறிந்(து) அடங்கி அஞ்சுவ(து) அஞ்சி
> உறுவ(து) உலகு உவப்பச்செய்து—பெறுவதனால்
> இன்புற்று வாழும் இயல்புடையார் எஞ்ஞான்றும்
> துன்புற்று வாழ்தல் அரிது"

என்னும் வெண்பாவால் அறியலாம்.

வாழ்க்கைக்கு உணர்ச்சி உதவாது, ஆராய்ச்சியோடு கூடிய அறிவு வேண்டும்; சந்தேகம் கூடாது, நம்பிக்கை வேண்டும்; தந்திரம் கூடாது, சாதுரியம் வேண்டும்; தோல்வி மனப்பான்மை உதவாது, வெற்றி காணும் உறுதி வேண்டும். முயற்சி மட்டும் போதாது; விடா முயற்சி வேண்டும். பொருளாசை வேண்டாமென்பதில்லை; வேண்டும். ஆனால், பேராசை கூடாது. அறம், அன்பு, அறிவு இம் மூன்றும் வாழ்க்கைக்கு வேண்டும். இம் மூன்றுமே வாழ்க்கை என்னுந் தேர்க்கு அச்சாணிகள். சந்தேகம் வாழ்க்கைக்குப் பகை. சந்தேகம் ஏற்பட்டு விட்டால் இன்பத்தைக் காணுதல் அரிதினும் அரிதாகும்.

வாழ்க்கையில் வெற்றிபெற வேண்டுமானால் பிடித்த வேலை, நிதானிக்குந் திறமை, அறிவுப் பெருக்கம், நல்ல சூழ்நிலை, பொறுப்புணர்ச்சி, கடமையுணர்ச்சி, செய்யுஞ் செயலில் ஈடுபாடு, வரவுக்கு ஏற்றவாறு செலவு செய்

தல், இன்சொல், நேர்மை, மரியாதை, கலைநோக்கு, குறை கூருமை, மனநிறைவு இவை தேவை எனச் சொல்ல வேண்டுவதில்லை. இவை இன்றி எவரும் வாழ்க்கையைக் கலையாக்க முடியாது. ஒருவர் இவை இல்லாது வாழலாம்; ஆனால், விலங்கு போன்று வாழ லாம். நேர்மையுள்ளவர்கள் சிறந்து வாழ முடியா தென்று பலர் எண்ணுவது தவறு. நேர்மையற்றவர்கள் வாழ்வு சிலநாள் ஓங்கிநின்று பின்னர் வீழ்ந்தொழியும். சிலர் தந்திரத்தால் வாழ்க்கை நடத்தக் கருதுகின்றனர். தந்திரத்தினால் வாழும் வாழ்வு ஒரு வாழ்வாகுமா?

சாதுரியம் இருக்குமானால் வாழ்வு சிறப்படையும். சாதுரியம் தந்திரம் அல்ல; மந்திரமும் அல்ல; சம யோசிதமான திறமையாகும். கெண்டையைப் போட்டு வராலை இழுப்பதும், காற்றுள்ளபோதே தூற்றிக்கொள் வதும், 'கல்லைக் குத்துவானேன் கைநோகிறதென்றழு வானேன்' என்று சும்மா இருப்பதும், 'மௌனம் கலகம் நாஸ்தி' என்று சில சமயங்களில் பேசாமலிருப்பதும் சாதுரியமாகும். கம்புக்குக் களைவெட்ட அழைத்துச் சென்று தம்பிக்குப் பெண்கொள்ள முடிவு செய்வது சாது ரியம். தர்க்கம் செய்யாதிருப்பதும், ஒருவர் இயல்பு அறிந்து நடந்துகொள்வதும் சாதுரியம். பேச்சு முதன்மை யானது. ஒருவர் எவரிடம் எந்த அளவு பேசவேண்டும் என்றறிந்து வரம்பிலே நின்று பேசவேண்டும். தலைமைப் பதவியிலிருப்பவர் நண்பரென்று நெருங்கவும் கூடாது; நெருங்காமல் இருத்தலும் கூடாது: தீக்காய்வார் போல நடந்து கொள்ள வேண்டும். பெருஞ்செல்வர்களிடம் விழிப்பாக நடந்துகொள்ள வேண்டும். பேசும்போது பட்டுக் கத்தரித்தல் போல் முன்பின் நோக்கி வீண்

சொற்களைக் கொட்டிவிடாது பேசவேண்டும். கூடியமட்டும் நண்பர்களைப் பெருக்கிக் கொள்ளாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். ஊரில் ஒருவனே தோழனுக இருக்க முடியும். பலர் அறிமுகமானவர்களாய் இருப்பவரே. நண்பர்களைப் பெருக்கிக் கொண்டால் காலம் வீணுகும். ஒருவர் மற்ருெருவரை ஏமாற்றுதல் கூடாது. ஆனுல், நாம் ஏமாற்றப்படாமல் இருக்க மக்கள் எப்படி ஏமாற்றப் படுகிருர்கள் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். தோழனுயினும் ஏழைமை பேசலாகாது. ஒருவரைப் பற்றித் தவருன செய்தியைப் பரப்பி விடுதலும் கூடாது. ஒருவரைத் திருத்த வேண்டுமானுல் நேரில் சொல்லி அவரைத் திருத்தலாம். ஒருவர் சினந்து பேசினுல் அமைதியாகப் பதில் கூறும் பொறுமை வேண்டும். இவையெல்லாம் சாதுரியமாகும். இப்படி நடப்பது தந்திரமல்ல; வாழ்வதற்குரிய இனிய வழி.

இன்பவாழ்வு என்பது யாது? பல்லெலாம் தெரியக்காட்டிப் பருவரல் முகத்தில் கூட்டி இச்சகம் பேசி எப்படியாலுைம் வாழ்வது இன்ப வாழ்வாகுமா? ஆகாது. இது பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை. நேர்மையான வழியில் வாழ்வதுவே இன்ப வாழ்க்கை. இருக்க இடமும் உண்ண உணவும் உடுக்கப் போதுமான உடையும், இல்லற வாழ்வுக்கு ஏற்ற ஒரு வாழ்க்கைத் துணைவியும், இன்பத்தின் பயனுக ஆண் ஒன்றும் பெண் ஒன்றுமாக இரு மக்களும், ஓய்வு நேரத்துக்கு ஒரு கலையும் இருக்குமானுல் வாழ்வு இன்பமாக விளங்கும் : கலையாக இலங்கும். பொருளாதாரச் சீர்கேட்டாலும் தவருன சமுதாய அமைப்பாலும் அறிவுக் குறைவாலும் இந்த இன்ப வாழ்வு பலருக்கு இந் நாட்டில் எட்டாமல் இருக்கலாம்.

வாழ்க்கை வளமாவதற்கு இந் நாட்டில் குடும்பத்திட்டம் இன்றியமையாதது. நிலையற்றவர்களுக்கு வாழ்க்கைக் கலையால் யாது பயன் என்று கருதக்கூடாது. யாவரும் வாழ்க்கையைக் கலையாக உணர்ந்து நடத்த முயன்றால் நன்மையடையலாம்; அடைதலும் கூடும்.

மக்கள் வாழ்க்கையைத் துன்பமாக நினையாது, இன்பக்கடல் என்றும் எண்ணாது, புயலுக்கு எதிரே படகைச் செலுத்துவது வாழ்க்கையாகும் என்பது அறிந்து, 'வாழ்க்கைப் போராட்டத்தில் வலியுள்ளது வாழ, வலியற்றது வீழும்' என்னும் விஞ்ஞான உண்மையை உணர்ந்து, தங்களைத் தக்கவர்களாக்கிக் கொண்டு, 'உயர்வுக்கும் தாழ்வுக்கும் உள்ளவன் தானே' என்னும் உண்மையை மறவாது, 'ஆக்கத்துக்கு விடா முயற்சி வேண்டும்' என்பது தெரிந்து, 'அறிவுடையார் எல்லாம் உடையார்' என்பதை உளத்தமைத்து, தன்னலப் பேய்களாகாமல், அன்பும் இரக்கமும் அணியாய்ப் பூண்டு, தொண்டு மனப்பான்மை கொண்டு, சோம்பியிராது பொருள் தேடிப் பண்பாடு அறிந்து, ஓய்வு நேரத்தைக் கலையில் பயன்படுத்தி, வாழ்வாங்கு வாழ்ந்தால், வாழ்க்கை உண்மையில் கலையாகவே விளங்கும் என்பதில் ஐயமில்லை. கலைகளினும் பெரிய கலை வாழ்க்கைக் கலையே.

'வாழ, வாழ விடு.'

மானிடப் பிறப்பு, படைப்பின் மணிமுடி. பெறு தற்கு அரியது மானிடப் பிறப்பு. அப் பிறப்பினும் குறை யின்றிப் பிறப்பது அரிது. பிற்கால ஔவைப் பிராட்டி,

"அரி(து) அரிது மானிடராதல் அரிது;
மானிடராயினும் கூன்குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்தல் அரிது;
பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது;
ஞானமும் கல்வியும் நயந்த காலையும்
தானமும் தவமும் தான்செயல் அரிது;
தானமும் தவமும் தான்செய்வாராயின்
வானவர் நாடு வழிதிறந் திடுமே"

(தனிப்பாடல் திரட்டு)

என்று பாடினார். இப்படிச் சிறப்புமிக்க பிறப்பையுற்ற மானிடர் எப்படி வாழவேண்டும்? மாண்புமிக்க வாழ் வாக மானிட வாழ்வு இருப்பதுதானே நன்று. "வாழ்வா

வது மாயம் நாளை மண்ணுவது திண்ணம்'' என்பது உண்மையாயினும், வாழும் நாளிலாவது மக்கள் மாண்புற வாழவேண்டாமா?

பிறப்பிலிருந்து இறப்பு வரைக்கும் உள்ளதுதான் வாழ்க்கை. அவரவர் உடல்நல அறிவுக்கும், உடல் அமைப்பிற்கும், ஒழுக்க நெறிக்கும் தக்கவாறு அவரவர் வாழ்க்கை நீண்டும் குறைந்தும் பெரிதும் அமைந்திருக்கும். ஆண்டி முதல் அரசன் ஈறுக யாவரும் வாழ்க்கையில் விழைவது இன்பவாழ்வே. அந்த இன்ப வாழ்வை அடைவதற்கு ஏற்ற குறிக்கோள் இருந்தாலன்றி அதனை அடைய முடியாது. அந்தக் குறிக்கோள் நல்லதாக அமையவேண்டும். அத்தகைய வாழ்க்கைக் குறிக்கோள் யாது? **'வாழு, வாழ விடு'** என்பதே அக் குறிக்கோள்.

'வாழு, வாழ விடு' என்னும் வாழ்க்கைக் குறிக்கோள், இனிய வாழ்வு வாழ விரும்பும் மக்கள் அனைவரும் ஏற்றுக் கடைப்பிடிக்க வேண்டுவதொன்று. இது செல்வர்க்கு மட்டும் ஏற்றதென்பதல்ல; வறிய நிலையில் வாடுவார்க்கும் ஏற்றதே. மக்களுக்குமட்டும் இது வேண்டுவதென்பதல்ல; மக்கள் வாழும் மாபெரும் நாடுகளுக்கும் வேண்டுவதொன்றே. வாழ்க்கையின் மந்திரமே 'வாழு, வாழவிடு' எனலாம்.

''தனக்கு மிஞ்சியது தருமம்'' என்பது பழமொழி. இதுதான் இயற்கை. தன்னை மறந்து பிறர்க்குச் செய்வது தியாகம். 'வாழு, வாழவிடு' என்னுங் குறிக்கோளில் கூறுவது 'தன்னைப் பார்த்துக் கொள்வதோடு பிறரையும் பார்க்கவேண்டும்' என்பதுதான். ஒருவன் தன்னை மறந்து, தன் மனைவி மக்களை மறந்து, ஆசையைத் துறந்து,

பிறரை வாழச் செய்வதையே நோக்கமாகக் கொள்ள வேண்டும் என்று இக் குறிக்கோள் வற்புறுத்தவில்லை; தியாகமூர்த்தியாகவோ பிறர் நலம் பேணும் பெருவள்ள லாகவோ வாழவேண்டும் என்றும் நற்புத்திபுகட்டவில்லை, ''நீயும் வாழ், உன் நலத்தையும் கவனித்துக்கொள்; ஆனால், பேராசையால் உன் முன்னேற்றத்தை மட்டும் எண்ணி, மற்றவன் நலத்துக்கும் முன்னேற்றத்திற்கும் முட்டுக் கட்டை போட்டுத் தடைசெய்து வாழாமல், தன் னலப் பேயாக இராமல், பிறரையும் வாழ விடு'' என்றே கூறுகிறது. சுருங்கச் சொன்னால், ''மனிதனே, மனிதத் தன்மையோடு மாண்புற வாழ்'' என்றுதான் இக் குறிக் கோள் நமக்கு வழிகாட்டுகிறது.

பிறரை வாழவிடாமல் செய்வதற்குள்ளவை தன்ன லம், பேராசை, பொறாமை, மாண்பிறந்த மானம் ஆகிய இவையேயாகும். ஒருவனுக்குத் தன்னலமும் தமர்நல மும் இருப்பது இயற்கையே. ஆனால், தன்னலத்தையும் தமர் நலத்தையும் மிகுதியாகக் கொள்வது தவறு. இவற் றால் பிறரை வாழவிடாமல் செய்வது அறமாகுமா? ஆகாது. ஒருவர் முன்னேற ஆசைவேண்டும்; ஆனால், பேராசை மட்டும் கூடாது. பிறரைக் கெடுத்து வாழ வேண்டுமென்பது தகாது. பற்றற்ற வாழ்க்கையை மேற் கொள்வது முற்றும் துறந்த முனிவர்களாலும் முடியாத போது, மற்றவர்களால் எங்ஙனம் முடியும்? ஆசைதான் உலக வளர்ச்சிக்கும் மக்கள் முன்னேற்றத்திற்கும் ஆணி வேர். ''அற்றது பற்றெனின் உற்றது வீடு'' என்பது யாருக்கு? வீட்டின்பம் விரும்புவார்க்கு அது. மற்றவர்கள் பற்றில்லாமல் வாழ்வது அரிதினும் அரிது. ''பொருளிலே ஆசை, புகழிலே ஆசை இல்லாமல் இருக்கிறேன்'' என்று

சொல்பவர்கள் நம்பத்தக்கவர்கள் அல்லர். பொருளல்லவரையும் பொருளாகச் செய்வது பொருள் என்றார் வள்ளுவர். பொருளில்லாதவர் ஆமையை நீர் உலையில் பெய்து அடுவதுபோலும் துயர் அடைவர். இதனைக் கீழ் வரும் நாலடியார் வெண்பாவில் காண்க:

''வடுவிலா வையத்து மன்னிய மூன்றில்
நடுவண(து) எய்த இருதலையும் எய்தும்;
நடுவண(து) எய்தாதான் எய்தும்·உலைப்பெய்(து)
அடுவது போலும் துயர்.''

இக் கருத்து மிகமிக உண்மை. பெரும்பொருள் தேட வேண்டும். ஆனால், கழுத்தறுப்புப் போட்டியாலோ பிறரைக் கெடுக்கும் வழியாலோ பொருளைத் தேடுவது ஆகாது. ஆசைக்கு அளவு ஏது? அகிலமெல்லாம் கட்டியாளினும் ஒருவர் கடல் மீதிலே ஆணை செலவே நினைப்பர். அளகேசன் நிகராக அம்பொன் மிக வைத்த பேரும் நேசித்து ரசவாத வித்தைக்கு அலைந்திடுவர். முயன்று பெரும்பொருள் தேடுவது, பொருள் தேடுவார்க்கும் நாட்டுக்கும் நன்மையைத் தரும் என்பது பொருளாதாரம் கண்ட உண்மை. அதனால், ஒருவர் பிறரைக் கெடுத்து, வாழவிடாது பொருள் தேடுதல் கூடாது. அதுபோலவே ஒருவர் பிறருடைய புகழைக் கெடுத்துத்தாம் புகழுற விரும்புவதும் கூடாது. புகழை விரும்பாதார் உலகில் இல்லை. புகழை விரும்பவில்லை என்று சொல்பவர் இருக்க முடியாது. ''பெரியோர்களுக்கும் உள்ள குறை புகழை விரும்புதல்'' என்றார் ஆங்கிலக் கவிஞர் மில்டன். கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி புறநானூற்றில் (பெரியோர்) ''புகழெனின் உயிரும் கொடுக்குவர்; பழியெனின் உலகுடன் பெறினும் கொள்

ளலர்'' என்றார். புகழுக்காகப் பிறரைக் கெடுக்கும் இழிதகைமை பழிக்கத்தக்கது.

பொறாமையால் பிறரை வாழவிடாது கெடுப்ப வர்கள் இவ் வுலகில் எங்கும் காணப்படுகிறார்கள். பொறாமை பலருக்குக் காரணத்தால் உண்டாகும்; சில ருக்குக் காரணமின்றியும் தோன்றும். 'நம்மைவிடத் தாழ்ந்த நிலையில் இருந்தவன் இன்று நம்மைவிட உயர்ந்த நிலையில் வாழ்வதா?' என்னும் எண்ணமே பொறாமைக் குக் காரணமாகிறது. 'தாழ்ந்த இனத்தவன் உயர்வதா?' என்னும் எண்ணத்தால் சிலர் பொறாமைப்பட்டுப் பிறரை முன்னேற விடுவதில்லை. காரணம் இருந்து தீமைக்குத் தீமை செய்தாலும் ஒருவாறு பொறுத்துக் கொள்ளலாம்; காரணம் இல்லாமலே பொறாமையால் தீமை செய்வதை எங்ஙனம் பொறுத்துக்கொள்ள முடியும்? பொறாமை ஏற்படுமானால் பகைமை, மகிழ்ச்சி யின்மை, நட்பின்மை இவை தோன்றி வாழ்க்கை இன் பத்தைக் கெடுத்துவிடும். இதனாலன்றோ உலகப் பொது மறையாகிய திருக்குறளும் அழுக்காறு இலாத இயல்பை ஒழுக்காறாகக் கொள்ளுமாறு வற்புறுத்துகிறது?

''உளநாள் சிலவால்; உயிர்க்(கு) ஏமம் இன்றால்;
பலர்மன்னும் தூற்றும் பழியால்;—பலருள்ளும்
கண்டாரோ(டு) எல்லாம் நகாஅ(து) எவன் ஒருவன்
தண்டித் தனிப்பகை கோள்?''

என்று கூறுகிறது நாலடியார். ''வாழ்நாட்களோ சில. உயிர் நிலைப்பதில்லை. பலர் பழி தூற்றுகின்றனர். இங் ஙனமிருக்க ஒருவன் பொறாமையாலோ வேறு காரணத் தாலோ கண்டாரோடு எல்லாம் சிரித்து மகிழ்ந்து வாழா மல் தனித்து நின்று பகை கொள்வான் ஏன்?'' என

மேற்குறித்த வெண்பா அறிவுரை பகர்கிறது. நாலடி யார் கூறுவதும் உண்மைதானே. புறத்தே நகநகைப்பது மகிழ்ச்சியைத் தாராது; அகம் நக நகைப்பதே மகிழ்ச் சியை உண்டாக்கும். “சிரித்துச் சிரித்துக் கெடுக்கும் கொடியோர் உலகில் உண்டு” என்கிருர் ஷேக்ஸ்பியர். அகம் நக நகைத்து அனைவரும் வாழவேண்டும்.

மாண்பு இறந்த மானத்தால் ஒரு சிலர் பிறரை வாழவிடாமல் செய்வதுண்டு. தாழ்வு வாராமல் பார்த் துக்கொள்ளுதலும், தாழ்வு வந்துவிட்டால் வாழாமை யும் மானமாகும். “நாம் செல்வமுடையோம்; கல்வி யுடையோம். நம்மினும் பிறர் சிறந்து வாழ்வதா?” என்று ஒரு சிலர் பிறரைக் கெடுக்க எண்ணுவர். இது மான மாகாது. இதுதான் மாண்பு இறந்த மானம். இதுதான் தவருன கருத்தால் எழுந்த தப்பான மானம். இதனுல், பிறரை வாழவிடாமலும் முன்னேறவிடாமலும் செய்வது இழிவினும் இழிவாகும்.

தானும் நன்ருக வாழ்ந்து தன்னலம், பேராசை, பொருமை, மாண்பிறந்த மானம் இவற்ருல் பிறரைக் கெடுத்து வாழாது, எல்லாரும் இன்புற்று வாழ எண்ணி வாழ்வாங்கு வாழ்வதற்கு, ‘வாழு, வாழ விடு’ என்னுங் குறிக்கோள் ஒருவனுக்குப் பெருந்துணை செய்து மண் ணுலகில் எண்ணரிய இன்பத்தை அளிக்கும் என்ப துறுதி. ‘வாழு, வாழ விடு.’

இல்வாழ்க்கையை இன்பமாக்கும் வழிகள்

இவ்வுலக வாழ்க்கையை இன்பமாக்கவல்லது இல்வாழ்க்கையே. இல்வாழ்க்கை என்பது வீட்டு வாழ்க்கையைக் குறிப்பிடுகிறது. இல்வாழ்க்கை இன்பத்தை அடைவதற்குச் சிற்றின்பத் திறமையை மட்டும் பலர் குறிப்பிடுகின்றனர். அதுமட்டும் போதியதல்ல. வள்ளுவர், இல்வாழ்க்கை இன்பத்திற்கு அறனும் அன்பும் வேண்டும் என்றார். உண்மைதான். கணவனும் மனைவியும், அன்பும் அறனும் கொண்டிருப்பதோடு மட்டுமன்றிப் பண்பினும், நடந்துகொள்ளும் பான்மையினும் சிறந்து விளங்கவேண்டும். இவற்றை யெல்லாம் வள்ளுவர் அன்பும் அறனும் என்னும் இரண்டில் அடக்கி விட்டார்.

மூளைக் கோளாறோ வேறு கொடிய நாயோ கேணவனுக்காவது மனைவிக்காவது இருக்குமாயின், இல்

வாழ்க்கை இன்பத்தையும் வீட்டு வாழ்க்கை இன்பத்தையும் குடும்ப வாழ்க்கை இன்பத்தையும் எதிர்பார்ப்பது குதிரைக் கொம்புதான். நோயற்ற கணவன் மனைவியர் நல்ல இல்வாழ்க்கை இன்பத்தைக் காணக்கூடும். நோயற்ற நிலை இருந்தும், போதிய கல்வியிருந்தும், வேண்டிய அளவு வருவாய் இருந்தும், போதிய அறிவும் கூடிய திறமையும் இல்லாததால் குடும்ப வாழ்க்கை இன்பம் சிலரிடம்—ஏன்?—பலரிடம் பாழ்பட்டுப் போகக் காண்கிறோம். பொதுவாகக் கூறுமிடத்துக் குடும்ப வாழ்க்கை இன்பத்தைக் கொடுப்பதற்கும் கெடுப்பதற்கும் காரணமாயிருப்பவர்கள் பெண்களே. ஆதலால், அவர்கள் மிகுந்த திறமையுடன் நடந்துகொள்ள வேண்டும். "ஏர் பிடிப்பவன் என்ன செய்வான்? பானை பிடிப்பவள் பாக்கியம்" என்பது பழமொழி. இதனால், ஆண்கள் கவலையற்று எப்படியும் இருக்கலாம் என்பதில்லை. ஆண்களும் தக்கவாறு நடந்துகொள்ளவேண்டும். ஆண்கள் பேரறிஞர்களாக விளங்கிப் பேரும் புகழும் பெறுவதால் மட்டும் குடும்ப வாழ்க்கையில் இன்பத்தைக் காணமுடியாது. பெருஞ் செல்வர்களாக இருப்பதனால் மட்டும் எவரும் இல்வாழ்க்கை இன்பத்தை அடைய முடியாது. பேரறிஞர்கள் என்று பாராட்டப்பட்டவர்கள் குடும்ப இன்பத்தை அடையாமல் இறந்ததையும் இருப்பதையும் காணாமல் இல்லை. கவலையீனத்தாலும் குடும்பத்தில் அக்கறையின்மையாலும் தன்னலப் பேய்களாகவும் மனித விலங்குகளாகவும் வாழ்ந்ததனால், பேரறிஞர்களுக்கும் குடும்ப வாழ்வு முயற்கொம்பானதுண்டு. ஆதலால், ஆணும் பெண்ணும் அன்புடனும் அறத்துடனும்

அறிவுடனும் கருத்தொருமித்துத் தங்கள் மக்களை நன் முறையில் வளர்த்து வந்தாலொழிய, எத்தகைய பேரறி ஞராகவும் பெருங்கலைஞராகவும் பெருஞ் செல்வராகவும் இருப்பினும், இத்துறையில் இன்பம் காணுது துன்புற வேண்டுவதாகும் என்பதை என்றும் மறத்தலாகாது.

அமெரிக்காவில் ஆயிரக்கணக்கான குடும்பங்களை ஆராய்ந்த அறிஞர்கள் பெரும்பாலான மண முறிவு களுக்கும் குடும்பச் சச்சரவுகளுக்கும் அடிப்படையான நான்கு காரணங்களைக் குறிப்பிடுகிருர்கள். அவை இவை :—

1. சிற்றின்பத்திறனில் உற்றுள்ள குறைகள்.

2. ஓய்வு நேரத்தைக் கழிப்பதில் உண்டாகும் கருத்து வேறுபாடுகள்.

3. பணத்தொல்லை.

4. குணக்கேடுகள்.

நம் நாட்டில் மண முறிவுகள் மிகுதியாக இல்லை. 'புல் என்ருலும் புருஷன்; கல் என்ருலும் கணவன்' என்று கருதும் பண்பாடுடையவர்கள் நம் பெண்கள். இவர்கள் ஓய்வைப்பற்றிக் கருத்து வேறுபாடோ கவலையோ சற்றேனும் கொள்ளமாட்டார்கள்; பார்த் தால் படம் பார்ப்பார்கள்; இல்லை என்ருல் பரமன் கோயிலை நாடுவார்கள். நடுத்தரக் குடும்பங்கள், டாம்பீகத்தில் ஈடுபடாமல் வருவாய்க்கு ஏற்றவாறு வாழ்ந்தால், பணத்தொல்லையால் ஏற்படும் குடும்பச் சச்சரவுகளை நீக்கி ஓரளவு இன்பமாக இருக்கலாம். சீட்டுப் பிடித்து நட்டமடைதல், அதிக வட்டிக்குக் கடன் கொடுத்துப் பணம் இழத்தல் முதலான செயல்களுக்கு

ஆட்படாமலிருந்தாலும், ஆணும் பெண்ணும் வீண் பணத் தொல்லைக்கு இரையாகாமல் இருக்கலாம். கம்பர் பெருமான், "இல்லாரும் இல்லை உடையார்களும் இல்லை மாதோ" என்று கூறிய குறிக்கோளாகிய பொருளாதார சமவுடைமை நிலை என்று வருமோ அன்றுதான் பணத் தொல்லை எல்லாருக்கும் நீங்கும். அந்த நிலை அண்மையில் இல்லை. ஓரளவு போதிய வருவாயுள்ளவர்கள் டாம்பீகத்திற்கும் பேராசைக்கும் ஆட்படாதிருந்தால், பணத்தொல்லையால் குடும்ப இன்பம் கெடுவதற்கு வழி இல்லாமலிருக்கும்.

சிற்றின்பத்திறனளிக்க வலியற்றவர்கள், பெற்ருேர் வற்புறுத்தலுக்காகவோ திடீரென்று தோன்றும் ஆசைக்காகவோ வயப்படாமல் சிந்தித்து மணத்துறையில் இறங்கினல், அழகிய வாழ்க்கை இன்பத்தை இழக்க வேண்டுவது இராது. இக்குறை ஆண் பெண் இரு பாலரிடமும் இருக்கலாம். இக்குறையுள்ளவர்கள் இல்லறத் துறவிகளாக இருந்து மக்களுக்குத் தொண்டாற்றி அழியாத அந்தமில் இன்பத்தைத் தொண்டின் வழியாக அடையலாம். நான்காவதாகக் கூறப்பட்டுள்ள குணக்கேட்டுக் குறையே நம் நாட்டில் குடும்ப இன்பத்துக்குப் பெரும்பாலும் யமனுக இருக்கிறது. ஆணும் பெண்ணும் இக்குறையை அறிந்து தக்கவாறு நடந்துகொண்டால், நிச்சயமாகக் குடும்ப இன்பத்தைத் தடையின்றி அடைய முடியும். அமெரிக்க அறிஞர் டேல்கார்னீஜ் கூறும் வழிகளைக் காணுங்கள் :—

1. தொந்தரவு செய்யாதே.
2. குறைகாணுதே.
3. அன்புகொண்டு பேசு.

4. பாராட்ட வேண்டியிருந்தால் பாராட்டு.
5. சிறிய செயலிலும் அக்கறை காட்டு.
6. மரியாதையாக நடந்துகொள்.

இவையனைத்தும் குடும்ப இன்பத்தை அடைவதற்கு உயரிய இனிய பொன்மொழிகள். இவை பெண்களுக்கு மட்டுமல்ல; ஆண்களுக்கும் வேண்டியவை.

குடும்பத்தை இன்பமாக விளங்குமாறு செய்ய வல்லவர்கள் பெண்களே. மனைவியே மனைக்குத் தலைவி. இல்லாள் என்றால் மனைவியையே குறிக்கும். இல்லாளுக்கு ஆண்பால் இல்லை. இல்லான் என்றால் வறியவன் என்றே பொருள்படும். இல்லத்து அரசியாகச் சிறப்புப் பெற்றுள்ள இல்லாள் கணவனைத் தொந்தரவு செய்து கொண்டிருந்தால், இல்வாழ்க்கை இன்பம் காணவே முடியாது. மனைவிக்குக் கணவன்மேல் நம்பிக்கை வேண்டும்; கணவனுக்கும் மனைவிமேல் நம்பிக்கை வேண்டும். கணவன்மேல் மனைவி ஐயங்கொண்டு தொந்தரவு செய்தல் கூடாது. தன் கணவனது மனப் போக்கு அறிந்து அவன் தவறு செய்யினும், மனைவி அதைப் பெரிதாக்காது, அன்புடனிருந்து நச்சரிக்காது நடந்துகொண்டு அவனை அன்பு முறையால் திருத்த முயற்சி செய்யலாம். அன்பின் வழிப்படாதார் உலகில் யார் இருக்கின்றனர்?

ஓர் ஊரில் கற்ற கணவனும் படித்த மனைவியும் மணமுறிவு நிலைக்குவந்து மணவிலக்கு நாடி நின்றனர். சமாதானம் செய்யச் சென்றவர் குற்றங் குறைகளைக் கேட்கலானார். மனைவி சொன்ன குறைகள் கணவன் நாள்தோறும் நேரத்தில் வாராமையும் சிகரெட் பிடித்துத்

துண்டுகளை வீட்டு அறையில் எறிவதுமே ஆகும். கணவன் கூறிய குறையோ மனைவி தன்னை அடிமையாக நடத்த எண்ணியதாகும் என்பதே. இருவருக்கும் நற்புத்தி கூறியவர், அவர்களுக்குச் சிறியதைப் பெரியதாக்கக்கூடாது என்று சொல்லிச் சமாதானப்படுத்தினர். நேரம் கழித்து வந்தால் மனைவி தொந்தரவு செய்வது கூடாது; நல்வழியில் அறிவு கொளுத்தவேண்டும்.

இற்றைக்கு ஏறக்குறைய 75 ஆண்டுகளுக்கு முன்பு மூன்றும் நெப்போலியன் பிரான்சு நாட்டை ஆண்டு வந்தான். அவன் ஓர் அழகிய மாதை மணந்தான். அவர்களுக்குச் செல்வம், சுகம், அதிகாரம், புகழ், அழகு எல்லாம் இருந்தன. என்றாலும், அவனை மணந்து கொண்ட மாதரசி தன் நாயகன்மீது சந்தேகங்கொண்டு அவனைத் துன்புறுத்தி வந்தாள். நெப்போலியன், இதனால், மனைவியை வெறுத்து இரவு நேரத்தில் வெளியேறி வேறொருத்தியிடம் காலங் கழித்து வந்தானும். மாதரசியின் தொந்தரவால் இந்த நிலை ஏற்பட்டது.

டால்ஸ்டாய் உலகப்புகழ் பெற்ற ரஷ்ய நாட்டுப் பேரறிஞர்; காந்தியடிகளுக்குக் குருபோல விளங்கியவர். அப்பெருந்தகையார் தம் பெருஞ்செல்வத்தை ஏழைகளுக்குக் கொடுத்துவிட்டு வறுமையை விரும்பி மேற்கொண்டார். டால்ஸ்டாய் செல்வராக இருந்த வரைக்கும் நல்லவளாக இருந்த அவருடைய மனைவி, அவர் வறுமை ஏற்றதும், அவரை வெறுக்கத் தொடங்கி அவரது பெருந்தன்மையை அறிந்துகொள்ளாமலும், அவரது துறவு மனப்பான்மையை உணர்ந்து கொள்ளாதும், பல ஆண்டுகளாக அவரை வைதும், தொந்தரவு செய்தும்,

துன்புறுத்தியும் வந்தாள். 82-வது வயதில் டால்ஸ்டாய் அடிகளார், ஒரு நாள் அவள் செய்த தொந்தரவைப் பொறுக்க முடியாமல் வெளியேறிப்போய்ச் சளிக்காய்ச்சலால் ஒரு ரயில் நிலையத்தில் இறந்தார். அவர், இறந்த தறுவாயில், "என் மனைவி என்னைக் காணும்படி செய்யாதீர்கள்" என்று அங்கிருந்தவர்களை வேண்டிக்கொண்டாராம். மனைவியின் தொந்தரவு எத்தகைய வெறுப்பை உண்டாக்கிவிட்டது; பாருங்கள்!

ஆபிரகாம் லிங்கன் அமெரிக்கா நாட்டு ஜனாதிபதியாக இருந்தவர்; பெருநாவலராக விளங்கியவர். அவருடைய மனைவி அவருடைய நடை, உடை முதலியவற்றைக் குறைகூறிக்கொண்டு தொந்தரவு செய்துகொண்டிருந்தாள். அவருக்கு மூக்கு நேராக இல்லை என்றும், காது சரியாக இல்லை என்றுங்கூட அவள் கூறியதுண்டாம். அதனால், அவர் அவளை வெறுத்து வழக்கறிஞர் தொழிலால் வெளியூர்க்குச்செல்ல வாய்ப்புக் கிடைத்த போதெல்லாம், வேலை இருந்தால், வீட்டுக்கு மூன்று மாதங்களானாலும் திரும்பியதில்லையாம்.

மேற்குறித்த எடுத்துக்காட்டுகளால் என்ன அறிகிறோம்? மனைவிமார் நல்ல முறையில் நடந்தாற்றான் குடும்ப இன்பம் நிலைக்கும் என்பதைத் தெரிந்து கொள்கிறோம். நம்முடைய நாட்டுப் பெரியோர்களுடைய உண்மை வரலாறுகள் இல்லாததனால், அயல் நாட்டுப் பெரியோர்களுடைய உண்மை வரலாறுகளிலிருந்து எடுத்துக்காட்டுகள் கூறவேண்டியவர்களாயுள்ளோம்.

அன்பு காட்டினால் இல்வாழ்வு இன்பமாக இருக்கும். டிசரலி என்பவர் ஆங்கில நாட்டில் அமைச்சராக இருந்

தவர். அவர் முப்பத்தைந்தாவது வயதில் 50 வயதுடைய பெருஞ்செல்வமுள்ள சீமாட்டியை மணந்தார். என்ருலும், அவர் தம் மனைவியிடம் அன்பாக நடந்துவந்தாராம்; மனைவியின் குறைகளைக் கூறியதில்லையாம். அந்த அம்மையாருக்குக் குறைகள் இருந்தன. என்ருலும், டிசரலி நடந்துகொண்ட அன்பு முறையால் இருவர் வாழ்விலும் இன்பவொளி வீசிற்று. இருவரும் குடும்ப இன்பத்தில் திளைத்தனர்.

இங்கிலாந்தில் சிறந்து விளங்கிய மற்ருேர் அமைச்சர் கிளாட்ஸ்டன் என்பவர். அவர் வீட்டில் யாரிடத்திலும் குறை கூறுவதே இல்லையாம்; கதவு திறக்க நேரமாயினும் குறை கூறிச் சினந்துகொண்டதில்லையாம். நம்மவர்களுள் சிலர் ஒரு நாள் இரண்டு நாள் சோற்றைக் குழைத்துவிட்டாலும் வறுவலைக் கெடுத்துவிட்டாலும் சினந்துகொண்டு பானைகளை உடைப்பதைப் பார்க்கிருேம். கிளாட்ஸ்டனைப் போல் நம் நாட்டுக் கணவன்மார்களும் குறைகூருது பொறுமையை மேற்கொண்டால், ஏன் வீட்டின்பம் அடைய முடியாது? மோட்ச இன்பத்தை அல்ல; குடும்ப இன்பத்தை நன்கு அடையலாம்.

பெற்ருேர்கள் தங்களுடைய மக்களிடத்தில் குறை கண்டால், கடிந்துகொண்டே இராமல் அன்பு முறையில் குறைகளை எடுத்துக் காட்டி அவர்களைத் திருத்தவேண்டும். தடிகொண்டு அடித்தலும் தாம்புக்கயிறுகொண்டு அடித்தலும் அறிவுடைமையாகா. அங்ஙனம் அடிக்கப்பட்ட மக்கள் உருப்பட்டதே இல்லை.

மற்ருென்று கவனித்தற் குரியது. கணவன் மனைவியை எப்பொழுதும் பாராட்டவேண்டும். மனைவி துணி யுடுத்தலையோ நகை யணிந்திருத்தலையோ கணவன் கண்டு பாராட்டிப் பேசவேண்டுமே யன்றி, "உன் பாடை மூஞ்சிக்கு நகை ஒன்ரு? உனக்குப் பட்டுப் புடவை வேரு? துடைப்பக்கட்டைக்குப் பட்டுக் குஞ்சமா?" என்று வாழ்த்திஞல் குடும்ப இன்பம் இருக்குமா? இராது, இராது. "என் மனைவி சிக்கனமுடையவள்; கெட்டிக்காரி" என்று, உண்மையாக மனைவி அப்படி இருப்பாளாயின், கணவன் அவளைப் பாராட்டிப் பேசவும் வேண்டும்.

இன்ஞென்று கணவன்மார் தெரிந்துகொள்ள வேண்டுவது. மனைவிமார்களுக்கு அடிக்கடி கணவன்மார் பூ வாங்கிக் கொடுக்கவோ பழம் பலகாரங்கள் வாங்கிக் கொடுக்கவோ மறத்தலாகாது. எவ்வளவு வேலையிருந்தாலும்கணவன்மார் இச்சிறு செயல்களைச் செய்யாவிட்டால், வீட்டின்பம் காண முடியாது. கணவன்எந்த ஊருக்காவது எப்பொழுதாவது சென்ருல், அங்கிருந்து திரும்பி வரும்பொழுது, நேரமிருக்குமாயின், ஏதாவது வாங்கிவந்து கொடுத்தால், மனைவியும் மகிழ்வாள்; குழந்தைகளும் மகிழ்ச்சி கொள்வார்கள். எல்லார்க்கும் அன்பு ஏற்படும். இதைச் சிறு செயலென்று இகழ்தலாகாது.

' இறுதியாகத் தெரிந்துகொள்ளவேண்டுவது கணவனும் மனைவியும், நேர்மையாகவும் மரியாதையாகவும் நடந்துகொள்ள வேண்டும் என்பதே. கணவன் மனைவியை உதைப்பதும் மக்களை உதைப்பதுமாகவுள்ள

குடும்பத்தில் இன்பம் எப்படிக் காண முடியும்? சொன்ன்ல் சொன்னபடி செய்யாத கணவனிடம் மனைவிக்கு அன்பு ஏற்படுவது எங்ஙனம்? அப்படியேதான் சொன்னபடி செய்யாத மனைவியிடம் கணவனுக்கு அன்பு ஏற்படாது. தந்தையா யிருந்தாலும் வயதான மக்களிடம் மரியாதையாக நடக்கவேண்டும்; மனைவியிடமும் அங்ஙனமே நடத்தலும் வேண்டும். மனைவியும், "சரி! சாப்பாடு எடுத்துப் போட்டுக்கொண்டு சாப்பிட்டுப் போகவும்" என்று கணவனிடத்தில் அவமரியாதையாக நடந்து கொள்ளக்கூடாது; மரியாதையாக நடக்க வேண்டும்.

கணவன் மனைவியிடம் ஒருநாளும் சந்தேகம் கொள்ளுதல் கூடாது. சந்தேகம் வாழ்க்கை இன்பத்தைப் பாழ்படுத்திவிடும்.

கணவனும் மனைவியும் அன்பாகவும் மரியாதையாகவும் நேர்மையாகவும் நம்பிக்கையுடனும் நடந்து கொண்டால், இல்லற இன்பம் எப்படி இல்லாமற் போகும்? நிச்சயமாக இத்தகையோரிடம் இல்லற இன்பம் நிலைத்திருக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

காதல்

தமிழகத்தில் இன்று காதல் பருவமுற்ற இளைஞர்கள்,

"காதல் காதல், காதல்
காதல் போயிற் காதல் போயிற்
சாதல், சாதல், சாதல்"

என்று பாரதியார் குயிற்பாட்டில் கூறியதைச் சொல்லிக் காதல் கீதம் பாடுவதைக் கேட்கிறோம். வாழ்க்கையில் இன்றியமையாத காதலைப்பற்றி இளைஞர்களும்—ஏன்? முதியவர்களும்—ஆழ்ந்து தெரிந்துகொள்ள வேண்டுவது அவசியமாகும்.

வாழ்விலே இன்பம் அளிப்பது காதல். வாழ்வை வளமாக்குவது காதல். உலகத்தை ஆட்டி வைப்பதும் காதல். உலகத்தைப் பாலூட்டி வளர்ப்பதும் காதல். இன்ப வாழ்வுக்கும் காதலே காரணம்; துன்ப வாழ்வுக்கும் காதலே காரணம். தூய காதலாயின் இன்பம்

உண்டு. போலிக் காதலாயின் துன்பமே உண்டு. "காதலே இவ்வுலகத் தலைமை இன்பம்" என்றார் பாரதியார். "காதல் புசிக்கத் தோன்றும் பசி போன்றது. பசி தீர்ந்தால் புசிக்கும் ஆசை நீங்கும். ஆதலால், காதலால் செய்யப்படும் எந்தச் செயலும் ஒருவரைக் கட்டுப் படுத்தக் கூடாது" என்றார் பெர்னார்ட்ஷா. ஆனால், காதலின் வன்மை கணக்கில் அடங்காது. காதலுக்காகத் தியாகம் செய்தோரும் உண்டு, செய்வோரும் உண்டு. ஆங்கிலப் பேரரசை ஆண்ட எட்டாம் எட்வர்ட் மன்னர் அமெரிக்க மாதை, மணவிலக்குச் செய்த மங்கையை, காதல்கொண்டு மணக்க எண்ணினார். ஆங்கில நாட்டுச் சட்டம் அதற்கு இடம் கொடுக்கவில்லை. மன்னர்பிரான் காதலுக்காக முடிதுறந்து, மாண்புமிக்க ஆட்சி துறந்து, நாடு துறந்து, வேறு நாட்டில் போய் வாழ்ந்து வருகிறார். இத்தகைய வன்மை மிக்கது இனிய காதல்! காதல் தீக்கு முன்னே உயர்வு தாழ்வு இல்லை: சமயத் தடையும் இல்லை: எல்லாம் எரிந்துவிடும்.

காதல் இயற்கையானது; எல்லா உயிரினத்துக்கும் உள்ள இயல்பூக்கம். இது நாகரிக மக்களிடத்துமட்டும் இருப்பதல்ல; அநாகரிகர் என்று கருதப்படும் காடு வாழ் பழங்குடி மக்களிடத்தும் மலைவாழ் தொல்குடிமக்களிடத்தும் உண்டு. ஒரு நாட்டு மக்களுக்கு மட்டும் உரியதன்று இது. எல்லா நாட்டு மக்களிடத்தும் காணப்படுவது இது.

காதலிப்பது இளம் உள்ளங்களின் உரிமை. உடற்குறை இல்லாத எவரும், தொண்டு செய்யும் மனப்பான்மையுள்ள, உண்மைத் துறவிகள் நீங்கலான மற்ற

எவரும், காதல் வயப்படாமல் இருக்க முடியாது. பசி உலகத்தை ஆட்டிவைப்பதுபோலக் காதலும் உலகத்தை ஆட்டி வைக்கிறது.

இங்ஙனம் உலகையே இயக்கும் காதல் என்பது யாது என ஆராய வேண்டாமா? ஆம், ஆராய்வோம். ஆண் பெண் உலகினிலே அருமை இளமை உளத்தினிலே இன்பம் புசிக்க அரும்பும் ஆசையே காதலாகும். இரண்டு நிறைவில்லா மனிதர்களுக்கு ஒருவர் குறையை ஒருவர் நிறைவு செய்ய உள்ளத்தில் தோன்றும் இயற்கையான தவிப்புணர்ச்சியே காதல் என்றும் கூறலாம். சுருங்கச் சொன்னல் மனமும் மனமும் பொருந்துதலே அருமைக் காதலாகும் எனலாம்.

நட்பு எவ்வாறு ஏற்படுகிறதோ அவ்வாறு காதலும் தோன்றுகிறது. ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் பலமுறை காண்பதாலும் பழகுவதாலும் வியப்பதாலும் இளமை உள்ளங்களில் காதல் அரும்புகிறது. ஒருவர் மற்ெருருவரோடு பேச வேண்டுவதில்லை. பேசாமலே கண் பார்வையாலே காதல் தோன்றிவிடும். இதனை லன்றே வள்ளுவரும்,

"கண்ணேடுகண் இணை நோக்(கு) ஒக்கின் வாய்ச்
என்ன பயனும் இல" [சொற்கள்

என்ருர்? "கண் களவு கொள்ளும் சிறு நோக்கம்" காதலில் செம்பாகம் அன்று; பெரிது. இளமைக் கவர்ச்சியாலும் அறிவுக் கவர்ச்சியாலும் திறமைக் கவர்ச்சியாலும் அழகுக் கவர்ச்சியாலும் காதல் அரும்புவது இயற்கை. முதலில் உடற் கவர்ச்சியாலேதான் காதல் தோன்றுகிறது. பின்னர் உள்ளக் கவர்ச்சியாலே அது வளர்

கிறது. உள்ளக் கவர்ச்சியாலே உற்றிடும் காதலே உடையாது நிற்கும்.

ஒரு சிலர் முதலில் தோன்றும் காதலே உண்மைக் காதல் என்பர். இக் காதலைக் 'கண்டதும் கொள்ளும் காதல்' என்று ஆங்கில இலக்கியம் பாராட்டுகிறது. 'கண்டதும் கொள்ளும் காதல்' பெரும்பாலும் கடை முறையும் காண்பதில்லை. கண்டதும் கொள்ளும் முதற் காதல் சிலரிடம் விண்டு போகிறது. இக்காதல், உணர்ச்சியால் எழுகிறது. புயலில் இரு படகுகள் சந்திப்பது போன்றது இக்காதல்.

கண்டதும் கொள்ளும் முதற் காதல் உண்மைக் காதலிலிருந்து வேறுபட்டது. அழகுதான் முதற் காதலின் உயிராக இருக்கும். ஆனல், இன்ப வாழ்க்கையை மலர்விக்கும் காதலோ, வெறும்வனப்பினுல் மட்டும் விளைவதில்லை. பழகப் பழகத் தொடங்கும்போது முதற் காதல் முள்ளாக மாறினும் மாறும். வீடோ ஓட்டை வீடு. வண்ணப்பூச்சினுல் அது வனப்புறத் தோன்றுகிறது. வண்ணப் பூச்சைக் கண்டு விண்டுபோன ஓட்டை வீட்டில் குடிபோக முடியுமா? உயிருக்கே ஆபத்து வந்து விடாதோ? அது போலப் பழகாமல் முதற் காதலாலே மணந்து வாழத் தொடங்குவதும் ஆகும்.

'கண்டதும் கொள்ளும் காதல்', வாழ்க்கையிலே புயல் அடிப்பது போன்றது. புயல் அடிக்கும் நேரத்தில் ஒருவர் மற்ருருவர் உதவியை நாடுவது இயல்பு. புயல் நின்று விடின், தேடிய துணை வேண்டாது போகும். அது போன்றே முதற்காதலுமாகிறது. ஆதலால், முதற் காதலில் முற்றும் நம்பிக்கை வைத்தல் இதமானதாய் இராது.

உயர்ந்த காதலுக்கு, உண்மையான காதலுக்கு, முறியாது விளங்கக்கூடிய காதலுக்கு நீண்டகாலம் வேண்டும். காதலர் இருவரும் ஒருவரோடு ஒருவர் பழகி ஒருவரது குறைவு நிறைவுகளையும், குணக் கோளாறு களையும், விருப்புவெறுப்புகளையும் நன்கு தெரிந்து கொள்ளவேண்டும். உணர்ச்சியினால் ஒன்றுபடும்காதல், உணர்ச்சி நீங்கியதும் உதிர்ந்து விடும். காதலர்கள் உடல் இன்பத்தை ஒதுக்கி விட்டு உள்ளத்தோடு உறவு கொள்ளவேண்டும். 'மோகம் முப்பது நாள்; ஆசை அறுபது நாள்'. தொண்ணூறுவது நாள் மோக மும் ஆசையும் முடிந்து விடுமானால், காதலும் மடிந்து விடும். ஆதலால், ஒருவரை ஒருவர் நன்கு பழகித் தெரிந்து கொண்ட பின்னரும், "நாங்கள் எங்கள் இன்ப வாழ்விற்குப் பிரிந்து வாழ முடியாது; ஒன்றுபடவே வேண்டும்" என்னும் முடிவுக்கு வந்து இணைந்து விட் டால், காதல் முறியாது நீடித்து நிற்கும். முறியாத காத லுக்கு மூன்று மாதங்கள் போதா; மூன்று ஆண்டுகளா வது வேண்டும். காந்தியடிகளும் உண்மைக் காதலை உணர மூன்று ஆண்டுகள் தம்மகனுக்கு வற்புறுத்தினார். மேலை நாடுகளில் அவசரக் காதலால் ஆயிரக்கணக்கான காதலர்கள் அவசர மணவிலக்கு நாடி அகன்று போகி றார்கள்.

ஒருவனும் ஒருத்தியும் இணைவதுதான் உண்மைக் காதல். ஒருவன் ஒருத்தியைக் காதலித்த பின்னர் மற் றொருத்திமீது காதல் கொள்வது காதலாகாது. பரத் தையை நாடிச் செல்லினும் அது சிறந்த காதலாகாது. மனைவி இறந்தபின் மற்றொருத்தி மீது காதல் கொள்வது தவறாகாது. அங்ஙனமே கணவனை இழந்தவள் மற்

ெருருவன் மேல்காதல் கொள்வதும் தவருகாது. ஒருத்தி ஒருவனைக் காதலித்த பின்பு மற்ருருவன் மேல் அன்பு கொள்வது உண்மைக் காதலாகாது. வேண்டும்போது காதலித்து, வேண்டாதபோது விட்டுச் சென்று வேருரு வரைக் காதலிக்கும் 'விடுதலைக் காதல்' விரும்பத்தக்க காதல் என்று விளம்ப முடியாது.

மணிவாசகப் பெருமான் உண்மைக் காதலைக் குறித்துத் திருக்கோவையாரில் உணர்த்தியிருப்பதைக் காண்க. உண்மைக் காதலால் கட்டுண்ட காதலர் இரு வர், மணந்து கொள்ளப் பெற்ருேர் அனுமதி பெருமை யால், வேறிடம் சென்று மணந்து வாழ வீட்டை விட்டு வெளியேறினர். இதனை உடன்போக்கு என்பர் அகத் திணை நூலார். வளர்த்த தாயாகிய செவிலித்தாய் வெளி யேறிய பெண்ணைத் தேடிச் சென்ருள்; வழியில் காத லர் இருவரைக் கண்டாள்; தன் மகள்தான் உடன் போவதாக எண்ணினுள்; அவர்களருகில் அணுகினுள். அவள், அவர்கள் வேருக இருப்பதைக் கண்டு தலை மகனை நோக்கி, "ஐயனே, உங்களைக் கண்டு என்னுல் தேடப்படுகிறவர்கள் மீண்டார்கள் என்று கருதி மகிழ்ந் தேன். அது கிடக்கட்டும். இவ்வாறு உங்களோடு ஒத்த ஒழுக்கத்தினராய் முன்னே இருவர் போகக் கண் டீரோ?" என்று வினவினுள். தலைமகனுகிய காதலன், "தாயே, ஆளியன்னுனைக் கண்டேன்" என்று கூறிவிட் டுப் பக்கத்திலிருந்த காதலியை நோக்கி, "தூண்டா விளக்கனைய தலைவியே, அன்னை கூறியவாறு என்ன? அதனை அன்னைக்குக் கூறுவாயாக" என்ருன். அவன் ஆண்மகனை மட்டும் கண்டானும்; பெண்மகளைக் காண வில்லையாம்; ஆதலால், தன் மனைவி கண்டிருந்தால்,

அவளைக் கூறுமாறு வேண்டினான். தலைவி என்ன கூறி யிருப்பாள்? அவளும், "நான் பெண்ணை மட்டும் கண் டேன்" என்றுதான் கூறியிருப்பாள்.

அந்த அழகிய பாட்டைப் பாருங்கள் :

"மீண்டார் என உவந்தேன் கண்டு
நும்மை; இம்மேதகவே
பூண்டார் இருவர் முன்போயினரே ?
புலியூர் எனை நின்(று)
ஆண்டான் அருவரை ஆளி அன்
னானைக் கண்டேன், அயலே
தூண்டா விளக்(கு) அனையாய் என்னையோ
அன்னை சொல்லியதே ?"

தலைமகன் காதலியைத் தவிர வேறு பெண்ணைக் காணவில்லை. தலைமகள் தன் நாயகனைத் தவிர வேறோர் ஆண்மகனைப் பார்க்கவில்லை. ஒருவர் உள்ளத் தில் ஒருவர் மாறிக் கோயில்கொண்டிருந்தனர். இது தான் உண்மைக் காதல்; இதுதான் உயர்ந்த காதல். இதனையே மணிவாசகனார் திருக்கோவையாரில் இனி தாக இயம்பியுள்ளார்.

இத்தகைய காதலுக்குத் தமிழிலக்கியத்தில் இராம பிரானையும் சீதாபிராட்டியையுமே சான்றாகக் கூறலாம்; வேறெவரையும் கூறுதற்கில்லை. "இந்த இப்பிறவியில் வேறொரு மாதரைச் சிந்தையாலும் தொடேன்" என்ற செவ்வரம் தந்த பெருமான் இராமபிரான். "ஈண்டு நானிருந்து இன்னுயிர் மாயினும் மீண்டும் வந்து பிறந்து தன் மேனியைத் தீண்டலாவதோர் தீவினை தீர்வரம்" வேண்டியவள் சீதாபிராட்டி. முன்னரே இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தினர்; பின்னரும் உண்மைக்

காதலுடனே பொருந்தினர். ஆனால், வாழ்வின் பிற் காலத்தில், இராமர் தவறு செய்து விட்டார் என்றுதான் கூறவேண்டும்.

பண்டைத் தமிழிலக்கியத்திலும் பிற்காலத் தமிழ்க் காப்பியங்களிலும் உயர்ந்த காதல் பெண்ணிடத்தே காணப்படுவதே அல்லாது ஆணிடத்தில் காணக்கிடப்ப தில்லை. பின் வந்த சீவக சிந்தாமணியிலும் காந்தரு வதத்தை, குணமாலை, பதுமை, கேமசரி, கனகமாலை, விமலை, சுரமஞ்சரி, இலக்கணை ஆகிய இத்தனை பேர்களை யும் சீவகன் காதலித்து மணந்ததாகப் பார்க்கிறோம். சீவகனது காதல் உயர்ந்த காதலுமல்ல; உண்மைக் காதலுமல்ல. அதனை அரசியல் முறைக் காதல் எனலாம். இக்குறை தமிழ்நாட்டில் மட்டுமன்றிக் கீழ் நாடுகள் முழுதும் இருந்தது.

இந்த இருளிலே உண்மைக் காதல் ஒளியைச் சங்க காலப் பூதப் பாண்டியனிடமும் சோழன் நலங்கிள்ளி யிடமும் கண்டு வியப்படைகிறோம். இவ்வுண்மையை அம்மன்னர்களுடைய சூளுரைகளில் காணலாம். பூதப்பாண்டியன், "என் பகைவர்களைப் புறங்கொடுத்து ஓடுமாறு செய்யேனாயின் என் மனைவியை விட்டு நீங்கினவனாக" என்றான். சோழன் நலங்கிள்ளியோ, "என் பகைவர் வருந்துமாறு போர் புரியேனாயின் காதல் கொள்ளாத பொதுமகளிரொடு வாழ்ந்தவனாவேனாக" என்றான். அம் மன்னர்கள் புகழ் தமிழ்நாட்டிலே நீடு வாழ்க! அவர்கள் நமக்கு என்றும் வழிகாட்டு வார்களாக!

சங்க காலத் தமிழகத்தில் நிகழ்ந்த காதல் மணமானது ஒத்த குணனும் ஒத்த குலனும் உள்ளவர்களிடமே நடைபெற்றது. கந்தருவ மணத்தோடு களவு மணத்தை ஒப்பிட்டுக் கூற வந்த நக்கீரர் தமது இறையனூர் அகப்பொருளுரையில், "இங்கும் ஏகதேசத்துக் கொடுப்பாரும் அடுப்பாரும் இன்றிப் புணர்தலும், ஒத்த குலத்தினராகலும் ஒத்த அன்பினராகலும் என்னும் இத் துணையே ஒப்பிக்கப்பட்டது; மற்றப்புடையெல்லாம் ஒவ்வா" என்று கூறியுள்ளதால், இவ்வுண்மை புலனுகிறது. கோவலன் கண்ணகி மணம், காதலின்றி நிகழ்ந்த மணமே யாகும்.

காதல் புரிவது எல்லாருக்கும் எளிதல்ல. சிலரால் காதலிப்பது முடியாது. காதல், மலர்போல் மெல்லியது; கசந்து மோந்தால் கெட்டுவிடும். காதலில் சந்தேகம் நுழையலாகாது; நம்பிக்கையே வேண்டுவது. நேர்மை, திறமை, தியாகம், விட்டுக்கொடுத்தலாகிய பண்புகளுடைய ஆண் பெண்களே மாண்புமிக்க காதலில் வெற்றுபெறுவார்கள்; இவையற்ற மற்றவர்கள் தோல்வியே யுறுவார்கள்.

தமிழ்நாட்டில் சாதிப் பாகுபாடு இருக்கும் வரைக்கும் காதல் மணம் பெருகுவது அருமையேயாகும். இளைஞர்கள் ஓரினத்துக்குள்ளே காதல் மணம் செய்து கொண்டால் இன்னலுக்கு ஆளாகமாட்டார்கள்; வேறு இனத்திலே காதல் மணம்புரியும்போது சொல்லொணுத் தொல்லைக்குள்ளாகிறுர்கள். இவர்களுக்குப் பிறக்கும் பெண்களுக்குக் கணவர்களைத் தேடுவதில் எல்லையில்லாத் தொல்லை ஏற்படுகிறது. மிகுந்த செல்வமும் கல்வி

யும் இருந்துவிட்டால் இவர்களிடம் எந்த இன்னலும் எட்டிப்பார்க்க முடியாது. பணமும் படிப்பும் இல்லாத வர்களிடம் இந்தத் தொல்லை வந்துவிடுகிறது. வீரம் மிக்க இளைஞர்கள், எந்தத் தொல்லையும் ஏற்க உறுதி கொண்ட இளைஞர்கள், காதல்மணத்துறையில் கால் வைத்தால், உண்மையான இன்பக்காதலை அள்ளி நுகர முடியும்; மற்றவர்கள் உண்மைக்காதல் இன் பத்தை நுகர்வது அரிது.

காவியத்தில் காணும் காதலும் திரைப்பட ஓவியத் தில் காணும் காதலும் நடைமுறைக்காதலிலிருந்து வேறுபட்டவை. "காதல் காதல், காதல்; காதல் போயிற் காதல் போயிற் சாதல், சாதல், சாதல்" என்பது வாழ் வைப் பாழாக்கும் கருத்து. காதலில் தோல்வியுற்ருல் இளைஞர்கள் கவலைப்பட்டு மடிய வேண்டுவதில்லை. காதலிழப்பால் எவரும் வாழ்வைப் பாழ்படுத்தலாகாது. வாழ்வுக்குக் காதலா? காதலுக்கு வாழ்வா? கூறுங்கள்.

இன்றைய மணவாழ்வு

ஒருவரது இன்பத்திற்கும் துன்பத்திற்கும் காரண மாயிருப்பது அவரது மணவாழ்வு என்பதில் ஐயமில்லை. ஒத்த கணவனும் மனைவியுமாக மணவாழ்வில் இணைந்து விடின், இருவர் வாழ்வும் இன்ப வாழ்வாகும். இருவருள் ஒருவர் ஏறுமாருக இருப்பின், வாழ்வு சிதைந்துபோகும்.

ஒருவனும் ஒருத்தியும் காதல் செய்து, பின்பு மணம் செய்துகொண்டால், அவர்களது மணவாழ்வு இன்ப வாழ்வாக இருக்கும் என்பது நாட்டில் இளைஞர்களிடம் பொதுவாக வழங்கிவரும் கருத்து. நல்ல முறையில் ஒருவரை ஒருவர் நன்கு அறிந்து, குறைவு நிறைவு களை உணர்ந்து, காதல்கொண்டு, மணஞ்செய்து வாழ்வு நடத்திஞல், உண்மையில் அவர்களுடைய வாழ்வு இன்பவாழ்வாகவே இருக்கும். காதல் என்னும் பெயரால் ‘கண்டதே காதல், கொண்டதே மணம்’ என்று விரைந்து மணவாழ்வில் புகுந்தவர்களுடைய

வாழ்வு இன்பமாக இல்லாது துன்பமாகப் பெரும் பாலும் மாறுவதைக் காண்கிறோம். காதல் வாழ் வுள்ள மேலை நாட்டில் காதலித்து விரைந்து மணந்தவர் கள், காதல் முறிந்து வேதனைப்பட்டு மணமுறிவு நாடி, வழக்கு மன்றங்களைத் தேடிச் சென்று மண விலக்குப் பெறுவது கணக்கில் அடங்காது. காரணம் என்ன? காதலர்கள் போதுமான அறிவும் திறமையும் இன்றி விரைந்துமணவாழ்வில் புகுந்து விடுவதேயாகும். அதே மேலை நாட்டில், பெற்றோர்கள்வழிகாட்டும் மணவாழ்க்கை யில் நுழைந்தவர்கள் மணவிலக்கு நாடாது, இன்பமாக வாழ்வதையும் காண்கிறோம். அதே மேல் நாட்டில் பெற்றோர்களே தங்களுடைய மக்களின் விருப்பப்படி முன்னின்று மணம் முடித்தும் வைக்கிறார்கள்.

நம் தண்டமிழ் நாட்டில் இந் நாளில் பெற்றோர்களே மக்களுக்கு மணம்செய்து வைப்பதைப் பல்லாயிரக் கணக்கான குடும்பங்களில் சாதாரணமாகப்பார்க்கலாம். முற்காலத்தில் பெண்ணைத் தேட ஏழு செருப்பாவது தேய வேண்டும் என்றார்கள். அறப்பளீசுர சதகத் தில் மனையாட்டி எத்தகையவளாக இருக்க வேண்டும் என்பது கூறப்பட்டுள்ளது. அப் பாட்டு பின்வருமாறு:

கணவனுக்கு இனியளாய் ம்ருது பாஷியாய் மிக்க
கமலைநிகர் ரூபவதியாய்க்
காய்சினம் இலாளுமாய் நோய்பழி இலாததோர்
கால்வழியில் வந்தவளுமாய்
மணமிக்க நாணம்மடம் அச்சம் பயிர்ப்பு என்ன
வரும் இனிய மார்க்கவதியாய்
மாமிமார்க்கு இதம் செய்பவளுமாய் வாசல்
வருவிருந்து ஓம்புபவளாய்

இணையின்மகிழ்நன் சொல்வழி நிற்பவளுமாய் வந்தி
எனப்பெயர் இலாதவளுமாய்
இரதி எனவேலீலை புரிபவளுமாய்ப் பிறர்தம்
இல்வழி செலாதவளுமாய்
அணியிழை ஒருத்தி உண்டாயின் அவள்கற்புடைய
ளாகும்; எமது அருமை மதவேள்
அனுதினமும் மனதில் நினைதரு சதுரகிரிவளர்
அறப்பளீசுரதேவனே.

இப் பாட்டில் கூறியவாறு பெண்ணைத் தேடுவதற்கு ஏழு செருப்புகளும் தேயும்; அவைகட்கு மேலும் தேயும். அப்படியே பெண் வீட்டாரும் மாப்பிள்ளையையும் ஆராய்ந்து பார்ப்பர். இங்ஙனம் பெற்றோர்கள் தேடித் தேடிச் செய்த மணங்களால் முற்காலத்தில் நம்மவர்கள் இன்பமாகப் பெரும்பாலும் வாழ்ந்தார்கள் என்றே கூறலாம்.

முற்காலத்தில் தக்க வயது வந்தவர்களுக்கு மணம் நடந்தது. பெண்ணுக்கு 12 வயதிலும் ஆணுக்கு 16 வயதிலும் மணம் நடந்ததாக நூல்கள் கூறுவது கற்பனை. அப்படி நடந்திருந்தாலும் தவறென்றே கூறவேண்டும். பிற்காலத்திலும் 12 வயதுப்பெண்களுக்கு மணம் நடந்தது. இதனால், குழந்தை விதவைகள் பல்லாயிரக் கணக்காக இந் நாட்டில் குவிந்து கிடந்தார்கள். சாரதா சட்டம் வந்தபின் நிலைமாறிவிட்டது எனலாம். சின்னஞ் சிறு வயதில், பால் மணம் மாருப்பருவத்தில், ஆடி ஓடி ஆனந்தமாக விளையாடும் வயதில் பெண் குழந்தைக்கு மணம் செய்துவைக்கும் கொடுமை இன்னும் இருக்குமானால் அக்கொடுமையை ஒழிக்கவேண்டும்.

இக் காலத்தில் பெண் வீட்டார் பெண்ணைக் கேட்காமலும் பிள்ளை வீட்டார் பிள்ளையைக் கேட்

காமலும், பணம், ஒன்றையே கருதி, மணம் முடித்து வைக்கிறார்கள். பணம் முன் நிற்கிறது. இவர்களுக்கு மணமக்கள் எப்படிப் போயினும் கவலை இல்லை. சாதகம் வேறு வந்து தொல்லை தருகிறது. அறிவுள்ள குடும்பங்களில் சாதகத்துக்கு அதிகமாக வேலை ஏற்படுவதில்லை. "ஆயிரம் பொய் சொல்லியாவது ஒரு விளக்கு ஏற்றிவிட வேண்டும்" என்னும் தவறான பழமொழி வேறு நாட்டில் வழங்குகிறது. பொய் சொல்லி ஏற்றும் விளக்கு மெய்யாக அணைந்தே போகும். இப்படிச் செய்யும் மணங்கள் எப்படி நன்றாக இருக்கும்? இத்தகைய மணங்கள் நற்பயன் அளிப்பதில்லை. வரதட்சிணை என்னும் கொடிய வழக்கம் இன்ப மனைவாழ்வைப் பிளக்கும் வாளாக அமைகிறது. படித்த ஆண்களே, வரதட்சிணையில் குறைவு கண்டு மணந்த மனைவியைத் துரத்திவிடக் கண்டிருக்கிறேன். சில இனத்தவரிடம் மாப்பிள்ளையின் படிப்புக்கும் நிலைக்கும் தக்கவாறு பணம் கொடுத்துப் பெண்ணுக்கு மாப்பிள்ளையாக்கும் மிகக்கொடிய வழக்கம் இருந்து வருகிறது. ஒரு குடும்பத்தில் மணமகனுக்கு 1000 ரூபாய் கொடுப்பதாகச் சொல்ல, மணம் நடந்தது. பெண்ணின் தந்தையார் 500 ரூபாய் கொடுத்தார். மணமகனோ மற்ற 500 ரூபாயும் பெற்றுவருமாறு மணமகளைத் துன்புறுத்தினான். கற்ற தந்தையார் மகனிடத்தில் பணத்தைக் குறித்துப் பெண்ணைத் துன்புறுத்த வேண்டாம் என்றார். அக் குடும்பத்தில் அமைதி நிலவியது. இன்று அவர்கள் எட்டுக் குழந்தைகளுக்குப் பெற்றோர்களாய் இன்பமாக வாழ்கிறார்கள். சொன்ன பணத்தைக் கொடாததால் மனைவிமாரைக் கைவிட்ட கணவன்மார்களும் உண்டு.

இத்தகைய கொடுமைகளால் சிலரது மணவாழ்வில் இன்றைக்குச் சங்கடங்கள் தோன்றுகின்றன. பெரும் பாலானவர்கள் ஏறக்குறைய நம் நாட்டில் அன்பாகவே வாழ்கிறார்கள் என்று சொன்னால் மிகையாகாது. அன்று மக்கள், காதல் செய்து மணந்து வாழ்ந்தார்கள்; இன்று மணந்து கொண்டு காதல் செய்து வாழ்கிறார்கள்; இது தான் வேறுபாடு. இளைஞர்கள், “இன்றைய மணவாழ்வு பிணவாழ்வு. காதல் இல்லாத வாழ்வு கசந்த வாழ்வு” என்று கூறுகிறார்கள். அனுபவம் இல்லாமையால் கூறு வது அது. நம்முடைய பெற்றோர்கள், தமக்கை, தங்கை இவர்கள் வாழ்வைச் சிந்தித்துப் பாருங்கள். என்ன குறை காண்கிறீர்கள்? சொல்லுங்கள்! காதல் வாழ்வுதானே வேண்டும். அக் காதல் வாழ்வு மணந்த பின் காணப்படுகிறது. ஒரு சிலர் வாழ்வில் மாறுபாடு காணலாம். இம் மாறுபாடுகளும் தொல்லைகளும் காத லித்து மணந்தவர்களிடமும் காணுமலில்லை.

இன்றைய மணவாழ்வில் செய்யப்பட வேண்டிய சீர்திருத்தங்கள் சில உள. அவை வருமாறு:

1. சாதகம் பார்ப்பதால் நன்மை ஏற்படாது. பொய்ச்சாதகம் கொடுப்பவர்களும் உண்டு. மணப் பொருத்தம் பார்ப்பதைக் காட்டிலும் குணப்பொருத்தம் காண்பதுதான் வேண்டுவது.

2. பணம் முதன்மையாகக் கருதும் கொடுமை ஒழிய வேண்டும். பணம் கொடுத்தால் பெற்றுக்கொள் ளட்டும். குணமிருந்தால் பணத்தையே வற்புறுத்த வேண்டுவதில்லை. பணத்தை முதன்மையாக்கி வாழ் வைப் பாழாக்க வேண்டாம்.

3. ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் பார்க்கட்டும். அவர்களுடைய விருப்பத்தைப் பெற்ருேர் கேட்டு மணத்தை முடிக்க வேண்டும். இதில் சிக்கல் ஏற்படலாம். வந்து கேட்பவர்களுக்கு எல்லாம் பெண்ணைப் பார்க்கவிடவேண்டுவதில்லை. ஓரளவு முடிவுக்கு வந்த பின்னரே மாப்பிள்ளைக்குப் பெண்ணைக் காட்டலாம். இன்று மாப்பிள்ளை பெண்ணைப் பார்ப்பதும், பெண் மாப்பிள்ளையைப் பார்ப்பதும் நடந்து வருகின்றன.

காதல் மணம் செய்துகொள்பவர்கள் செய்துகொள்ளட்டும். வரவேற்கிருேம், பாராட்டுகிருேம், வாழ்த்துகிருேம். சாதாரணமான மணம் செய்துகொள்பவர்கள் பணத்தைமட்டும் பாராமல் குணத்தையும் ஒழுக்கத்தையும் எண்ணியாராய்ந்து காணவேண்டும்.

எட்டுவகை மணங்கள் தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் கூறப்படுகின்றன. அவை பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், அசுரம், இராக்கதம், பைசாசம் என்பவை. பிரமமாவது கன்னியை அணிகலன் அணிந்து பிரமசாரியாய் இருப்பான் ஒருவனுக்குத் தானமாகக் கொடுப்பது. பிரசாபத்தியமாவது மகள் கோடற்குரிய கோத்திரத்தார், மகள் வேண்டியவழி, பெற்ருேர் இசைந்து கொடுப்பது. ஆரிடமாவது ஒன்ருனும் இரண்டானும் ஆவும் ஆனேறும் வாங்கிக்கொடுப்பது: பொருள் கொடுத்துக் கொடுப்பது. தெய்வமாவது வேள்வி செய்யும் ஆசிரியர்க்கு வேள்வித்தீ முன் பெண்ணைக் கொடுப்பது. காந்தருவமாவது ஒத்த இருவர் தாமே கூடும் கூட்டம். அசுரமாவது திறமைகாட்டி மணப்பது. இராக்கதமாவது பெண்ணை வலிந்து கொள்வது. பைசாசம் என்பது களித்தாள்

மாட்டும் துயின்றுள் மாட்டும் வயதில் மூத்தாள் மாட்டும் கூடுவது. இவை ஆரியநாட்டு மணவகைகள். நம் நாட்டில் நிகழும் இன்றைய மணம் பிரசாபத்தியம் என்னும் வகையைச் சேர்ந்தது.

நம்நாட்டில் பெரும்பாலும் ஒருவன் ஒருத்தியையே மணந்தான். இந்த நல்ல வழக்கத்தைச் சங்க நூல்களில் காண்கிறோம். இது தமிழர் வழக்கம். மனைவியர் பலரை மணப்பது ஆரியரால் இந் நாட்டில் பரவியது போலும். இவ்வழக்கம் பிற்காலத்தில் தோன்றியது. சுந்தரர் இரு மனைவியரை மணந்தார். சீவகன் எட்டு மனைவிமார்களை மணந்ததாகச் சைன காப்பியமாகிய சீவக சிந்தாமணி கூறுகிறது. பண்டைத் தமிழன் மணமே தலைசிறந்தது. இன்று சென்னை மாநிலத்தில் ஒருத்தியை மணந்துகொண்டவன் மற்றொருத்தியை மணக்கக்கூடாது. ஒருவன் ஒருமுறை மணந்து அவளைக் கைவிட்டு மற்றொருத்தியை மணந்தால் தண்டனைக்குள்ளாவான். ஒருவனும் ஒருத்தியுமாக வாழும் மணமுறையே ஒழுங்கானது.

இன்றைய மணவாழ்வில் மிகுந்த குறைஉண்டு என்று சொல்வது முடியாது. மேலை நாட்டினரும் நம் நாட்டில் நிகழும் இன்றைய மணவாழ்வைப் புகழ்ந்து போற்றிப் பாராட்டுகின்றனர். ஆனால், பெற்றோர்கள் இன்று மணப் பொருத்தம் பார்ப்பதைவிடக் குணப்பொருத்தம் கண்டு பணத்தையே முதன்மையாகக் கருதாது இத முறத் திருமணத்தை நடத்தி வைத்தால், இன்றைய மண வாழ்வு இன்னும் சிறப்புற விளங்கும் என்று கூறுவது நன்று என்று கூறலாம்.

THE MADURAI TAMIL SANGAM

மன்பதையில் மாதர்க்குரிய இடம்

மன்பதை (சமுதாய) வாழ்வுக்குக் காரணமாயிருப்பவர் மாதரே. மக்களுக்கு வாழ்வளிப்பவரும் மாதரே. நாட்டின் உயர்வுக்கும் வீட்டின் மேன்மைக்கும் காரணமாயிருப்பவரும் மாதரே. மாதரின்றி வையக வாழ்வே இல்லை. மேலை நாட்டு அறிஞர் ஒருவர், "பெண்களே இம் மண்ணுலகத்தில் நாம் பிறப்பதற்கும் அதற்குப்பின் வாழ்வைப் பயனுள்ள வாழ்வாகச் செய்வதற்கும் காரணமாயிருப்பதால், கடவுளுக்கு அடுத்தபடியாக அவர்களுக்கு மிகவும் கடமைப் பட்டுள்ளோம்" என்றார். கடவுள் தன்மை வாய்ந்த மடவார் பிறப்பே காசினியில் மிகச் சிறந்த பிறப்பென ஷெல்லி என்ற கவிஞர் பாடினார். ஹார்கிரேவ் என்பார், "மாதரே இவ்வுலகத்தின் இனிய கீதம்; அவர்களே இவ்வுலகை ஆள்கிறார்கள்"

என்ருர். ஆட்வே என்பார், "பெண்ணே! ஆணைப் பண் படுத்தவே மண்ணிலே இயற்கையன்னை உன்னைப் படைத்தாள். நீ இல்லையென்ருல் ஆண்களாகிய நாங்கள் கொடிய விலங்குகளாகவே இருந்திருப்போம்'' என்ருர். "சமுதாயத்தினர் எதிர்காலம் மாதரிடத்திற்ருன் உண்டு'' என்ருர் போபர்ட் என்ற அறிஞர். நம் வள்ளு வரும்,

> "பெண்ணின் பெருந்தக்க யாவுளகற்பென்னும்
> திண்மை உண்டாகப் பெறின் ?''

என்ருர். உண்மையில் பெண் பிறப்பு உயர்ந்த பிறப்பே. பெண்ணினும் சிறந்த பிறவி மண்ணிலே இல்லை.

'ஆண் உயர்ந்தவன்; பெண் தாழ்ந்தவள்' என்பதில்லை. ஆணுக்கு இல்லாத தன்மைகள் பல பெண்ணுக்கு உண்டு. பெண்ணுக்கு இல்லாத தன்மைகள் பல ஆணுக்கு உண்டு. ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழும் வாழ்வே சிறந்த இன்ப வாழ்வு. மாதர் தம்மை இழிவு செய்யும் மடமை இன்று இல்லை.

ஆனல், உலகம் முழுதும் மிக நெடுங்காலத்துக்கு முன்னே மக்கள் பெண்களை இழிவாகவே கருதினர்கள். பெண்களுக்குள்ள மென்மைத் தன்மையால் அவ்வாறு பெண்கள் கருதப்பட்டார்கள். வடமொழி வாணர்களும் அறம் பொருள் இன்பம் வீடாகிய நான்கையும் புருஷார்த்தம் என்றே கூறினர்கள். புருஷர் அடையும் உறுதிப் பொருளே புருஷார்த்தம். பெண்கள் தங்கள் கணவன்மார் வாயிலாகவே அவற்றை அடையவேண்டும் என்பதே அவர்கள் கருதியது. அரிஸ்டாட்டில் என்பார், இயற்கையாகவே ஆண்கள் பெண்களைக் காட்டிலும்

உயர்ந்தவர்கள் என்றும், ஆண்களே ஆளத்தக்கவர்கள் என்றும், பெண்கள் ஆளப்படுதற்குரியவர்கள் என்றும் கருதினர். நம் நாட்டிலும் முன்னோர்கள் மணமாவதற்கு முன் தந்தைக்கும், மணமான பின் கணவனுக்கும், விதவையானால் மகனுக்கும் பெண் கட்டுப்பட்டிருத்தல் வேண்டும் என வற்புறுத்தி வந்தார்கள். தொடக்கத்தில் கிறித்தவ சமயத்தில் 'பாவத்துக்கு வழியானவர் பாவையரே' என்னும் கருத்து இருந்து வந்தது. பிற் காலத்தில் அக்கருத்து மாறிவிட்டது.

தண்டமிழ் நாட்டில் பிற்காலத்தில் பெண்களைப் பற்றி இழிவான கருத்து வழங்கிவந்தது. முற்காலத்தில் சங்க கால நூல்களில் அத்தகைய கருத்து இருந்ததில்லை. இக் காலத்தில் பாரினில் அமைதி நிலவ விசயலட்சுமிபண்டிட் பாடுபடுவது போல, அக் காலத்தில் தமிழகத்தில் அமைதி ஏற்படுமாறு ஔவை மூதாட்டியார் அதியமானிடமிருந்து காஞ்சிமா நகருக்குத் தூது சென்று தொண்டைமானிடம் பேசிப் போரைத் தடுத்தார். ஒக்கூர் மாசாத்தியார், கர்க்கை பாடினியார், நச்செள்ளையார், குறமகள் இளவெயினி, பாரிமகளிர், பூதப்பாண்டியன் தேவி, மாரோக்கத்து நப்பசலையார், வெண்ணிக் குயத்தியார். காமக்கண்ணியார் ஆகிய இப் பெண் மணிகள், புலமை மிக்கவர்களாய்ப் பாடல்கள் பாடியுள்ளதைப் பண்டைத் தமிழ் நூலாகிய புற நானூற்றில் காணலாம். காரைக்காலம்மையாரும் மங்கையர்க்கரசியாரும் அறுபான்மும்மை அடியார்களுள் சேர்க்கப் படும் மாண்பு பெற்றார்கள். ஆண்டாள், ஆழ்வார் களுள் சேர்க்கப்படும் பெருமை அடைந்தாள். எனவே, பண்டைக்காலத்திலும் இடைக்காலத்திலும் தமிழ்

நாட்டில் மாதர்கள், சமுதாயத்தில் பெருமையாகவே பாராட்டப்பட்டார்கள் என்பது இனிது விளங்கும்.

தமிழிலக்கியங்களிலும் மாதர்கள் சிறப்பான இடமே பெற்றுள்ளார்கள். ஆங்கிலப் பேரறிஞரான ரஸ்கின் என்பார், "ஷேக்ஸ்பியர் நாடகங்களில் சிறந்த காப்பியத் தலைமாந்தர்கள் பெண்டிர்களே அன்றி ஆடவர்கள் அல்லர்" என்று கூறினர். அங்ஙனமே தமிழ்ப்பெருங் காப்பியங்களிலும் சிறு காப்பியங்களிலும் தலைசிறந்து விளங்குபவர்கள் மாதர்களே அன்றி ஆடவர்கள் அல்லர் என்று அறுதியிட்டு உறுதியாகக் கூறலாம். நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரத்தில் கோவலனைக் காட்டிலும் பண்பு மிக்கு விளங்கும் வஞ்சிக்கொடியாள், கற்பிற் சிறந்த கண்ணகியே. சேற்றிற் பிறந்த செங்கழுநீர்ப் பூப்போல் மாற்றுக் குறையாத பசும் பொன்னுகியும் ஒளி மிக்க மாணிக்கமாகியும் ஒரு காப்பியத்துக்குத் தலைவியான பெருமை மணிமேகலைக்கே உண்டு. சிறு காப்பியங்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் தமயந்தியும் சந்திரமதியு மாவார்கள். கானகத்தில் காரிருளில் கைவிட்டுச் சென்ற காதலன் நளனைப் பார்க்கிலும், இழந்த நளனைத் தேடிக் கண்டுபிடித்த தமயந்தியே சிறந்தவள் என்று கூறவும் வேண்டுமோ? தடுமாற்றமுற்ற அரிச்சந்திரனை நோக்கி, "உன் மனைவிக்காக அறம்வழுவேல்" என்று எடுத்துக் காட்டித் தன்னை அஞ்சாது வெட்டுமாறு சொன்ன சந்திரமதி, அரிச்சந்திரனைக் காட்டிலும் நெஞ்சுரம் பெற்ற தலைவி என்பது சொல்லாமலே விளங்கும். சேக்கிழார் தமது பெரிய புராணத்தில் மங்கையர்க்கரசியான மாதை "மங்கையர்க்குத் தனி அரசி எங்கள் தெய்வம்"

என்று உள்ளம் உவந்து பாராட்டி யிருப்பது பெண் குலத்துக்கே பெருமை யளிப்பதாகும்.

இப்படியிருந்தும் பிற்காலத்தில் மாதரைப் பழித்துப் பாடும் இழிநிலை இந்நாட்டில் எப்படியோ புகுந்தது. இந்த நூற்றுண்டில் அப்படிக் கூறியதைப் பாரதியார், ''மாதர் தம்மை இழிவுசெய்யும் மடமையைக் கொளுத்துவோம்'' என்று பாடி முழக்கிப் போக்கினுர். திரு. வி. க. ''பெண்ணின் பெருமை'' என்ற நூலை இயற்றிப் பெண்ணின் பெருமையைத் தமிழ்நாட்டில் பரப்பினுர்.

இப்போது அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பு எதற்கு என்று நினைப்பாரும் நம் நாட்டில் இல்லை. பட்டங்கள் பெறவும் சட்டங்கள் செய்யவும் பெண்களைத் தமிழர் சமுதாயம் இன்று அனுமதித்திருக்கிறது. எட்டும் அறிவினில் ஆணுக்குப் பெண் இங்கே இளைப்பில்லை என்னும் கருத்தையும் தமிழர் சமுதாயம் ஏற்றுக் கொண்டு விட்டது. ஆண்களோடு பெண்களும் இந்த நாட்டில் இன்று சரிநிகர் சமானமாக வாழ்கிறுர்கள். வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக்கொடுக்கும் வழக்கம் ஒழிந்துபோக வழிகோலிக் கொண்டிருக்கிறோம். மாதரை மாட்சி பெறச் செய்யத் தமிழ் நாடு முன்வந்து மார்பு தட்டி நிற்கிறது.

ஆனல், மன்பதையில் மாதர்களுக்குரிய மாண்பு மிக்க இடத்தைப் பெண்கள் என்றும் மறந்து விடக் கூடாது. பெரும்பாலான பெண்மணிகளுக்கு இல்லத்து அரசியாக விளங்க வேண்டுவதே குறிக்கோளாக இருக்க வேண்டும். பெண்கள் எல்லாரும் வீட்டை மறந்து நாட்டுக்குத் தொண்டு செய்ய வந்துவிட முடியாது. பெண்கள் அனைவரும் சரிநிகர் சமானம் என்று அலுவலகத்

தில் வேலை செய்ய முனைந்து விட்டால், குடும்பப் பாது காப்பு என்னாகும்? மாதர் அனைவரும் நாட்டுப்பணிக்கு முனைந்து விட்டால் வீட்டுப்பணி என்னாவது? வீட்டுப் பணியும் நாட்டுப்பணியே. இல்லாளாக இருந்து இனி தாகக் குடும்பத்தை நடத்துவதே மாதர்களுக்கு மன் பதையில் உரிய இடமாகும்.

படித்த பெண்களுள் சிலர் சுதந்திரமாக வாழ வேண்டும் என்று கருதி ஆசிரியர் வேலையையோ அர சாங்க வேலையையோ மேற்கொள்கின்றனர்; இல்லறத் தில் நுழைய அஞ்சுகின்றனர்; இல்லறத்தில் நுழைந் தாலும் சுதந்திரத்தோடு வாழவே விரும்புகின்றனர். ஒரு சிலர் மணந்துகொண்டாலும் கணவன்மாரை அசட்டை செய்கின்றனர். கற்ற கணவனுடைய குறை யாலோ படித்த மனைவியினுடைய தவறாலோ குடும்ப இன்பம் குறைகிறது. சுதந்திரம் என்பது கற்பனை. எது சுதந்திரம்? பிறருக்கு எந்த வகையிலும் ஊறுசெய்யாது வாழ்வதுதான் சுதந்திரம். உரிமை என்னும் பெயரால் குடும்ப இன்பத்துக்கு ஊறு செய்யலாகாது. படித்த பெண்கள் பலர் பாங்காகக் குடித்தனம் நடத்துவதைப் பாராமல் இல்லை. ஒரு சிலரே இத் தவறுக்குள்ளாகின் றனர். அவர்களும் படித்த கல்வியின் நற்பயனை அடையவேண்டும்.

பட்டம் பெற்ற பெண்கள் சிலர் மணம் வேண்டாம் என்று தள்ளிக்கொண்டே வந்து, வயதான பின்பு மணந்துகொள்ள விரும்புகிறார்கள். அப்போது மாப் பிள்ளை கிடைப்பது அரிதாகிறது. காதல் மணம் இல்லாத இந்த நாட்டில் மணவயது கடந்த படித்த மாதர்களுக்கு மணமாவது கடினமாகிறது. சில குடும்

பங்களில் பட்டம்பெற்ற மாதர்கள் மணமாகாமலே இருக்கும் பரிதாபக் காட்சியைப் பார்க்கிறோம். இக் காலத்தில் இளைஞர்கள், பட்டக் கல்வி படித்த இளைஞர்-கள், ஏனோ பட்டக்கல்வி கற்ற பெண்களை மணக்க மறுக்கிறார்கள்?, அஞ்சுகிறார்கள்?, நடுங்குகிறார்கள்? கற்ற பெண்களை அடக்கியாள முடியாது என்பது காரணமாக இருக்கலாம். பெண்கள், வயது மிகுதியாவ தற்கு முன்னே, இருபது அல்லது இருபத்திரண்டு ஆவ தற்குள்ளே, பெற்றோர்கள் சொற்கேட்டு இல்லற வாழ் வில் புகுந்துவிட வேண்டும். அவர்கள் அஞ்சவேண்டுவ தில்லை. கடிமணம் இன்றிப் பெண்கள் கன்னியாகக் கழிப்பது கடுமையானதாகும். அண்ணன், தம்பி, உற் றார், உறவினர் இவர்களுடைய ஆதரவைப் போதிய பணம் இருந்தாற்றான் அடைய முடியும். உற்ற கண வனைப்போலவும் பெற்ற மக்களைப்போலவும் மற்றவர் கள், தள்ளாத வயதில் உதவியாக இருக்க முடியாது. ஆதலால், படித்த பெண்கள் உரிமை என்னும் பெய ரால் வாழ்வைப் பாழ்படுத்த வேண்டாம். உற்ற வயதில் பெண்கள் குடும்பப் பொறுப்பை ஏற்றுக்கொள்வது நன்று. வாழ்வாங்கு வாழ்ந்தால் இல்லறத்தில் வள மான இன்பம் காணலாம்.

படித்த பெண்கள் அனைவரும் வேலையை மேற் கொள்ள வேண்டும் என்பதில்லை. உத்தியோகம் புருட லட்சணமேயன்றிப் பெண்கள் லட்சணமல்ல. கணவன் போதுமான வருவாயுடையவனாக இருந்தால், ஆசிரியப் பயிற்சிபெற்ற மாதர்களும் அவ்வேலையை மேற்கொள்ள வேண்டுவதில்லை. ஆணும் பெண்ணும் வேலை செய்யும்

குடும்பங்களில் இருவரிடத்தும் உடல்நலம் குன்றக் காண்கிறோம். ஆசிரியத் தொழில் எளிதல்ல. பெண்கள் பள்ளிகளில் வேலை மிகுதியாக இருக்கும். குழந்தைகளைப் பெற்றுக் கொண்டும் குடும்ப வேலையைக் கவனித்துக் கொண்டும் பள்ளிக்கூட வேலையைப் பார்த்துக்கொண்டும் வருவதால், பெண்கள் சிலர் எலும்புருக்கி நோய்க்கு ஆளாகி மாண்டதை நான் அறிவேன். இத்தகைய குடும்பங்களில் குழந்தைகள் நல்ல முறையில் வளர்க்கப்படாமல் இருப்பதையும் கண்டிருக்கிறேன். வேலைக்காரர்களிடம் குழந்தைகள் ஒப்படைக்கப்படுவதால் அக் குழந்தைகள் தவருக வளர்க்கப்படுகின்றன. குழந்தைகள் பெருமிருந்தால், கவலை இல்லாது பெண்கள் வேலை செய்வதால் குறையில்லை. தாய்மார்களாயுள்ள மாதர்கள் குடும்பப் பாதுகாப்பைக் குறிக்கோளாகக் கொண்டு வேலையைச் சீ என்று தள்ளவேண்டும். அப்போதுதான் அவர்களுடைய உடல் திடமாக இருக்கும். அப்போதுதான் அவர்கள் உண்மையான குடும்ப இன்பமும் பெறமுடியும்.

மாதர்களுக்குப் பட்டக் கல்வி வேண்டும் என்பதில்லை. அவர்கள் பத்தாவதுவரையிலும் படித்தாலே போதுமானது. குடும்பம் நடத்துவதற்குரிய குடும்ப நிர்வாகக் கல்வி, உடல்நலக் கல்வி, உளத்தியற் கல்வி, தையற் கல்வி போன்றவை பெண்களுக்கு வேண்டியவை. மருத்துவக் கல்வி, சட்டக் கல்வி கற்பவர்கள் கற்கட்டும். அவை வேண்டாம் என்பதில்லை. கட்டடக் கலை, பொறியியற் கலை ஆகிய இவை பெண்கள் இயல்புக்கு அப்பாற்பட்டவை.

குடும்பப் பெண்களுக்கு உரிய இடம் குடும்பமே. இவர்கள் ஓய்வு கிடைக்குமானுல் சமூக முன்னேற்றத்

திருப்பணியில் ஈடுபடுவது இன்பம் பயப்பதாகும். வீராங்கனைகளே அரசியலில் ஈடுபடலாம். குடும்பப் பொறுப்புக் கழிந்த மாதர்கள் ஆதரவற்ற மாதர் இல்லம் நடத்தல், மாதர் முன்னேற்றப் பணிகள் புரிதல் இவற்றைச் செய்ய வேண்டும். ஆயிரக்கணக்கான மாதர்கள் இந் நாட்டில் வாழ்வின்றி ஆடிக் காற்றில் அலையும் பஞ்சுபோல் இன்று துன்புற்றுக்கொண்டிருக்கிறார்கள். இத்தொண்டு கல்வி கற்ற மாதர்களால் இன்று இந்நாட்டுக்குச் செய்ய வேண்டிய இனிய தொண்டாகும். குடும்பப் பொறுப்புள்ளவர்கள் இத்தொண்டைச் செய்திடினும் தவறாகாது.

ஒரு சிலர்க்கன்றிப் பெரும்பான்மையான மாதர்க்கு உரிய இடம் மாண்பு மிக்க குடும்பமே என்பதைப் பெண்கள் என்றும் மறத்தலாகாது. அமைச்சர் தொழில் புரியினும், மருத்துவத் தொண்டு செய்யினும், மணவாழ்க்கையில் உள்ள மாதர்கள், தங்கள் குடும்ப வாழ்க்கையைப் புறக்கணிக்கலாகாது. இல்லாளாக இருந்து குடும்பத்தைக் காப்பதே பெரும்பாலரான நல்லாரின் குறிக்கோளாக இலங்க வேண்டும். எத்தொழிலைச் செய்திடினும் எத்தவத்தைக் கொண்டிடினும் முத்தர் மனம் மோனத்தே என்பது போல், இத்தரையில் எத்தொண்டு செய்திடினும் எப்பணியை மேற்கொள்ளினும் இல்லறத்தை ஏற்றுள்ள மாதர் மனம் அவ்வில்லறப் பொறுப்பிலே நிற்க வேண்டும். நாடு நலம்பெற வேண்டுமானால் இல்லறம் நன்கு நடைபெற வேண்டுமன்றோ? எனவே, சமுதாயத்தில் பெரும்பாலான மாதர்க்குரிய இடம் இல்லறமே என்றால் தவறாகாது; இதனால், இனிய குணம் படைத்த மாதரை இழிவாகக் கூறுவதுமாகாது.

குழந்தை வளர்ப்பு

குழந்தை குடும்பத்தின் இன்ப ஒளி; இல்லறத்தின் இணையற்ற அணிகலம்; வீட்டின் செல்வம்; நாட்டின் நல்லுயிர். வள்ளுவர்,

> "மங்கலம் என்ப மனைமாட்சி; மற்றதன்
> நன்கலம் நன்மக்கட் பேறு"

என்று குழந்தைச் செல்வத்தை அழகுறப் பாராட்டியுள்ளார். அறிவுடைய நம்பி என்ற அரசர் புறநானூற்றில் 188-ஆம் பாட்டில் அறிவை இன்பத்தால் மயக்கும் குழந்தை இல்லாதவர்களுக்கு வாழ்நாளில் பயனாகிய முடிக்கப்பெறும் பொருள் இல்லை என்னும் பொருள்பட,

> "மயக்குறும் மக்களை இல்லோர்க்குப்
> பயக்குறை இல்லைத்தாம் வாழும் நாளே"

என்று இனிதாகப் பாடியுள்ளார்.

குழந்தை இன்பம் உண்மையில் குவலயத்தில் பெறற்கரிய இன்பம். ஆனல், குழந்தையை நல்ல முறையில் வளர்க்கத் தெரியாவிட்டால், குழந்தை இன்பம் பொறுத்தற்கரிய துன்பமாக முடியும். குழந்தைகளை வளர்க்கும் முறைகளை அறியாததால் நாட்டில் குழந்தைகள் மரணம் மிகுதியாகிறது.

ஒரு நாட்டில் பிறந்த குழந்தைகளுள் 100-க்கு 75 குழந்தைகள் ஓராண்டுக்குள்ளே இறந்து விடுகின்றன. மற்ருெரு நாட்டில் 100-க்கு 5 குழந்தைகளே ஒரு வயதாகு முன்னே இறந்துபடுகின்றன. நம் நாட்டில் பிறக்கிற குழந்தைகளுள் பல, செம்மையான வளர்ப்பு முறையை மேற்கொள்ளாததால், பன்னிரண்டு மாதங்களுக்குள் இறக்கின்றன. ஒரு நாட்டிற்கும் மற்ருெரு நாட்டிற்கும் குழந்தைகளின் மரணத் தொகையில் வேற்றுமை தோன்றுவதற்குக் காரணம் என்ன? குழந்தை வளர்ப்பில் மேற்கொள்ளும் முறைவேறுபாடேயாகும். குழந்தைகள் மரணத்தை நிறுத்திவிடமுடியும். பயன்படுத்தும் பொருள்களை யெல்லாம் பிரசவ காலத்தில் தூய்மையாக வைக்காமல் இருப்பதாலும், சுகாதார அறிவற்றவர்களைக் கொண்டு பிரசவம் பார்ப்பதாலும், குழந்தைகளுக்குப் பிறந்த சில மாதங்களுக்குள் சோறு முதலிய சீரணமாக முடியாத உணவுகளைக் கொடுப்பதாலும், ஈ உட்கார்ந்து அசுத்தமாக்கப்பட்ட பண்டங்களை வாங்கி ஊட்டுவதாலும், குழந்தை அழும்போதெல்லாம் உணவு கொடுப்பதாலும், கையில் அகப்பட்டவற்றை யெல்லாம் குழந்தைகள் வாயில் போடுமாறு விடுவதாலும் குழந்தைகள் ஒரு வயதிற்குள் இறந்துபடுகின்றன. பெற்ருேர்கள் குழந்தை

களைப் . பேணும் முறையை நன்கு தெரிந்துகொண்டால், இந்நாட்டில் குழந்தைகள் மரணத்தைத் தடுக்கலாம்.

பிறக்கும்பொழுது குழந்தை பொதுவாக 6 முதல் 8 ராத்தல் எடையுள்ளதாக இருக்கிறது. பல குழந்தைகள் 8 ராத்தலுக்கு மேலாக எடையுள்ளனவாகவும் இருக்கும். முதல் வாரத்தில் குழந்தையின் எடை அதிகப் படுவதில்லை. முதல் ஆறு மாதங்களில் குழந்தை வாரம் ஒன்றுக்குச் சராசரி 4 அவுன்சு அதிகமாகிக் கொண்டே வளருகிறது. இரண்டாவது வயதில் குழந்தை ஏறக் குறைய 6 ராத்தல் எடையில் கூடியிருக்கும்.

சாதாரணமாக நான்கு மாதங்களானவுடன் குழந்தை தலையைத் தூக்கவும் கைகளினால் பொருளை எடுக்கவும், காலால் நன்றாய் உதைக்கவும் தொடங்குகிறது; ஒன்பது மாதங்களுக்குப் பின்பு நேரே உட்காரவும் நிற்கவும் முயல்கிறது; பத்தாவது மாதத்தில் தானாகவே நிற்கிறது; பன்னிரண்டாவது மாதத்தில் அடி எடுத்து வைக்கிறது; அப்பொழுது ‘அம்மா அப்பா’ என்று அரை குறையாய் உச்சரிக்க முயல்கிறது; இரண்டாம் ஆண்டில் வெளியுலகத்தை ஆராயத் தொடங்கி விடுகிறது; மூன்றாம் ஆண்டில் ஓடியாடப் பயில்கிறது. பெற்றோர்கள் குழந்தை பிறந்தது முதல் ஓடியாடும் வரையில் மிகுந்த கவனம் எடுத்துப் போற்றிவளர்க்க வேண்டும்; நல்ல பழக்கத்திலும் பழக்க வேண்டும். ‘தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்’ என்பது பழமொழி.

குழந்தை பல முறை அழும். அழுது அழுது குழந்தை தன் தசைகளை உறுதிபடுத்திக் கொள்கிறது. இதனால்,

எந்நேரமும் குழந்தையைக் கிள்ளிவிட்டு அழவைக்க வேண்டும் என்பதல்ல. துணி மடிந்திருந்து உடலில் உறுத்தினாலும், சிறு நீரால் படுக்கை நனைந்து விட்டாலும் குழந்தை அழும். அழும் பொழுதெல்லாம் குழந்தைக்குப் பால்கொடுத்தல் தவறு. முதல் இரண்டு மூன்று மாதங்களுக்கு இரண்டு மணிக்கு ஒருமுறையே தாய் குழந்தைக்குப் பால் கொடுக்க வேண்டும்; இரவு 10 மணிக்குக் கடைசிமுறை பால் கொடுக்கலாம். அதற்குப்பின் மறுநாள் காலையில் பால் கொடுப்பது போதுமானது. மூன்றாவது நான்காவது மாதங்களில் 3 மணிக்கு ஒரு முறை பால் கொடுக்க வேண்டும். பால் குடிக்கும் நேரங்களுக்கிடையில் குழந்தை அழுதால், அதற்குக் காய்ச்சின நீரைச் சிறிது சூடாக்கிக் கொடுக்க வேண்டும். மருத்துவர்கள் இங்ஙனம் கூறுகிறார்கள். குழந்தைக்கு 8 மாதமாவதற்கு முன்பு பாலைத் தவிர வேறு எதையும் கொடுத்தலாகாது.

பால் கொடுக்கும்பொழுது தாய் மார்பைச் சுத்தமாக வைத்திருப்பது இன்றியமையாதது. புட்டிப் பால் கொடுப்பதென்றால் புட்டியை நன்றாகக் கழுவி அதில் பாலை ஊற்றிக்கொடுக்க வேண்டும். பால் கொடுத்த பின்பு புட்டியிலும் ரப்பரிலும் ஈக்கள் மொய்க்காதவாறு புட்டியை மூடிவைக்க வேண்டும். பாலடையில் (சங்கில்) ஊட்டுவதாயிருந்தாலும், அதிலும் ஈ மொய்க்காதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

ஈ மொய்ப்பதால் குழந்தைக்குப் பலவித நோய்கள் வரும். ஓர் ஈ எட்டுக்கல் தொலைவிலிருக்கும் ஒரு நோயாளியின்மேல் உட்கார்ந்தும், அந்நோயாளி எச்சிலிலும் மலத்திலும் உட்கார்ந்தும், கிருமியைக் கொண்டு வந்து

சேர்த்து நோயை உண்டாக்கும். எதன் மேலாவது உட்கார்ந்தால் ஈ மலங்கழித்துக் கொண்டே தின்னுமாம். அதனால், ஈயின் காலிலிருந்தும் மலத்திலிருந்தும் கொடிய கிருமிகள், அது உட்காரும் பண்டத்தில் விழுவதால், கொடிய நோய் பரவுகிறது. ஆகையால், குழந்தைகளின் முகத்திலும் பாத்திரங்களிலும் ஈ மொய்க்காதவாறு பார்ப்பது மிக மிக இன்றியமையாதது.

குழந்தைகளுக்கு வாயிலே உறிஞ்சுவதற்கு எதையும் கொடுத்தலாகாது. விளையாடக் கொடுக்கும் பொருள்களும் முனை கூர்மையில்லாமல் தடித்திருக்க வேண்டும். முனை கூர்மையான விளையாட்டுச் சாமான்களாக இருந்தால், குழந்தை அவற்றைக் கண்களில் குத்திக்கொள்வதால் ஆபத்து ஏற்படும். விளையாட்டுச் சாமான்களும் அடிக்கடி சுத்தப் படுத்தக்கூடியனவாக இருக்கவேண்டும்.

குழந்தைகளை வெறுந்தரையில் உட்காரவும் படுக்கவும் விடக்கூடாது. அழுக்குக் கையை வாயில் வைத்துக் கொள்வதாலும், தரையில் உள்ளவற்றைப் பொறுக்கி வாயில் போட்டுக்கொள்வதாலும் குழந்தைகளுக்குச் சீதபேதி உண்டாகும்.

குழந்தைகளைப் பெற்றோராயினும் வேறு யாராயினும் வாயில் முத்தமிடுவது கூடாது. முத்தமிடுவதால் முத்தமிடுபவருக்குள்ள நோய் குழந்தைகளுக்கு ஓட்டிக் கொள்ளும். மனைவி, கணவனது எச்சில் சோற்றை உண்பதுதான் கற்பு என எண்ணுவது அறியாமை. ஒருவருக்குள்ள வாய்ப் புண் இதனால் மற்றொருவருக்குத் தொத்திவிடும். பெரியவர்களுக்கே நோய் ஓட்டிக்

கொள்ளுமென்ருல், குழந்தைகளுக்கு மிக எளிதில் நோய் ஒட்டிக்கொள்ளும் என்று சொல்லவும் வேண்டுமோ? பாலையும் குழந்தைகளுக்கு வாயால் ஊதி ஆற்றிக் கொடுத்தால், ஊதுவோர் வாயிலிருக்கும் நோய்க் கிருமி குழந்தைக்குக் கொடுக்கும் பாலின் வழியாகச் சென்று நோயை உண்டாக்கும்.

அன்புப் பெருக்கால் முத்தமிட விரும்பினுல், குழந்தையின் கைமேலோ உடல்மேலோ முத்தமிடுங்கள். குழந்தைகளானுலும் பெரியவர்களானுலும் கண்களுக்கு எண்ணெய் கட்டுவது தவறு. வெல்லம் அல்லது கருப்பட்டிபோட்டு ஆட்டப்படுவது எண்ணெய். அதனுல், கண்ணில் விடக்கூடிய தூய்மையுடையது நல்லெண்ணெய் அல்ல. ஆதலால், எண்ணெய் கட்டுதல் கண்ணுக்குக் கெடுதலாகும் என்றறிக.

சில ஊர்களில் குழந்தைகளுக்குத் தலைக்கு ஊற்றிய பின்பு குழந்தை வாயில் பெரியவர்கள் உறிஞ்சிச் சளி எடுப்பது வழக்கம். இது மிகவும் அபாயமானது. உறிஞ்சுவோரது வாயில் உள்ள நோய்க்கிருமிகள் குழந்தையின் வாயில் நுழைந்து பல ஆபத்தான நோய்களை உண்டாக்கும்.

தாயோ தந்தையோ ஒரு பண்டத்தைக் கடித்தோ மென்ருே குழந்தைக்குக் கொடுத்தலாகாது. வெற்றிலையைக் குழந்தைக்கு மென்று கொடுப்பதும் தவறு. சாப்பிடும்பொழுது ஒவ்வொருவர் உணவிலும் ஒவ்வொரு பிடி குழந்தைக்குக் கொடுப்பதும் தவறு. உண்ணும் வயதில் பெற்ருேர் சோற்றைத் தனியாகத் தட்டில் வைத்துக் குழந்தை உண்ணுமாறு செய்யவேண்டும்.

குறிப்பிட்ட இடத்தில் ஒரு வயது இரண்டு வயது மூன்று வயதுக் குழந்தைகளை மலங்கழிக்கப் பழக்க வேண்டும். கண்ட இடங்களிலும் தெருக்களிலும் குழந்தைகளை மலங்கழிக்க விடுவது அநாகரிகமாவதோடு சூழ்நிலைச் சுகாதாரத்துக்குக் கேடு உண்டாக்குவதாகும். ஒருவருடைய இரண்டு வயதுக் குழந்தை மற்றொருவர் வீட்டிற்குச் சென்றபோது, அவ்வீட்டில் போடப்பட்டிருந்த இரத்தினக் கம்பளத்தில் மலங்கழித்துவிட்டது. அவ்வீட்டார் குழந்தையின் தாயைக் குறித்து என்ன நினைத்திருப்பர்? இழிவாகவல்லவா நினைத்திருக்கவேண்டும்? ஆதலால், குழந்தைகளை ஓரிடத்தில் மலங்கழிக்கப் பழக்கவேண்டுவது தாயின் கடமையாகும். குழந்தைகளைப் பெறுவது எளிது. அக் குழந்தைகளைத் தக்கபடி பழக்குவது கடினம். பெற்றோர்கள் குழந்தைகளைச் சின்னஞ்சிறு பருவத்திலிருந்தே நன்முறையில் பழக்க வேண்டும்.

பன்னிரண்டாவது மாதத்தில் பொதுவாகக் குழந்தை அடி எடுத்து வைத்து நடக்கும். குழந்தைகளை நடக்கச் செய்வதற்கு நம் நாட்டில் நடை வண்டியைப் பயன்படுத்துவது வழக்கம். இதைப் 'பிள்ளைத் தமிழ்' என்னும் சிறு பிரபந்தத்தில் சிறு தேர் உருட்டல் என்பர்.

குழந்தைகள் பேசப் பழகும் காலத்தில் தமிழ்ப் பெற்றோர்கள் நல்ல தமிழ்ச் சொற்களைப் பேசவேண்டும். அயித்தை, அக்காச்சி, தங்காச்சி என்று சொன்னால், குழந்தைகளும் அப்படியே பேசப் பயின்றுவிடும். போதிய அறிவின்மையால் சிலர் கெட்ட சொற்களைக் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுப்பதுண்டு; குழந்

தைகள் அத்தகைய சொற்களைச் சொல்லக்கேட்டு மகிழ்வதுண்டு. இத்தவறுகளைப் பெற்றோர்களும் பிறரும் மறந்தும் செய்யலாகாது.

பெரியோர்களுக்குத் தீய பழக்கங்கள் இருக்கலாம். அவற்றைக் குழந்தைகளுக்கு முன்னே செய்தல்கூடாது. இரண்டுவயது மூன்றுவயதுக் குழந்தைகளுக்கு முன்னே பெற்றோரோ மற்றோரோ புகை பிடிப்பதும் பொடி போடுவதும் அக்குழந்தைகளின் தீய வாழ்க்கைக்கு அடி கோலுவதாகும். ஒரு சிலர் குழந்தை வாயில் சிகரெட் மிட்டாயைக் கொடுத்து வேடிக்கை பார்த்து மகிழ்வதுண்டு. குழந்தை ஒரு சிறு தாளைச் சுருட்டி வாயில் வைத்து இழுத்துக் காட்டும். இது தவறு என்றுணராத பெற்றோர், "பார், பார், என் பையன் சிகரெட் பிடிக்கிறான். கெட்டிக்காரனாய்விட்டான்" என்று சொல்லிப் பாராட்டி மகிழப் பார்த்திருக்கிறேன். இங்ஙனம் பாராட்டுவது தவறு. பெரியோர்கள் குழந்தைகளின் எதிர்கால நல்வாழ்வை எண்ணி அப் பழக்கங்களை மறைவாகச் செய்துகொள்ள வேண்டும். மனிதன் ஒன்றைப் பார்த்து ஒன்றைச் செய்யும் விலங்கு என்பர் விஞ்ஞானக் கலைஞர். ஒருவர் செய்வதைப் பார்த்துச் செய்வது குழந்தையின் இயல்பு. தவறான செயல்களைக் குழந்தைகளின் எதிரில் செய்தால், அக் குழந்தைகளும் அங்ஙனமே செய்யும். குழந்தைகளைக் குறை கூறுவதில் பயனில்லை.

நல்ல முறையில் குழந்தைகளை வளர்க்கும் தாய்மாரிடத்தில் வயதான சிலர், "எனக்குத் தெரியாதா? நானும் பத்துக் குழந்தைகளைப் பெற்றிருக்கிறேன், வளர்த்திருக்கிறேன். நீ செய்வது என்ன புதுமையாயிருக்

கிறது!'' என்று சொல்வர். தாய்மார் இப்படிப்பத்துப் பிள்ளைகளைப் பெற்று வளர்த்தவர் பேச்சைக் கேட்டுத் தவருன முறையில் குழந்தைகளைப் பேணுதலிலும் பழக்கு தலிலும் புகுந்துவிடுதல் கூடாது. அவர்கள் பத்துக் குழந்தைகளைப் பெற்றிருக்கலாம்; வளர்த்திருக்கலாம். அதனுல், அவர்கள் செய்த தவறுகளை மற்றவர்கள் செய்யவேண்டும் என்பதில்லை.

''செல்வர்களும் வசதியுள்ளவர்களும் இப்படியெல் லாம் குழந்தைகளை நல்ல முறையில் வளர்க்க முடியும், 'எட்டடிக் குச்சுக்குள்ளே எப்படி நானிருப்பேன்' என்று சொல்லுகிறபடி எட்டடி வீட்டிற்குள்ளே முட்டிக் கொண்டு வாழும் ஏழைகள் இப்படிச்செய்ய முடியுமா?'' என்று சிலர் வறட்டு வாதம் செய்கின்றனர். அறிவு யாருக்கும் பொது. செல்வர்களும் இம்முறையில் குழந் தைகளை வளர்க்க முடியும். அல்லாதவர்களும் செம்மை யான முறையில் குழந்தைகளை வளர்க்க முடியும். இதில் வேறுபாடில்லை. அக்கறை இருந்தால் குழந்தை களைத் தக்கவாறு பேணி வளர்க்கலாம். இதிலே குழந்தைகளின் எதிர்காலம் உருவாகிறது. இதிலே இந் நாட்டின் எதிர்காலத் தலைவர்களின் நிலை உருவடை கிறது. பெற்ருேர்கள் இப்படிக் குழந்தைகளை நல்ல முறையில் பேணி வளர்த்துப் பழக்கினுல், அக் குழந்தை கள் உடல்நலத்துடனும் நல்ல பழக்கத்தோடும் விளங்கி வீட்டுக்கும் நாட்டுக்கும் பெருமையளிப்பார்கள் என்பது உறுதி.

பிள்ளை வளர்ப்பு

சின்னஞ்சிறு குழந்தைகளை மூன்று வயது வரையில் நன்முறையில் வளர்ப்பதில் மிகுந்த தொல்லை இராது. ஆனால், மூன்று வயதுக்குமேல் பதினைந்து வயதுவரை பிள்ளைகள், ஆணாயிருப்பினும் பெண்ணாயிருப்பினும், உளத்தியல் முறையறிந்து வளர்ப்பதில் பெருந்தொல்லை யுண்டு. குழந்தை வளர்ப்பு முறை வேறு; பிள்ளை வளர்ப்பு முறை வேறு. ஒரு குடும்பத்தின் இன்பமோ துன்பமோ அக் குடும்பத்துப் பிள்ளைகளை வளர்ப்பதிலே இருக்கிறது. பெற்றோர் பிள்ளைகளை நல்ல முறையில் வளர்க்கத் தவறினால், அப் பிள்ளைகளின் வாழ்வே பாழ் பட்டுப்போகக் காண்கிறோம். படித்த தந்தைமார் தம் முடைய பிள்ளைகளைச் செம்மையான முறையில் வளர்க் கத் தவறிய காரணத்தால், அப் பிள்ளைகள் திருடர்களாக மாறியதைக் கண்கூடாகக் கண்டிருக்கிறேன். படியா திருப்பினும் பெற்றோர் சிலர் தங்கள் பிள்ளைகளைக் கண் ணும் கருத்துமாய் அக்கறையுடன் வளர்த்து வருவதால்,

அப்பிள்ளைகள் நன்கு கற்று முன்னேறிப் பல்லோரும் போற்றுமாறு வாழ்வதைக் காணலாம். வளர்ப்பதிலே தான் பிள்ளைகளின் எதிர்கால வாழ்வு உருவடைகிறது என்பது உண்மை.

பிள்ளை உள்ளம் கள்ளங் கபடமற்ற உள்ளம். இக் கள்ளங் கபடமற்ற உள்ளமுடைய பிள்ளைகளிடத்தே இறைவன் தன்மைகளைக் காணமுடியும். இதனால், நம் முன்னோர்கள் கிருஷ்ணனைப் பால கிருஷ்ணனாகவும் முருகனைப் பால சுப்பிரமணியனாகவும் திருவுருவம் அமைத்து உருவ வழிபாடு செய்தார்கள். கவிஞர்கள் கடவுளையும் பெரியோர்களையும் பிள்ளைத்தமிழ் பாடிப் போற்றினார்கள். ஏசுநாதரும், மாசிலாத பிள்ளை யுள்ளம் படைத்தவர்களே பேரின்பப் பெருவாழ்விற்கு ஏற்றவர்களாவார்கள் என்று தம் சீடர்களுக்கு அறிவுறுத்தினர். பிள்ளைமைப் பருவத்திலே, மாசிலாத உள்ளத்திலே படியுங் கருத்தும் பழக்கமும் பிள்ளைகளை உருவாக்கும். ஆதலால், பெற்றோர்களும் ஆசிரியர்களும் பிள்ளைகளின் உள்ளத்தில் நற்கருத்தும் நற்பழக்கமும் படியுமாறு செய்வது தங்களுக்குள்ள பொறுப்பும் கடமையுமாகும்.

மூன்றும் ஆண்டிலிருந்து ஆறும் ஆண்டு வரையில் பிள்ளைகள் மூன்று வகைகளில் பெருவளர்ச்சியடைகிறார்கள். முதலாவது அவர்கள் தாமாக எல்லாச் செயல்களையும் செய்து தங்களுடைய சொந்த திறமையை வளர்க்க முயலுகிறார்கள்; இரண்டாவது பெற்றோருடனும் மற்றோருடனும் நெருங்கிய தொடர்பைப் பெறுகிறார்கள்; மூன்றாவது புதிய பழக்கங்களைக் கற்றுக்கொள்கிறார்கள். இக் காலத்தில் பெற்றோர்கள் கவனமாக இருந்து பிள்ளைகளை வளர்க்கவேண்டும்.

சிறுவர்கள் எப்போதும் சுறுசுறுப்பாய் ஆடிக்கொண் டிருப்பார்கள்; பார்ப்பனவற்றை யெல்லாம் தொடுவார் கள். பொருள்களைக் கீழே தள்ளுவார்கள்; பூக்களைப் பறிப்பார்கள்; புத்தகங்களைக் கிழிப்பார்கள்; நடக்கவும் குதிக்கவும், ஒன்றின்மேல் ஏறவும் இறங்கவும் செய்வார் கள். இப்படிச் செய்யும்பொழுது பெற்றோர்கள் கோபப் படடு அவர்களை அடித்து பயமுறுத்தக்கூடாது. பொருள்-களை அவர்கள் கைக்கு அகப்படாதவாறு வைக்க வேண் டும். அவர்களை ஆடவும் ஓடவும் விடவேண்டும். யசோதை கண்ணனைக் கயிற்றால் உரலில் கட்டிவைத்த வாறு பிள்ளைகளைக் கட்டிவிடக் கூடாது அப்பருவமே செயல் வளரும் பருவம். அதனால், பெற்றோர்கள் சிறுவர் களை நன்றாக விளையாட விடவேண்டும்; ஆனால், அவர் களை நல்ல செயல்கள் செய்யப் பழக்க வேண்டும்.

இன்னும் இப்பருவத்தில் சிறுவர்கள் ஆக்கவும் அழிக்கவும் விரும்புகிறார்கள். சிறுமி சிறுவீடு கட்டி விளை யாடுவாள். சிறுவன் அச்சிறு வீட்டைச் சிதைத்துக் குறும்பு செய்வான். சிறுவர்கள் இப்பருவத்தில் களிமண் ணால் வண்டி, பறவை முதலிய உருவங்களைச் செய்வார் கள்; செய்தவற்றை அழிப்பார்கள்.

பெற்றோர்கள் இப்பருவத்தில் நல்ல பழக்கங்களில் சிறுவர்களைப் பழக்கவேண்டும். ஒழுங்காகக் காலையில் வீட்டு மல அறையில் மலஜலம் கழிக்கவும், நேரத்தில் நாள்தோறும் குளிக்கவும், வேளையில் உண்ணவும், நேரத்தில் தூங்கவும், மாலையில் விளையாடவும் பழக்க வேண்டும். இப்பருவத்தில் இப்படிப் பழக்கினால் இது சிறுவர்களுடைய நல்வாழ்க்கைக்கு அடிப்படை கோலிய தாகும்.

தாய்மார் முன்தானையால் சிறுவர் மூக்குச்சளியைத் துடைத்தலாகாது; மூக்குச்சளியைச் சுவர்களில் தடவி விடுவதும் கூடாது. இதனால், சுவர் அழகற்றுப் பார்க்க அருவருப்பாக இருக்கும். சுவரில் தடவிய சளி காய்ந்து போக, அதிலிருக்கும் கிருமிகள் காற்றில் கலந்து பிறர் மூக்கில், சுவாசிக்கும்போது, புகுந்து தடுமனை (நீர்க் கோவையை) உண்டாக்கும்.

சிறுவர் சிலர் தேம்பியழுது விரும்பியதைப் பெற முயல்வர். ஒரு முறை சிறுவர்கள் வென்றுவிட்டால், அவர்கள் அப்படியே செய்து எதையும் பெறவே முனைந்து விடுவார்கள். பெற்றோர்கள் குழந்தைகளின் பிடிவாதத்திற்கு இடங்கொடாமல் அவர்களை நல்வழியில் திருப்பவேண்டும்.

இப் பருவத்தில் இயற்கையாகவே தம் சொந்தப் பொருள்களிலோ பிற பொருள்களிலோ சிறுவர்களுக்கு ஒழுங்கும் அக்கறையும் இருப்பதில்லை. பெற்றோர் தம் பொருள்களையும் பிறர் பொருள்களையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பைச் சிறுவர்களுக்குக் கற்பிக்க வேண்டும். சிறு புளியங்கொட்டைகளாயினும் அவர்கள் அவற்றை எடுத்து வைக்குமாறு பழக்கவேண்டும்.

சிறுவர்கள் இப் பருவத்தில் கற்களையோ சிகரெட் பெட்டிப் படங்களையோ வேறு காகிதத் துண்டுகளையோ சேர்த்துவைப்பார்கள். அவர்கள் பெற்றோரிடம் அவற்றைக் கொடுத்துப் பாதுகாவலாக வைக்குமாறு சொல்வார்கள். பெற்றோர்கள் அவற்றை அசட்டையாக வீசியெறிதல் கூடாது; அவர்கள் சொன்னவாறு வைத்திருந்து பாதுகாத்துக் கொடுக்க வேண்டும். இப் பழக்கம்

பிற்காலத்தில் நூல் நிலையத்தில் நூல்களைச் சேர்த்து வைக்க உதவி செய்யும். என் மகன் எட்டு வயதில் படங்களைச் சேர்த்து வைத்து, "அப்பா, அவைகளைப் பத்திரமாக வைத்துக் கொடுக்க வேண்டும்" என்பான். சில வேளைகளில் கண்ணாடித் துண்டுகளைச் சேர்த்து ஒரு பெட்டியில் வைத்திருப்பான். நான் அவற்றைக் கண்ணும் கருத்துமாய்ப் பாதுகாப்பேன். இப்போது அவன் பல நாடுகளிலிருந்து அரசியல் சமூகநூல்களை வரவழைத்துச் சேர்த்துவைத்து இந்த இந்த நாட்டின் புள்ளி விவரங்கள் இவை இவை என எடுத்துக் கொடுக்கிறான். ஆதலால், சிறுவர்கள் எவற்றையேனும் கொண்டுவந்து கொடுக்கும்போது அவை அற்பமானவை என்று வீசியெறியாமல் அவற்றைப் பாதுகாக்கவேண்டும்.

சிறுவர் சிலர் பெருவிரலை உறிஞ்சிக்கொண்டிருப்பர். சிலர் படுக்கையில் சிறுநீர் பெய்துவிடுவர். இச் செயல்கள் சிறுவர்களிடத்தில் மனப் போராட்டம் இருப்பதை வெளிப்படுத்துவதாக உளத்தியலறிஞர் கூறுவர்.

ஏழுவயதிற்கு மேல் பன்னிரண்டு வயது வரையிலும் சிறுவரிடத்தில் பெற்றோர் முன்மாதிரியாக நடந்துகொள்வதும் திறமையாகப் பழகுவதும் அவசியமாகும். இப் பருவத்தில் பெற்றோரும் ஆசிரியரும் இவர்களிடம் நல்ல முறையில் நடக்கவேண்டும். தந்தையாயினும் ஆசிரியராயினும் சிறுவர் சிறுமியர்களுக்கு எதிரில் தவறானசெயல்களைச் செய்தல் கூடாது; இழி சொற்களைப் பேசுவதும் கூடாது. சிறுவர்களைப் பொடியோ, பீடியோ, சிகரெட்டோ, சுருட்டோ வாங்கிவருமாறு செய்தலும் கூடாது. சிறுவர் சிறுமியர்களுக்கு எதிரே பொடி

போடுதலோ புகை பிடித்தலோ கூடாது. இப்படிச் செய் வதால் பெரியவர்களானதும் ஆணும் பெண்ணும் தீய பழக்கத்துக்கு இரையாகிருர்கள்.

சிறுவர்கள் நம்மிடம் பல சிக்கலான கேள்விகளைக் கேட்பதுண்டு. அவர்கள், குழந்தை எப்படிப் பிறக்கிறது என்றும், வானத்தில் சந்திரன் எப்படி நிற்கிறது என்றும், இறந்துபோன உயிர்கள் எங்கே போகின்றன என்றும் கேட்பார்கள். நாம் அன்பாக அக் கேள்வி களுக்குத் தக்க விடைகள் அவர்களுக்கு ஏற்ற முறையில் கொடுக்கவேண்டுமே யன்றி, 'சீ கழுதை சும்மாயிரு' என்று இகழ்தல் கூடாது. சிறுவர்களிடம் அறியாததை அறிந்து கொள்ளும் ஆவல் ஏற்படுவதைத் தடுக்கக் கூடாது. அறியாததை அறிந்து கொள்ளவேண்டும் என்னும் ஆவலால்தானே அறிவு வளர்கிறது.

மற்ருென்று பெற்ருேர்கள் கவனிக்க வேண்டுவது. எந்த வகையிலும் பெற்ருேர்களாயினும் ஆசிரியர்களா யினும் சிறுவர்களைப் பொய் சொல்லுமாறு செய்தல் கூடாது. வீட்டில் யாராவது வ்ந்தால், 'அம்மா இல்லை" என்ருவது, 'அப்பா இல்லை' என்ருவது பொய்சொல்லும் படி பெற்ருேர்கள் கற்பிக்கக் கூடாது. பெரும்பாலும் பெற்ருேர்களே பிள்ளைகளுக்குப் பொய் கூறுமாறு கற் பிக்கும் முதலாசிரியராகிருர்கள். பிள்ளைமைப் பருவத் தில் பிள்ளைகளுக்குக் கற்பனைத் திறமை மிகுதியாக உண்டு. பொய் என்பது கற்பித்துக் கூறுவதே. பெற் ருேர்கள் இதை வளர்த்துவிட்டால், பிள்ளைகள் மிகுதி யாகப் பொய் சொல்லப் பழகி விடுவார்கள். பிள்ளைகள் எதையாவது உடைத்துவிட்டு வந்து பெற்ருேர்களிடம் உண்மை சொல்லும்போது, அவர்களை அடிக்காமல்

பாராட்டி அன்பு காட்டவேண்டும். ஆசிரியர்களும், உண்மை உரைக்கும் மாணவர்களிடம் அன்பு காட்ட வேண்டும். இப்படிச் செய்வதால் என் மாணவர்கள் என்னிடம் உண்மை சொல்வதைப் பல முறை காண்கிறேன். பிள்ளைகள் சிலர் அதிகமாகப் பொய் சொல்வர். அவர்களை ஆசிரியரும் பெற்றோரும் நல்வழியில் அன்பாகத் திருத்தினால், அவர்கள் அரிய பெரிய கவிஞர்களானாலும் ஆவார்கள். உண்மை பேசுவதில் நன்மை இல்லை என்று ஒருவரும் எண்ணுதலாகாது.

இந்த வயதில் பிள்ளைகளுக்குப் பெற்றோரிடம் திடமான நம்பிக்கை உண்டாகுமாறு செய்ய வேண்டும். பெற்றோர் ஏதாவது ஒன்று பிள்ளைக்கு வாங்கிக் கொடுப்பதாகச் சொல்லி வந்தால் கட்டாயம் வாங்கிக்கொண்டு போய்க் கொடுக்கவேண்டும். வாங்கிக் கொண்டு செல்லாவிட்டால் பிள்ளைக்குப் பெற்றோரிடம் நம்பிக்கை உண்டாகாது. இப்படித்தான் பொய் சொல்லுவார்கள் என்று பிள்ளைகள் பெற்றோர் மீது நம்பிக்கை இழந்து விடுவார்கள். இதைப் பெற்றோர்கள் என்றும் மறத்தலாகாது.

பதின்மூன்றிலிருந்து பதினைந்து வயதுப் பிள்ளைகளிடம் பெற்றோர்கள் மிக விழிப்பாக நடந்துகொள்ளவேண்டும். இப் பருவத்தில் பெற்றோர் சிற்றின்ப உணர்ச்சிக்கு இடம் கொடுக்கலாகாது. பெண் பிள்ளைகளையும் ஆண் பிள்ளைகளையும் எதிரே வைத்துக்கொண்டு திருமணச் செய்திகளையோ, உணர்ச்சி யெழுப்பும் பேச்சுக்களையோ பெற்றோர் பேசுதல் கூடாது. ஆசிரியர் சிலர் மகிழ்ச்சி ஊட்டுதற்காகச் சிற்றின்பப் பேச்சுகளை வகுப்புகளிலும்

கூட்டங்களிலும் பேசுகின்றனர். இஃது ஒரு சிலரை யாவது கெடுத்துவிடும்.

பொதுவாகப் பிள்ளைகளைப் பிறருடன் பழகவும் விளை யாடவும் விடவேண்டும். பிள்ளைகள் நன்ருக விளையாட வேண்டும். அவர்கள் விளையாடி உடலை உறுதிப்படுத்த வேண்டும். ஆணும் பெண்ணும் நல்ல உடல் வன்மை உள்ளவர்களாக விளங்கவேண்டும். சிலர் பிள்ளைகளை விளையாட விடுவதில்லை. பிள்ளைகள் இப்போது விளை யாடாமற் போனுல் எப்போது விளையாடப் போகிருர்கள்? அவர்களுடைய எதிர்கால வாழ்வு எப்படி யிருக்குமோ? யாரறிவார்? ஆதலால், பிள்ளைகள் வீட்டிலே மகிழ்ச்சி யாக விளையாடட்டும்.

“என்னைக் கண்டால் என் பிள்ளைகள் நடுங்குவார் கள்” என்று தந்தைமார் சிலர் கூறக் கேட்டிருக்கிறேன். இப்படித் தந்தைமார் புலியும் சிங்கமுமாகக் காட்சியளித் தால், வீடு காடாகும்; பிள்ளைகளும் அன்பினுல் வளர மாட்டார்கள். அகத்தில் நல்ல முறையில் அன்பொளி வீசட்டும். நம் பிள்ளைகள் நன்முறையில் வளர்ந்து பெற் ருேருக்கும் மற்ருேருக்கும் நன்கு பயன்பட்டு நற்குடி மக்க ளாக விளங்க நாம் முயற்சி செய்யவேண்டும்.

குடும்பத் திட்டம்

வாழ்க்கை வளமுற விளங்க வேண்டுமானால், இன்று இல்லறம் நடத்தும் ஆண்களும் பெண்களும் குடும்பத் திட்டத்தைக் குறித்துத் தெரிந்துகொள்ள வேண்டுவது இன்றியமையாதது. மக்கள் இடும்பை இன்றி வாழ்வதற்குக் குடும்பத் திட்டம் மிகவும் அவசியம். குடும்பத் திட்டத்தை அறியாத காரணத்தால் இந்த நாட்டில் இமயம் முதல் குமரி வரையில் மக்கள் இடும்பைக்கு ஆளாகிப் பெருந்துன்பம் உறுவதைக் காண்கிறோம். ஆதலால், இந் நாளில் இந்திய அரசாங்கமும் அறிஞர் பெருமக்களும் பொதுநலம் கருதி மக்களுக்குக் குடும்பத் திட்டத்தைப் பற்றி அறிவித்து வருவதைப் பார்க்கலாம்.

குடும்பத் திட்டம் என்பது குடும்பத்தின் உடல் நிலைக்கும் வருவாய்க்கும் ஏற்றவாறு குழந்தைகளைப் பெறுவதைக் குறிப்பது. குழந்தைகளை மிகுதியாகப்

பெருமல் குறைத்துக் கொள்வதே குடும்பத் திட்டத்தின் நோக்கமாகும்.

இலக்கியங்கள், குழந்தை இன்பமே குவலயத்தில் கிடைத்தற்கரிய இன்பம் என்று இயம்புகின்றன.

நளவெண்பா,

"பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனும்மற்
றென்னுடைய ரேனும் உடையரோ—இன்னடிசில்
புக்களையும் தாமரைக்கைப் பூநாறும் செய்யவாய்
மக்களை இங்கில்லா தவர்?"

என்றும் புகல்கின்றது. மக்களைப் பெருதார்க்குப் பரகதி இல்லை என்று சிலர் பாடியும் இருக்கின்றனர். மக்கள் இன்பம் மாண்பு மிக்க இன்பம் என்பதில் ஐயமில்லை. ஆனல், குடும்ப நிலைக்கு மேற்பட்டுப் போதிய அறிவு இல்லாது மக்களைப் பெற்றுக்கொண்டால், அக் குடும்பம் இடும்பையினும் மிக்க இடும்பை எய்துவது கண்கூடு. செல்வர்களுக்கு எத்தனை குழந்தைகள் பிறந்தாலும் இன்பமல்லாமல் துன்பம் இல்லை. வருவாய் இல்லாத வர்களுக்கு வளமாகப் பத்து அல்லது. பதினறு குழந்தை கள் பிறந்தால் இன்பமிருக்குமா?, துன்பமிருக்குமா? சொல்லுங்கள். குசேலர் இருபத்தேழு பிள்ளைகளைப் பெற்றுத் துன்பப்பட்ட கதையை நமக்கு அறிவுறுத்தவே எழுதி வைத்தார்கள் நம் முன்னேர்கள். குழந்தை யில்லாதவர் பேரின்பப் பெருவாழ்வு எய்த முடியாது என்பது தவறு.

இந்தியாவில் மக்கள் தொகை கட்டுக்கு அடங்கா மல் பெருகி வருகிறது.

16-வது நூற்றுண்டில் — 10 கோடி.

1881-இல் சரிவர எடுத்த முதல் குடிமதிப்பின்படி	25 கோடி 4 லட்சம் மக்கள்.
1931-இல்	—35 கோடி 3 லட்சம் ,,
1941-இல்	—38 கோடி 9 லட்சம் ,,

1947 ஆகஸ்டில் இந்தியாவை இரண்டு பகுதியாகத் துண்டித்தபோது இருந்த குடிமதிப்பு, கீழ்வருமாறு:—

பாகிஸ்தான் குடிமதிப்பு	— 7 கோடி 1 லட்சம்.
இந்தியாவின் ,,	— 33 கோடி 6 லட்சம்.
1951-இல் இந்திய யூனியனில் மட்டும் (பாகிஸ்தான் இல்லாத இந்தியாவில்)	35,68,29,485 (35 கோடி 68 லட்சத்து 29 ஆயிரத்து 485)

இக் குடி மதிப்பைப் பொதுவாக எண்ணிப் பார்க்கும் போது 10 ஆண்டுகளுக்கு இந்தியாவில் மக்கள் தொகை ஏறக்குறைய 5 கோடி பெருகி வருகிறது எனலாம். இப்படி மக்கள் தொகை பெருகுமானுல், 1981-ஆம் ஆண்டில் இந்தியாவின் குடிமதிப்பு 51 கோடியாகலாம் என்று அறிஞர்கள் கூறுகிருர்கள்.

எப்படிப் பெருகுகிறது என்று கீழே காண்போம்:

1951-இல்—36 கோடி மக்கள்
1961 ,, —41 ,,
1971 ,, —46 ,,
1981 ,, —51 ,,

தென்னிந்தியாவை எடுத்துக்கொள்வோம். தென்னிந்தியாவின் மக்கள் தொகை 1951 ஆம் ஆண்டுக்குடி

மதிப்பின்படி 7½ கோடியாகும். 1941-ஆம் ஆண்டுக் குடி மதிப்பைவிட 1951-இல் 15·3 சதவிகிதம் கூடியிருக்கிறது.

ஆந்திரநாடு உட்பட்டிருந்த சென்னை மாநிலத்தில் 1941-ஆம் ஆண்டு இருந்த குடிமதிப்பு 4 கோடி 98 லட்சம்; 1951-ஆம் ஆண்டு இருந்த குடிமதிப்பு 5 கோடி 70 லட்சமாகும். அன்றைய சென்னை மாநிலத்தில் பத்தாண்டுகளுக்கு 68 லட்சம் மக்கள் பெருகிவிட்டார்கள்.

சென்னை நகரத்தைமட்டும் எடுத்துக் கொள்வோம்:

1921	குடிமதிப்பின் படி	— 5,26,911	மக்கள்.
1931	,,	— 6,47,230	,,
1941	,,	— 7,77,487	,,
1951	,	—14,29,374	,,

பல காரணங்களால் சென்னைக் குடிமதிப்பு 83 சதவிகிதம் கூடிவிட்டது.

மதுரை நகரில் 1941-இல் 2 லட்சத்து 38 ஆயிரம் மக்கள் இருந்தார்கள். 1951-இல் 3 லட்சத்து 6 ஆயிரத்து 350 பேர்கள் இருந்ததாகக் குடிமதிப்புக் குறிப்பிடுகிறது. 51 சதவிகிதப் பெருக்கம் மதுரை நகரக் குடிமக்களில் காணப்படுகிறது.

இக் குடிமதிப்பில் பிற பகுதிகளிலிருந்து குடியேறினவர்களுடைய எண்ணிக்கையும் ஓரளவு அடங்குமென்றாலும், மக்கள் பெருக்கம் பெருமளவில் கூடியுள்ள உண்மையை மறுக்க முடியாது.

இப்படி இந்தியாவில் மக்கள் பெருக்கம் எங்கும் மிகுதியாவது காணலாம். மேலை நாடுகளில் மக்கள்

பெருக்கம் இப்படியில்லை. அங்கே வயதானாலும், போதிய வருவாய் பெறக்கூடிய நிலைவந்த பின்னரே, மக்கள் மணம் புரிகிறார்கள். அங்குள்ளவர்கள் குடும்பத் திட்டத்தில் கவனம் செலுத்தும் அறிவு மிக்கவர்கள். அந் நாடுகளில் இருபத்தைந்தாண்டுகளுக்கு ஒரு முறை யாவது போர் வந்து போகிறது. ஆதலால், அந் நாடுகளில் மக்கள்பெருக்கம் இந் நாட்டைப்போல் இல்லை. நம் நாட்டிலோ போர் இல்லை. மக்கள் கொள்ளை நோய்களி லிருந்து பிழைத்துக் கொள்ளத் தடுப்பு முறைகளைக் கையாளுகிறார்கள். பாமர மக்களுக்கும் ஓரளவு உடல் நல எண்ணம் உள்ளத்தில் பதிந்திருக்கிறது. இள வயது மணங்கள் மிகவும் அதிகமாக இந் நாட்டில் நிகழ் கின்றன. நம் மக்கள் குடும்பத்திட்டம் இன்னது என்பது அறிய மாட்டார்கள். ஆதலால், இந்தியாவில் மக்கள் பெருக்கம் சிந்தனையின்றிப் பெருகிவருகிறது.

இங்ஙனம் மக்கள் பெருக்கம் கட்டுக்கு அடங்காது பெருகி வருமானால், நாட்டில் உணவுப் பொருட் சிக்கல் ஏற்படுவது உறுதி. இந்தியாவில் 5 லட்சத்து 58 ஆயிரத்து 29 கிராமங்கள் இருக்கின்றன. இச் சிற்றூர் களிலுள்ள நிலங்கள் துண்டாடப்பட்டவை; சார மற்றவை. எவ்வளவு உரமிட்டாலும் இந் நிலங்கள் மிகுந்த விளைவைத் தரக்கூடியவை அல்ல ; ஏனெனில் இவை ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக, உழுது, உழுது சாரமிழந்துள்ளன. இக் கிராமங்களில் வாழ்கிற $29\frac{1}{2}$ கோடி மக்கள் இத்தகைய நிலங்களில் எவ்வளவு உழைத் தாலும் தக்க விளைவை எதிர்பார்ப்பது முடியாது. ஆத லால், எதிர்காலத்தில் 1981 இல் 51 கோடி மக்களுக்கு

எங்ஙனம் இந் நாட்டு நிலங்களில் விளையும் உணவு போதுமானதாக இருக்கக்கூடும்? இராது.

சாதாரணமாக ஒருவருக்கு 2400 கலோரி (சூட்ட ளவு) ஆற்றல் வேண்டும். இந்தியாவிலேயே இப்போது ஒருவருக்குக் கிடைப்பது 1750 கலோரியளவே யாகும். இந்த அளவு எதிர்காலத்தில் இன்னும் குறையலாம். இதனால், மக்கள் ஆற்றலற்றவர்களாவார்கள்.

இந்திய நாட்டில் இன்று ஒருவரது சராசரி ஆண்டு வருவாய் 225 ரூபாயாக இருக்கிறது. இந்த 225 ரூபாய் வருட வருமானத்தைக்கொண்டு இரண்டு குழந்தைகளைக் கூட ஒருவர் நன்கு காப்பாற்ற முடியாது என்றால், ஐந்து அல்லது ஆறு குழந்தைகளை எங்ஙனம் காப்பாற்ற முடியும்? இதனால், என்ன காண்கிறோம்? எலும்பும் தோலு மாகக் குழந்தைகள் இன்று நாட்டில் காட்சியளிக்கக் காண் கிறோம். பெற்றோர்கள் குழந்தைகளை நல்ல உடல் வளத் துடன் வளர்க்க வேண்டாமா?

மிகுதியாகக் குழந்தைகளைப் பெறுகின்ற காரணத் தால் இந் நாட்டில் பெண்கள், மண்ணுக்கு இளம் வயதி லேயே இரையாகிறார்கள். ஆண்டுதோறும் 2 லட்சம் பெண்கள் பிரசவ காலத்தில் இறந்துபோகிறார்கள் என்றும், பிறக்கும் குழந்தைகளுள் காற்பங்கு இந்தியா வில் சாகின்றன என்றும், 5 வயது நிரம்புவதற்குள் 100க்கு 40 வீதம் குழந்தைகள் மடிகின்றன என்றும் சர் ஜான் மேதா என்பவர் கூறுகிறார். மிகுதியாகக் குழந்தைகளைப் பெற்றுப் பெண்கள் எலும்புருக்கி நோய்க்கு ஆளாகி இறக்கிறார்கள். இந்த நிலை இந்தியா வில் இல்லாதிருக்க வேண்டுமெனில், மக்கள், குடும்பத் திட்டத்தில் சிந்தனை செலுத்தவேண்டும்.

குழந்தை பிறப்பது மக்களிடமுள்ளது. பிறப்பதைத் தடுப்பதில் பாவமில்லை. பிறந்த குழந்தைகளை நன்முறையில் போற்றி வளர்க்கவும், தாய்மார்கள் எமனுக்கு ஆளாகி மாளாமல் இருக்கவும் குடும்பத் திட்டம் மேற்கொள்ளப்பட வேண்டுமே அன்றி, நெறி தவறும் வழியில் இன்பமடைதற்கு அன்று என்று கருதுக.

ஒரு குடும்பத்தில் ஆண் ஒன்று, பெண் ஒன்று இருந்தால் போதும். போதுமான வருவாய் உள்ளவர்களுக்கும் நான்கு குழந்தைகளுக்கு மேல் வேண்டுவதில்லை. குழந்தைகள் குறைவாய் இருந்தால் அக் குழந்தைகளுக்கு நல்ல உணவு, உடை, கல்வி வசதிகள் அளிப்பது சாதாரண குடும்பத்தில் முடியும். செல்வர்களுக்கு இக் குடும்பத் திட்டமே வேண்டுவதில்லை. எத்தனை குழந்தைகள் பிறந்தாலும் அவர்களுக்குக் கவலை இல்லை. எனினும், நேரடிக் கவனம் செலுத்தி நல்ல முறையில் குழந்தைகளை ஊட்டமாக வளர்ப்பதற்கும், பெண்களின் உடல் நலம் நன்ருக இருப்பதற்கும் அவர்களும் குடும்பத் திட்டத்தை ஏற்றுக் கொள்ளலாம்.

குடும்பத் திட்டத்திற்கு வழி கூறுவது இக் கட்டுரையின் நோக்கமல்ல. ஒன்று மட்டும் கூறவேண்டும். குடும்பத் திட்டம் கருதித் தகுதியற்ற போலி மருந்துகளைக் கொடுத்துப் பெண்களை ஆபத்துக்குள்ளாக்குதல் கூடாது. குடும்பத் திட்டத்தை மேற்கொள்ள விரும்புவோர் தக்க மேனாட்டு மருத்துவர்களை அணுகி அவர்கள் கூறுவதற்கேற்பச் செய்தல் வேண்டும். இன்று பல புது முறைகள் எளிதாகக் கொள்ளத் தக்கவை உண்டு. கணவனும் மனைவியும் கருத்து ஒருமித்து இத் திட்டத்தைக் கைக்கொண்டால்தான் பயன் ஏற்படும்.

பெண்ணுக்கு 18 வயதுக்கு மேல் 22 வயதிற்குள்ளும், ஆணுக்கு இருபத்தைந்து வயதிற்கு மேலும் மணம் செய்வதால், குழந்தைகள் மிகுதியாகப் பிறப்பதைக் கணிசமாகத் தடுக்கலாம்.

மால்தஸ் என்பவர் குடும்பத் திட்டத்தைப் பற்றி இற்றைக்கு ஏறக்குறைய ஒரு நூற்றுண்டுக்கு முன்னரே முதன் முதலாக வெளியிட்டு உலக மக்கள் கவனத்தைக் கவர்ந்தார். நம் நாட்டில் பிற்காலத்தில் இருந்த இரண்டாவது பட்டினத்தடிகள் அன்றே இதைப்போன்ற கருத்தை ஒரு பாட்டில் குறிப்பிட்டிருப்பதைக் காணலாம்: அப்பாட்டு இது :

“ நாப்பிளக்கப் பொய்யுரைத்து
நவநிதியம் தேடி
நலன் ஒன்றும் அறியாத
நாரியரைக் கூடிப்
பூப்பிளக்க வருகின்ற
புற்றீசல் போலப்
புலபுலெனக் கலகலெனப்
புதல்வர்களைப் பெறுவீர் ;
காப்பதற்கும் வகையறியீர் ;
கைவிடவும் மாட்டீர் ;
கவர்பிளந்த மரத்துளையில்
கால்நுழைத்துக் கொண்டே
ஆப்பதனை அசைத்துவிட்ட
குரங்கதனைப் போல
அகப்பட்டீர்; கிடந்துழல
அகப்பட்டீரே”

ஆதலால், நம் மக்கள் குடும்பத் திட்டத்தை நன்குணர்ந்து அதனை மேற்கொண்டு வளமான மக்களைப் பெற்று வாழ்வாங்கு வாழ முயல்வார்களாக!

இல்லாண்மை

இல்லறத்தை இனிதாக்க வல்லது இல்லாண்மையே. இல்லத்தை நல்ல முறையில் ஆட்சி செய்யும் மாட்சியே இல்லாண்மையாகும். ஒரு குடும்பத்தின் இல்லாண்மை நல்ல வகையில் இல்லையெனில், அக் குடும்பம் இடம், பொருள், ஏவல் இருந்தும், எல்லையில்லாத இடும்பை யுறும் என்பதில் ஐயமில்லை. இல்லாண்மையுள்ள குடும்பத்தில் செல்வம் மிகுதியாக இல்லையெனினும், வருவாய் குறைவாக இருப்பினும், அக் குடும்பத்தில் இன்பம் குறைவுபடாது நிறைந்திருக்கக் காணலாம்.

ஒரு குடும்பத்தில் இல்லாண்மைக்கு உரியவர்கள் கணவனும் மனைவியுமாகிய இருவருமே யெனினும், குடும்பப்பொறுப்புக்கு உரியவள் மனைவியே யாவாள். இல்லத்திற்கு உரியவள் இல்லாளே. இக் காரணம்

பற்றியே தமிழ்மொழியில் மனைவிக்கு இல்லாள் என்னும் பெயர் வழங்குகிறது. இல்லாளின் இல்லாண்மை சிறப்புடையதாக இருந்தாற்றான், குடும்பம் இனிதாக இருக்க முடியும். இதனால், "ஏர் பிடிப்பவன் என்ன செய்வான்? பானை பிடிப்பவள் பாக்கியந்தான்" என்னும் பழமொழி நாட்டில் வழங்கிவருவதைக் காண்கிறோம்.

ஜான் ரஸ்கின் என்ற ஆங்கிலநாட்டுப் பேரறிஞர், "இல்லத்தரசி இல்லாள்" என்று தமது 'லில்லி மலர்கள்' என்னும் சொற்பொழிவில் பெண்களைப் பற்றிக் குறிப்பிடும்போது வற்புறுத்திக் கூறியுள்ளார். வள்ளுவரும், வாழ்க்கைத் துணை நலம் என்னும் அதிகாரத்தில் வாழ்க்கைத் துணைவியாகிய மனைவிக்கு இருக்கவேண்டிய நற்பண்புகளை,

"மனைத்தக்க மாண்புடைய ளாகித் தற்கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை"

என்றும்,

"மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல்"

என்றும்,

"இல்லதுஎன் இல்லவள் மாண்பானால்? உள்ளதுஎன்
இல்லவள் மாணாக் கடை?"

என்றும் நன்கு எடுத்துக் காட்டியுள்ளார். அவர் இக் குறட்பாக்களில் மனைவி, மனையறத்திற்குத் தக்க நற்குண நற்செய்கைகளை யுடையவளாயும் தன்னைக் கொண்டவனது வருவாய்க்குத் தக்க வாழ்க்கையுடையவளாயும் இருத்தல்வேண்டும் எனவும், மனையறத்திற்குத்

தக்க நற்குண நற்செய்கைகள் ஒருவனது இல்லாளிடத்தில் இல்லாதிருக்குமானால் இல்வாழ்க்கையானது செல்வத்தால் எத்துணை மாட்சியுடையதாயினும் பெருமையுடையதாகவே இராது எனவும், ஒருவனது இல்லாள் இல்லறத்துக்கு இன்றியமையாத நற்குண நற்செய்கையுடையளாயின் எல்லாம் இருக்கும் எனவும், மனைவி வாழ்க்கை நடத்துதற்குரிய நற்குண நற்செய்கை அற்றவளாக இருந்தால் எல்லாம் இருந்தும் ஒன்றும் இல்லாத நிலையே அமையும் எனவும் அறிவித்துள்ளார்.

இல்லாளுக்கு இருக்கவேண்டிய நற்குண நற்செய்கைகள் என்று வள்ளுவர் வற்புறுத்துவன யாவை? வள்ளுவர் குறளுக்கு வளமுற உரை எழுதிய பரிமேலழகர், "நற்குணங்களாவன: துறவிகளைப் பேணுதலும் விருந்தினரை உபசரித்தலும் வறியவர்களிடத்தில் அருளுடைமையும் முதலியன. நற்செய்கைகளாவன; வாழ்க்கைக்கு வேண்டும் பொருள்கள் அறிந்து அவற்றைக் காப்பாற்றி வைத்தலும், உணவைச் சுவைபடச் சமைத்தல் தொழில் வல்லமையும், பிறருக்கு உதவி செய்தலும் முதலியன. வருவாய்க்குத் தக்க வாழ்க்கை யாவது வருவாயைத் தெரிந்து அதற்குத் தக்கவாறு செலவு செய்தல்" என்று மேற்குறிப்பிட்ட முதல் குறளுக்குக் குறிப்பு வரைந்துள்ளார். இவ் வுரையாசிரியர் மற்ற இரண்டு பாக்களைக் குறிப்பிட்டு, "இவ்விரண்டு பாக்களாலும் இல்வாழ்க்கைக்கு வேண்டுவன மனையாளுடைய நற்குண நற்செய்கைகளே அன்றி மற்றவை அல்ல என்பது கூறப்பட்டது" என்று வற்புறுத்தியுள்ளார். வள்ளுவர் கூறிய மூன்று குறட்பாக்களாலும், அவற்றிற்குப் பரிமேலழகர் எழுதியுள்ள குறிப்புக்

களாலும் இல்லாண்மையே இல்லாளுக்கு இன்றியமை யாதது என்பது தெள்ளத் தெளியப் புலனாகிறது.

மேலும் மனைவிக்கு இருக்க வேண்டிய நற்பண்பு களைக் கீழ்வரும் வெண்பாவால் அறியலாம்:

> " அன்னை தயையும் அடியாள் பணியுமலர்ப்
> பொன்னின் அழகும் புவிப்பொறையும்—வன்னமயில்
> வேசி துயிலும் விறல்மந்திரி மதியும்
> பேசில் இவையுடையாள் பெண்."

மனைவியானவள், தாயைப்போல் அன்புடையவ ளாகவும், பணியாளைப்போல் ஊழியம் செய்பவளாகவும், இலக்குமியைப்போல் மேனியழகும் குண அழகும் உடையவளாகவும், பூமியைப்போல் பொறுமையுடைய வளாகவும், கணிகையைப்போல் கணவனுக்கு இன்ப மளிப்பவளாகவும், அரசனுக்கு அல்லது அரசாங்கத் துக்கு ஆலோசனை கூறும் அமைச்சனைப்போல் கணவ னுக்கு அரிய ஆலோசனை சொல்லும் வல்லமையுடையவ ளாகவும் இருக்கவேண்டுமாம்.

இப் பாடல் மனைவிக்கு இருக்கவேண்டிய இல் லாண்மைப் பண்புகளை எடுத்துக் கூறுகிறது. இல்லாள் கணவனை உபசரிப்பதில் மிகுந்த அன்பு காட்டவேண்டும்; அன்பினால் பணிவிடைகள் செய்யவேண்டும். இப் பணி விடை, வேலைக்காரர் செய்யும் பணிவிடையல்ல; அன் புப் பணிவிடை. பணிவிடை செய்வதால் கணவன் மனைவியை வேலைக்காரி என்று நினைக்கமாட்டான். அப்படி ஒருவன் கருதுவானாயின் அவனை அறிவுடையவ னாகக் கருத முடியுமா? முடியாது. கணவனும் மனை விக்குப் பணிவிடை செய்வதில் தவறில்லை. இலக்குமி

யைப் போல் இருக்கவேண்டும் என்பது மனைவி "இருக லட்சுமி"யாக விளங்கவேண்டுவதையே குறிப்பதாகும். வாழ்க்கையில் வெற்றிபெற வேண்டுமானல், பொதுவாகக் கணவன் மனைவி இருவருக்குமே பொறுமை வேண்டும், சிறப்பாக மனைவிக்கு மிகுந்த பொறுமை வேண்டும். இன்பம் தருவதில் கணிகையைப்போல் இருக்கவேண்டும் என்பது கணவனுக்கு மனமகிழ்ச்சி யூட்டவேண்டும் என்னும் நற்கருத்தை வற்புறுத்துகிறது. கணவனுக்கு முன்னல் மனைவி தீப்பொறிபறக்கும் கண்களுடனும் கடுகடுத்த முகத்துடனும் எப்போதும் காட்சியளித்தால் இன்பமிருக்குமா? கண்ணகியைப்போல அறமனைப் பான்மையுடன் இருந்தால், கணவனுக்கு இன்பம் உண்டாகுமா? மனைவி கணவனுடன் இனிமையாகப் பேசிக் கனிந்த அன்பால் இனிய முகம் காட்டி வரவேற்றுத் துன்பம் இருக்குமானல் துடைக்க முற்படவேண்டும். ஆலோசனை கூறுவதில் அமைச்சனைப்போல் மனைவி இருக்கவேண்டும் என்பது மனைவிக்குள்ள பொறுப்பை எடுத்துக்காட்டுகிறது.

இல்லாள், கல்லாதவளாயிருப்பினும் நல்ல பண்புடையவளாக இருந்தால், கணவனுக்குள்ள எல்லாத் துன்பங்களும் பகலவனைக் கண்ட பனிபோலல்லவா பறந்துபோகும்? மனைவிக்கு உணவு வகைகளைச் சுவையுறச் சமைக்கும் திறமை இருக்குமானல், சிற்றுண்டிச் சாலைகளெல்லாம் வெற்றுண்டிச்சாலைகளாகிவிடுமே. இல்லாளுக்கு இல்லாண்மைத்திறன் இருந்தால் கணவனுக்கு எல்லா இன்பமும் உண்டு. அத்தகையவள் மறைந்துவிட்டால் எல்லா இன்பங்களும் இல்லையாகும்.

இக்கருத்தை,

> "தாயோடு அறுசுவைபோம்; தந்தையொடு கல்விபோம்;
> சேயோடு தான்பெற்ற செல்வம்போம்—ஆயவாழ்வு
> உற்ருருடன்போம்; உடன்பிறப்பால் தோள்வலிபோம்;
> பொற்ருலியோடு எவையும் போம்."

என்னும் இவ்வெண்பா வலியுறுத்துவதைக் காணலாம். பொற்ருலி என்பது இங்கு மனைவியைக் குறிக்கிறது என்க.

இல்வாழ்க்கை இன்பமனைத்தும் நல்ல இல்லாளின் இல்லாண்மையைப் பொறுத்தே இருக்கிறது. ஆதலால், மனைவி குடும்பத்தை நன்ருக நடத்தும் திறமைகளைப் பெறவேண்டும்: முதலாவது வீட்டைத் துப்புரவாக வைக்கப் பழகவேண்டும்; வீட்டுக் குப்பையை உடனுக்குடன் அப்புறப்படுத்தி வெளியே தெரு நடுவில் கொட்டி விடாது குப்பைத் தொட்டியில் கொட்டும் பழக்கத்தை மேற்கொள்ள வேண்டும்; குழந்தைகளைத் தெருவிலே மலஜலம் கழிக்கவிடாது வீட்டுக்குள் மல அறையில் கழிக்குமாறு பழக்கவேண்டும்; படுக்கை விரிப்புகளையும் படுக்கைக்குரிய மெத்தை, பாய் முதலியவற்றையும் அடிக்கடி வெயிலில் காயவைக்க வேண்டும்; தலையணைகளுக்கு உறைகளை மாற்றவேண்டும். தலையணைகளைப் பார்த்தே ஒருவர் வீட்டுத் தலைவியின் தன்மையை உணர்ந்து கொள்ள முடியும். தலையணை துப்புரவாக இல்லாமல் இருந்தால் வீட்டின் மதிப்பே தாழ்ந்து போகும். காய்ச்சல் வந்தால் தக்க மருத்துவரிடம் போய் மருந்து சாப்பிட வேண்டுமேயன்றிக் காப்புக் கட்டிக் காய்ச்சலைப் போக்கிவிட முடியாது. போலி மருத்துவரிடம் சென்று நோயைப் பெருக்கிக்கொள்

வதோ ஒரு நோய் போய் மற்றொரு நோய் வருமாறு செய்துகொள்வதோ கூடாது.

வீட்டில் யாருக்காவது நோய் வருமானால் கஞ்சி காய்ச்சுவது, உணவைப் பக்குவம் செய்து கொடுப்பது, சூட்டளவையால் (Thermometer) காய்ச்சல் நிலை அறிவது போன்ற அறிவும் இல்லாளுக்கு மிகவும் வேண்டுவது.

மழைக்காலத்துக்கு வேண்டிய வற்றல் முதலிய வற்றை வெயிற்காலத்தில் செய்து வைத்துக்கொள்ளுதல், குறைந்த விலைக்குக் கிடைக்கும் காலத்தில் ஆண்டுக்கு வேண்டிய புளி, மிளகாய், பருப்பு வகைகள் இவற்றை வாங்கி எலிகள் சூறையாடாதவாறு பாதுகாத்து அவற்றை அடிக்கடி எடுத்து வெயிலில் காய வைத்தல், பொருள்களை ஊதாரித்தனமாய் வீணாக்கா திருத்தல் ஆகிய இவையும் இல்லாள் கட்டாயம் அறிந்து கொள்ள வேண்டியவை.

எல்லாவற்றிற்கும் மேலாக இல்லாள் வருவாய்க்குத் தக்க வாழ்வு வாழவேண்டும். 'குடிப்பது கூழ்; கொப்பளிப்பது பனிநீர்' என்னும் நிலையில் இருத்தல் கூடாது. மனைவி என்றும் டாம்பீக வாழ்வைமேற்கொள்ளலாகாது. நம்முடைய நிலையைப் பிறர் அறிந்துகொண்டு இழிவாக நினைப்பார்களே என்று மனைவி நினைக்க வேண்டுவ தில்லை. பிறர் மதிக்கும்படி கடனுக்குச் சேலைகள் வாங்கி அடுக்கி வைத்து உடுத்திக் கடன்கொடுக்க முடியாது அல்லல் படுவது நல்லதா? இப்படிச் செய்வது தொல்லையை விலைக்கு வாங்குவதாகும். 'கடனுண்டு வாழாமை காண்டல் இனிதே' என்று இனியது நாற்பது இயம்புகிறது. வீணாகக் கடன் வாங்குவது

தவறு. கொடிது கொடிது கடன் வாங்கும் பழக்கம் மிகக் கொடிது. சிக்கனமாக வாழவேண்டும். ஊதாரியாக வாழ்வதும், கண்ட இடங்களில் கடன் வாங்கி வாழ்வதும் இழிவையே உண்டாக்கும். பொறுப்பில்லாது கடன் வாங்கித் துணிமணிகளை மிகுதியாக வாங்கும் பழக்கம் வெறுக்கத்தக்கது.

> **" ஆன முதலில் அதிகம் செலவானால்**
> **மானம் அழிந்து மதிகெட்டுப்—போனதிசை**
> **எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ் பிறப்பும் தீயனாய்**
> **நல்லார்க்கும் பொல்லனாம் நாடு"**

என்னும் இப் பாடல் கடன் படுவதால் ஏற்படும் தீமைகளை நம் கண் முன் நன்றாக எடுத்துக் காட்டுகிறது. "கடன்பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன்" என்றார் கம்பர். "வருவாய்க்குத் தக்க செலவு செய்தால் கேடு வாராது" என்று வள்ளுவரும்,

> **" ஆகு ஆறு அளவு இட்டிது ஆயினும் கேடு இல்லை**
> **போகு ஆறு அகலாக் கடை"**

என நமக்கு அறிவுறுத்தியுள்ளார். ஆதலால், சிக்கன வாழ்வு இல்லாண்மைக்கு இன்றியமையாதது என்று கருதவேண்டும். சிக்கனம் என்பது லோபத்தனமாய் இன்றியமையாதவற்றைச் செய்யாமல் இருப்பதல்ல; வீண் செலவுக்குப் போகாமல் திறமையாய் இருப்பதேயாகும். நல்ல உணவு உண்ணாமல் இருப்பது சிக்கனமல்ல. வருவாய்க்கு ஏற்ற வாழ்க்கை நடத்துவதுதான் சிக்கனம். சிக்கனமாய் வாழ்வதற்கு வீரம் வேண்டும். முற்காலத்தில் நம் நாட்டுப் பெண்மணிகள், பள்ளிக்குச் சென்று புள்ளிக் கணக்கு அறியாதிருந்தாலும், இல்

லாண்மையில் வல்லவர்களாக வாழ்ந்து பாங்காகக் குடித்தனம் நடத்தினர்கள். இன்னும் அத்தகைய பெண் மணிகள் நம் நாட்டில் இல்லாமல் இல்லை. கற்றவர்கள் என்று சொல்லும் பெண்மணிகளும், டாம்பீக வாழ்க் கைக்கு அடிமைப்பட்டுள்ள பெண்களும் இந் நாளில் இல்லாண்மைத் திறமையற்றவர்களாக இருக்கக் காண் கிறோம். அவர்களும் குடும்பத்தைத் திறம்பட நடத்தும் இல்லாண்மையில் நல்ல திறன் பெற்றுச் சீரும் சிறப்பு மாக வாழவேண்டும்.

உணவுச் சீர்திருத்தம்

மக்கள் வாழப் பிறந்தவர்களே அல்லாமல் மாய்ந்து மடியப் பிறக்கவில்லை. மக்கள் நோயுற்று மாய்ந்து மடியாமல் படிமிசை நன்ருக வாழ்வதற்கு உடலுறுதி வேண்டும். பாரதியார், "உடலினை உறுதி செய்" என்று தமது புதிய ஆத்திசூடியில் வற்புறுத்தினர். உடலுறுதியாக இருக்க வேண்டுமானல் உடலுக்கு நல்ல சத்துள்ள உணவு வேண்டும். "காயமே பொய்யடா இது காற்றடைத்த பையடா" என்றும், "ஊற்றைச் சடலமடி" என்றும் உடலைப் பழித்து மெய்ஞ்ஞானம் பேசுவதில் பயனில்லை. கொங்கணச் சித்தரும், "ஊற்றைச் சடலம் என்றெண்ணுதே; உப்பிட்ட பாண்டமென்று எண்ணுதே" என்று அறிவுறுத்தியுள்ளார். திருக்குறளும், மருந்து என்னும் அதிகாரத்தில் பெறுவதற்கு அரிய உடலைப் போற்றுமாறு வற்புறுத்துகிறது. நாலடியாரும், அரும்பெறல் யாக்கை

யைப்பெற்ற பயத்தால் பெரும்பயன் ஆற்றவே கொள்க'' என்று நல்லுரை நவில்கிறது. ஆதலால், உடலைப் பழிக்காமல் மெய்ஞ்ஞானம் பேசிக் கெடுக்காமல் உடலை நல்ல சத்துள்ள உணவால் போற்றிப் பாதுகாக்க வேண்டும்.

உடலுக்கு நோய் வருவது உற்ற விதியினுல் அல்ல. நல்ல வாழ்வு வாழாத குறையாலும், சுகாதார முறையில் வாழாத தவருலும், தீய பழக்கத்தாலும், சத்துள்ள உணவை உண்ண வேண்டிய முறையை அறியாத அறியாமையாலும் மக்களுக்குச் சில நோய்கள் உண்டாகின்றன. எடுத்துக்காட்டாக உணவை அவசரம் அவசரமாக உண்பதால் அஜீரணமும் குன்மமும் உண்டாகின்றன என்று மருத்துவர்கள் கூறுகிருர்கள். பத்தில் ஒன்பது பங்கு நோய்கள் கிருமிகளால் வருகின்றன; ஒரு பங்கு நோய்கள் தவருன உணவால் ஏற்படுகின்றன. ஆகையால், எத்தகைய உணவு உண்ணவேண்டும் என்பதை அறிந்து கொள்வது அவசியம்.

இருபத்தைந்து வயது வரைக்கும் நம் உடம்பு வளர்ந்துகொண்டே வருகிறது. இருபத்தைந்து வயதானதும் இவ்வளர்ச்சி நிறைவடைகிறது. வளரும் பருவத்திலும் அதற்குப் பின்னரும் ஆயுட்காலம் வரையிலும் உடலிலிருக்கும் உறுப்புக்கள் ஓய்வு ஒழிவு இன்றி வேலை செய்துகொண்டே யிருக்கும். இருதயம் இடைவிடாது வேலை செய்துகொண்டே யிருக்கிறது. வயிறும் குடலும் அயர்ச்சி இல்லாது ஜீரணிக்கும் வேலையை ஆற்றிக் கொண்டிருக்கின்றன. இங்ஙனம் உறுப்புக்கள்

வேலை செய்துகொண்டிருப்பதால், உடம்பிலுள்ள உயிரணுக்கள், தேய்ந்தும் குறைந்தும் வரும். அவற்றைப் புதுப்பிக்கவும் வேறு உயிரணுக்களை உண்டாக்கவும், உடலுக்குச் சக்தி அளிக்கவும், உடம்பில் தக்க அளவு சூட்டை வைத்திருக்கவும், சத்துள்ள உணவை உண்ணு விட்டால், உடம்பு கெட்டு நாளடைவில் ஒழிந்து போகும்.

தமிழ் நாட்டில் உண்ணும் உணவு, இந்தியாவிலேயே மற்றப் பகுதியில் உண்ணும் உணவைக் காட்டிலும் மிகவும் சத்து இல்லாதது என்று உணவு ஆராய்ச்சி வல்லுநர்கள் இடைவிடாது சொல்லி வருகிறுர்கள். அவர்கள் கூறுவது உண்மையே. பஞ்சாபியர் உணவும் சிந்தி மக்கள் உணவும் சத்துள்ளவைகளாக இருக்கின்றன. நம் நாட்டு உணவுதான் சத்துக் குறைவானதாக இருக்கிறது. முற்காலத்தில் தமிழ்நாட்டில் உண்ட உணவு சிறந்ததாக இருந்தது. இதைக் கம்பராமாயணத்தில் நாட்டுப் படலத்தில் உள்ள ஒரு பாட்டிலிருந்து அறிகிரும். அயோத்தி மாநகரத்தில் அந்தணர் வீட்டில் முக்கனியுடன் நாறுவகைப் பருப்போடு முழுகிய நெய்யில் தயிர்க்கட்டியை கண்டம்கண்டமாகச் சேர்த்துண்டதைக் கம்பர் அப் பாட்டில் அழகாக வருணித்துள்ளார். பாட்டைப் பாருங்கள் :

''முந்துமுக் கனியின் நாறு
முதிரையின் முழுத்த நெய்யின்
செந்தயிர்க் கண்டம் கண்டம்
இடை இடை செறிந்த சோற்றின்
தந்தம்இல் இருந்து தாமும்
விருந்தோடும் தமரி ஞேடும்

அந்தணர் அமுதர் உண்டி
அயிலுறும் அமலைத்து எங்கும்."

[நாலுமுதிரை - நாலுவகைப் பருப்பு; அந்தணர் - பார்ப்பனர்; அமுதர் உண்டி - தேவர் உணவு போன்ற உணவு; அயிலுறும் அமலைத்து - உண்ணும் ஓசையுடையது.]

நாம் உண்ணும் உணவில் ஊன் சத்து, உலோக உப்புக்கள், மாப் பொருள்கள், A, B, C, D, ஆகிய உயிர்ச்சத்துக்கள் இவை நன்கு பொருந்தியிருக்க வேண்டும். உயிர்ச்சத்தை ஆங்கிலத்தில் விட்டமின் என்பர். இவ் விட்டமின்கள் திடமாக உடல் வளர்வதற்கும், நலமாக உடல் இருப்பதற்கும் இன்றியமையாதவை. ஒவ்வொன்றில் ஒவ்வொரு சத்தே பெரும்பாலும் இருக்கும். ஆதலால், நாம் இவையனைத்தும் பெறுவதற்குப் பல பொருள்களையும் பாங்காகச் சேர்த்து உண்ணவேண்டும்.

ஊன் சத்து உடலில் உயிரணுக்களை உண்டாக்கவும் வளர்க்கவும் உபயோகமாகிறது. இதைப் பால், தயிர், கீரை, காய்கறி இவற்றை உண்பதிலிருந்து பெறலாம். கோதுமை மாவிலும் இச் சத்து இருக்கிறது. இவ்வூன் சத்து இல்லை என்றால், உடல் தசை பிடிக்காமல் நன்றாக வளர்ச்சியடையாது; மனவலிமையும் சக்தியும் இழந்து மெலிந்து போகும்; ஆயுளும் குறையும். உலோக உப்புக்கள் இரத்தத்தைப் புளிப்படையுமாறு செய்யாமல் நல்ல நிலையில் வைத்து உடலுக்கு நோய் வாராவண்ணம் காக்கும். இவ்வுப்புக்களுள் முக்கியமானது கால்சியம். இதனால், எலும்புகள் நன்றாக அமையும்; இருதயம்

செம்மையாக வேலை செய்யும்; கொழுப்பு முதலியவை ஜீரணமாகும். பால், மோர், பருப்பு, கீரை, பழம் இவற்றில் கால்சியம் மிகுதியாகக் கிடைக்கிறது. தக்காளிப்பழத்திலிருந்து நமக்கு இரும்புச்சத்து கிடைக்கும். உடம்புக்கு வேண்டிய சூட்டைக் கொடுக்கக்கூடிய கொழுப்புச் சத்தானது வெண்ணெய், நெய், எண்ணெய் இவற்றால் அடைகிறோம். மாப்பொருள் உடலுக்கு வேண்டிய சக்தியை அளிக்கிறது. இந்த மாப்பொருளை அரிசி, கோதுமை, சோளம், கேழ்வரகு இவற்றால் பெறலாம்.

உயிர்ச்சத்துக்கள் எனப்படும் A, B, C, D, விட்டமின்கள் உயிர் வாழ்வதற்கும், உடல் வளர்ச்சிக்கும் மிகவும் அவசியமானவை. உடல் வளர்ச்சிக்கும் இரத்தத்தைச் சரியான பக்குவத்தில் வைப்பதற்கும் தொத்து வியாதிகள் பற்றாதிருப்பதற்கும் A விட்டமின் தேவையானது. இது நல்ல பால், வெண்ணெய், நெய், கோஸ் கீரை, பீட்ரூட், மஞ்சள் முள்ளங்கி, தக்காளி, பருப்புகள், பட்டாணி, மொச்சை இவற்றில் உண்டு. B விட்டமின், உடம்பை வளர்ப்பதற்கும், ஜீரண சக்தியை உண்டாக்குவதற்கும், நரம்பும் தோலும் வேலை செய்வதற்கும வேண்டியது. இந்த B விட்டமின் அரிசி, கோதுமை, சோளம், பருப்பு, கீரை, தக்காளி இவற்றில் உண்டு. C விட்டமின் இரத்தத்தைத் தூய்மையாக்குவதோடு எலும்பையும் பற்களையும் வளர்க்கிறது; உடம்பில் நோய்க்கிருமிகள் அணுகாத வண்ணம் செய்கிறது. இவ் விட்டமின் இருந்தால், சொறி சிரங்கு வருவதில்லை. ஒருவருக்குப் பசி இல்லை எனில் C விட்டமின் இல்லை என்று உணரலாம். இவ்வுயிர்ச் சத்தானது பருப்பு,

தக்காளி, பச்சை எலுமிச்சை இவற்றில் நிறைய இருக்கிறது. D விட்டமின் பற்களைப் பாதுகாக்கிறது. இது பால், தயிர், வெண்ணெய் இவற்றில் உண்டு. இவ் விஞ்ஞான உண்மையை அறிந்து கொள்வதால் சத்துள்ள உணவில் பால், தயிர் முதலிய மேற்குறித்த பல பொருள்கள் கட்டாயம் இருக்க வேண்டும் என்பது புலனாகும்.

தமிழ் நாட்டிலுள்ள நம் உணவில் அரிசிச் சோறே பெரிதாக இருக்கிறது. இதனால், மாப்பொருள் கிடைக்கிறதே அல்லாமல், இருக்கவேண்டிய மற்ற ஊன் சத்துப் பொருள், கொழுப்புப் பொருள், உலோகச் சத்துப் பொருள், விட்டமின்களாகிய உயிர்ச்சத்துப்பொருள் என்னும் இவை வேண்டிய அளவு கிடைப்பதில்லை. பருப்புக் குழம்பு, வாழைத்தண்டு பொரியல், அகத்திக்கீரைக் கறி, ரசம், வெண்ணெய் இல்லாத மோர் இவை உடலுக்குப் போதிய சக்தியைக் கொடுக்கமாட்டா. மிளகு ரசம், உண்டதை ஜீரணிக்கச் செய்யுமே யன்றி வேறு பயனளிக்காது. வசதியுள்ளவர்களும் சத்துள்ள உணவின் அவசியத்தை உணராமையால், நல்ல சத்துள்ள உணவை உண்பதில்லை. சாதாரணமான உணவிலும் இன்றைக்குச் சீர்திருத்தம் விரைந்து செய்யவேண்டும்.

ஒவ்வொருவருக்கும், செய்யும் வேலையைப் பொறுத்து, ஆண்களுக்கு 2500 முதல் 3500 காலரி சூட்டளவு தரக்கூடிய உணவு வேண்டும். பெண்களுக்கு, ஆடவருக்கு வேண்டிய அளவில் ஐந்தில் நான்கு பங்கு வேண்டும். இதைப் பெறுவதற்கு நம்முடைய அன்றாட உணவில் அரிசிச் சோற்றுடன் கோதுமை, எண்ணெய், நெய், வீட்டுத் தயிர், காய்கறிகள், தேங்காய்

இவை சேரவேண்டும். கோதுமையை வெறுப்பது தவறு. கோதுமையால் செய்யும் சப்பாத்தியுடன் தக்காளியை உபயோகப்படுத்துவது நல்லது. வாரத்தில் சில நாட்களாவது ரொட்டியும் வெண்ணெயும் காலைச் சிற்றுண்டியாகக் கொள்ளலாம். நெய்யை விட வெண்ணெயே நல்லது என்கிறார்கள் உடல் நல ஆராய்ச்சி வல்லுநர்கள். இட்டிலி மிகச் சிறந்த காலைச் சிற்றுண்டியாகக் கருதப்படுகிறது. முறுகல் தோசை பயனற்றது. தோசை முறுகலானால் அதிலிருக்கும் மாப்பொருள் கருகிப் போகிறது. உருளைக்கிழங்கு, சேனைக்கிழங்கு இவற்றை வறுவலாகச் செய்தால், அவற்றிலுள்ள பொருள் கரியாகிவிடுகிறது. ஆதலால், அவற்றைக் கூட்டுக்கறியாகச் செய்துண்பது மிகவும் தகுதியானது. மலையாள அவியல் சத்துள்ளது. அடிக்கடி மஞ்சள் முள்ளங்கி, பீட்ருட், தக்காளி இவை மிகுதியாகச் சேர்க்கப்பட வேண்டும். தக்காளியில் இரும்புச் சத்து இருக்கிறது. இது 100 டிகிரி சூட்டிலும் கெடுவதில்லையாம். சிலர், கீரைகளையும் பழங்களையும் பயன்படுத்துவதே இல்லை. கீரையும் பழமும் மலச்சிக்கலை நீக்கும். ஒரு நாளைக்கு ஒரு வாழைப்பழமாவது தின்ன வேண்டும். கிடைக்கும்போது வேர்க்கடலையையும் கத்திரிக்காயையும் சேர்த்துக் குழம்பு செய்து வாரத்தில் ஒரு நாளைக்குச் சாப்பிடலாம். வேர்க்கடலையில் நல்ல சத்துண்டாம். ஆனால், அதை அளவுக்கு மேல் பயன்படுத்தல் கூடாது. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாகுமன்றோ?

வசதியுள்ளவர்கள் நாளொன்றுக்குக் கால் படி பாலாவது குடிக்க வேண்டும். வசதியுள்ள வீட்டுக்

குழந்தைகளுள் சிலர் பாலை வெறுப்பதுண்டு. பெற்றோர் அக் குழந்தைகளுக்குப் பால் குடிக்கும் பழக்கத்தை உண்டுபண்ண வேண்டும். காப்பியைவிடப் பால் குடிப்பதே நல்லது. காப்பி குடித்தாலும் அடிக்கடி குடிப்பதும் நல்லதல்ல. காலையிலே போட்ட காப்பித் தூளை மாலையிலே பயன்படுத்துவது உடலைக் கெடுப்பதாகும். காலையிலே போட்ட தேயிலையை மாலையில் உபயோகிப்பது ஆபத்தானது. தேநீர் குடிப்பதென்றால், அவ்வப் போது செய்து குடிக்க வேண்டுமே யன்றிக் காலையிலே செய்து வைத்து மாலையிலே குடித்தலாகாது.

நாம் சமைக்கும் பொருள்களில் சோடாமாவு போடுவது கூடாது. இது போடுவதால் பொருள்களிலிருக்கும் சத்துக் கெட்டுப்போகும்.

நாம் சமைக்கும் பாத்திரங்களிலும் வைக்கும் பாத்திரங்களிலும் கவனம் செலுத்துவது முக்கியம். உணவு சமைத்தலுக்கும் பால் காய்ச்சுவதற்கும் மட்பாண்டங்களே ஏற்றவை. தயிரை ஈயப்பாத்திரத்தில் வாங்கவும் கூடாது, வைக்கவும் கூடாது; அப்படிச் செய்வதால் கைப்புண்டாகும். மட்பாண்டங்களில் சமைப்பதற்கு வெட்கப்பட வேண்டுவதில்லை. நாகரிகம் என்னும் பெயரால் ஈயம் பூசின பாத்திரங்களில் சமைத்து வயிற்று நோயை வரவழைப்பது நன்றா? கூடாது. அலுமினியப் பாத்திரத்தில் பால் காய்ச்சினால் கைப்பிருக்கக் காணலாம். பாலை மட்பாத்திரத்திலோ நல்ல வெண்கலப் பாத்திரத்திலோ காய்ச்சுவதே நல்லது. தயிர் உறையிட்டு வைப்பதற்கு மண்பாத்திரம் அல்லது கண்ணாடிப் பாத்திரம் அல்லது பீங்கான் பாத்திரம் நன்று. ஈயம் பூசிய பாத்திரத்தில் தயிர்

தோய்ப்பது நன்று என்று சொல்வதற்கில்லை. விடுதி உணவுச்சாலை மருத்துவச்சாலை இவற்றிலும், திருமணம் முதலான நிகழ்ச்சிகள் நடக்கும் காலத்திலும் ஈயம் பூசிய பாத்திரங்களில் சமைப்பது தவிர வேறு வழி இல்லை. ஆனால், சிறிய குடும்பங்கள் உள்ள வீடுகளில் சமைப்பதற்கு மட்பாத்திரங்களைப் பயன் படுத்தலே மிகமிக நன்று. வேறு பாத்திரங்களைச் சிறிது நேரம் உணவு பரிமாறப் பயன்படுத்தலாம்.

உணவு உண்ணும்போது உணர்ச்சிக்கு ஆளாகாது மகிழ்ச்சியாக உண்ணவேண்டும்; இல்லாவிட்டால் உண்ட உணவின் பயனை உடலடையாது என்றறிக.

மரக்கறி உணவு கொள்பவர்கள் சிக்கனம் பாராது உடம்பைப் பாதுகாக்க நல்ல சத்துள்ள உணவை நல்ல பாத்திரங்களில் சமைத்து உண்ண வேண்டுவது மிகவும் அவசியம். அவரவர்கள் வருவாய்க்கு ஏற்ற வாறு சத்துள்ள பொருள் இது இது என்றறிந்து உண்பது முடியாததன்று. மற்றவர்களுக்குச் சொல்ல வேண்டுவதில்லை.

அமெரிக்கரின் அன்றாட உணவைப் பாருங்கள்: காலைச் சிற்றுணவு: 1. கோதுமைப் பாயசம், 2. மர வள்ளிக்கிழங்கால் செய்த உணவு, 3. பழரசம், 4. ரொட்டி, 5. முட்டை, 6. பழம், 7. காப்பி.

பகல் இரவு உணவு: 1. இறைச்சி, 2. வெள்ளரிக் காய்ப் பச்சடி, 3. உருளைக் கிழங்கு வேகவைத்தது, 4. காலிபிளவர், 5. பீன்ஸ், 6. தக்காளிப்பழம், 7. பச் சைப்பட்டாணி, 8. கீரை, 9. ஏதாவது ஓர் இனிப்பு, 10. காப்பி.

அமெரிக்க தேசீய உணவுச்சத்து ஆராய்ச்சிக்கழகம் நல்ல சத்துள்ள உணவில் இருக்கவேண்டியவற்றை ஐந்து உணவு விதிகள் என்று கீழ்வருமாறு வெளியிட்டிருக்கிறது :

(1) உருளைக்கிழங்குடன் இரண்டு அல்லது மூன்று வகையான காய்கறிகளை உண்க. அக் காய்கறிகளுள் கீரையும் மஞ்சள் முள்ளங்கியும் இருக்கட்டும். **A** விட்டமினும், **C** விட்டமினும் இவற்றால் கிடைக்கும். புதுக் காய்கறிகளும் தோட்டத்தில் விளையும் பழங்களும் சிறந்தவை.

(2) இரண்டு வகையான பழங்களைத் தின்க. அவற்றுள் ஒன்று புளிப்பானதாக இருக்கட்டும். இதனால், இன்றியமையாத **C** விட்டமின் கிடைக்கும்.

(3) நாள்தோறும் 2 தேக் கரண்டி வெண்ணெய் வேண்டும். ஒரு நாளைக்குக் கால்படி பால் குடிக்கவும். இவற்றால் **A** விட்டமின் பெறலாம்.

(4) பாற்கட்டியும் ஊன் வகையும் பயன்படுத்துக.

(5) ரொட்டியும் தானிய வகையும் உபயோகிக்கவும்.

நம்முள் பெரும்பாலோர் செம்மையான பொருளாதார நிலை இன்மையால், இம் மாதிரி நாள்தோறும் சாப்பிட முடியாதென்றாலும், வருவாய்க்கு ஏற்றவாறு ஓரளவு சத்துள்ள உணவை உண்ண முடியாமற் போகாது. உண்பன வற்றிலாவது வேண்டிய சீர்திருத்தம் செய்துண்ணுவதில் தடை என்ன உண்டு? திருவள்ளுவர் உணவைக் குறித்து,

> “ மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர்
> வளிமுதலா எண்ணிய மூன்று ”

என்று நன்கு வகுத்த விதியை என்றும் மறத்தலாகாது.

பழமையும் புதுமையும்

மக்கள் முன்னேற்றத்திற்கு எண்ணங்கள் தக்கனவாக அமையவேண்டுவது இன்றியமையாதது என்று சொல்லத் தேவை இல்லை. மனிதன் எண்ணமாகவே இருக்கிறன்; எண்ணமே மனித வடிவமாக இருக்கிறது. ஒரு சிலர் சமுதாயத்தில் பழமையே சிறந்தது என்று கருதினுல் முன்னேற்றம் ஏற்படுவது அரிது. வேறு சிலர் புதுமையே தலைசிறந்தது என்று கருதினுல் வேண்டாத மாறுபாடுகள் விளையும். வயதான பெரியவர்களுக்குப் பழமையிலே விருப்பும், புதுமையிலே வெறுப்பும் இருக்கக் காண்கிறேம். இவர்கள் முற்காலமே பொற்காலம் என்றும், தற்காலமோ நற்காலமாக இல்லை என்றும் எண்ணுகிறுர்கள். இளைஞர்களுக்குப் புதுமையிலே பெரு விருப்பும், பழமையிலே அருவருப்பும் இருக்கப்பார்க்கிறேம். இவ்விளைஞர்களோ தற்காலமே நற்காலம் எனவும், முற்காலம் அறிவு குறைந்த தீய காலம் எனவும்

கூறுகிறார்கள். இந் நாட்டில் மட்டுமன்றி எந் நாட்டிலும் இந் நிலையே பார்க்கலாம். இப்படி நினைப்பது சமுதாய முன்னேற்றத்துக்கும் நாட்டு நலனுக்கும் தினையளவாயினும் நன்மை அளிக்காது.

எவரும் ஓர் உண்மையை மறந்துவிடக் கூடாது: பழமையிலும் நன்மை உண்டு; புதுமையிலும் நன்மை உண்டு. பழமையைப் பழமை என்று தள்ளுவது தவறு; புதுமையைப் புதுமைக்காகக் கொள்வதும் தவறு. பழமையில் நல்லது இருக்குமானால், கொள்ளவேண்டும்; புதுமையில் தீமை இருக்குமானால் தள்ளவேண்டும். உலகத்தில் அறிஞர்கள் புதுமையில் நல்லது இருக்கிறது என்று போற்றும்போது, பழமையில் பற்றுக் கொண்ட காரணத்தால்,ஒரு சிலர் அதனைத் தூற்றுதல் அறிவுடைமை யாகுமா? ஆகாது. இதனாற்றான் வள்ளுவர்,

“ உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலாதார்”

என்று அறிவுறுத்தியுள்ளார். தேசியக் கவிஞர் பாரதியாரும் தமது புதிய ஆத்திசூடியில், “புதியன விரும்பு” எனப் புகன்றார். புதுமை என்று ஒன்றையும் புறக்கணிக்கக் கூடாது என்பது அவரது கருத்து.

ரயில் வண்டியும் மோட்டார் வண்டியும் புதியன என்று தள்ளிவிட்டு, மாட்டுவண்டிகளே பழையன என்று போற்றி, அவற்றிலே பிரயாணஞ் செய்யலாமா? அப்படிச் செய்தால் காலந்தானே வீணாகும்.

பழமை எண்ணத்தால் பலர் முற்காலம் என்று சங்க காலத்தையும், இராமாயண பாரத காலத்தையும்

பாராட்டிக் கூறுவர். சங்க காலத்தில் தண்டமிழ் நாட்டில் பாலும் தேனும் பொங்கி வழிந்தன என்றும், மக்கள் வறுமையின்றி வளமாக வாழ்ந்தார்கள் என்றும், வடநாட்டில் இராமாயண பாரத காலங்களில் மக்கள் எல்லாம் அற வாழ்வு வாழ்ந்து நற்பண்பு மிகுந்து பொற்புடையவர்களாகத் திகழ்ந்தார்கள் என்றும், அக் காலத்தில் இராம ராச்சியம் விளங்கியது என்றும் பலர் முழங்கக் கேட்கிறோம். சங்க காலத்திலும் ஒரு பக்கம் செல்வம் குவிந்திருந்தது; மற்றொரு பக்கம் வறுமைப்பேய் தலைவிரித்தாடியது. வறுமைச் சித்திரங்களையும், வாடிய முகங்களையும் சங்க நூலாகிய புறநானூற்றில் பரக்கக் காணலாம். துறையூர் ஓடைக்கிழார் என்பவர் ஆய் என்ற வள்ளலை நோக்கி,

“ஈர்க்குழாத்தோடு இறைகூர்ந்த
பேஎன் பகைஎன ஒன்றென்கோ
உண்ணாமையின் ஊன்வாடித்
தெண்ணீரில் கண்மல்கிக்
கசிவுற்றஎன் பல்கிளையொடு
பசி அலைக்கும் பகைஒன்றென்கோ”

என்று பாடிப் பரிசில் வேண்டியதையும், குமணவள்ளலைப் பார்த்துப் பெருஞ்சித்திரனார், “மன்னனே, என் அருமைத்தாய் தன் உயிர் போகவில்லையே என்று வருந்தி வாடுகிறாள். என் மனைவியோ ஒன்றும் இல்லாமையால் குப்பைக் கீரையினது முன் கொய்யப்பட்ட இடத்திலே முளைத்திருந்த இளந்தளிரைப் பறித்துக் கொண்டு உப்பின்றியே நீரை உலையாக்கொண்டு ஏற்றிக் காய்ச்சிய சோற்றுப் பருக்கைக்கும் வழி இல்லாது பசுமையான இலையைத் தின்று மாசுபடிந்த சேலையுடன்

வாடி வதங்குகிருள்'' என்று பாடியதையும், மற்ருெரு புலவரான பெருந்தலைச் சாத்தனுர் குமண மன்னனை அடைந்து, ''குமண வேந்தே, என் வீட்டு அடுப்பில் காளான் பூத்துக் கிடக்கிறது. தேம்பசி வருத்துகிறது. பசியினுல் தோலும் தசையுமாக இருக்கும் என் மனைவி, பெற்ற தன் சிறு குழந்தைக்குப் பாலூட்டும் நிலையில் இல்லை. குழந்தை பால் குடிக்க முயன்றும் பால் வாராமையால் தாய்முகம் நோக்க, தாய் என்முகம் நோக்க, நான் நின்முகம் நோக்கி வந்தேன்'' என்று தம் வறுமை நிலையை நம் உள்ளம் உருகும் முறையில் சித்திரித்துப் பாடியுள்ளதையும் பார்க்கும்போது, அன்றும் மக்கள் வறுமையால் வாடி வதங்கினுர்கள் என்றுதான் காண்கிருேம். தனக்கிருந்த மாங்கனியைத் தின்ற சிறுமியைக் கொன்ற கொடுங்கோன் மன்னனுன நன்னனும் அச் சங்க காலத்தில் இல்லாமல் இல்லை.

இராமாயண காலத்தில் தீயவர்களும் கொடியவர்களும் இருந்தார்கள் என்று எடுத்துக்காட்ட வேண்டுவதில்லை; பலரும் அறிந்ததே. பாரத காலத்திலும் துரியோதனனும், சகுனியும் இருந்ததில்லையா? கிறிஸ்துநாதர் வாழ்ந்த காலத்திலும் கொடுமை நிகழாமல் இல்லை. கிறிஸ்துநாதருடைய அடியார்களுள் ஒருவனுன யூதாஸ் காரியத்தே தன் குருநாதனை முப்பது வெள்ளிக் காசுக்காகப் பகைவர்க்குக் காட்டிக் கொடுத்தானே. அற வடிவமாக விளங்கிய காந்தியடிகள் காலத்தும் ஒரு கோட்சே இருந்து அவரது நல்லுயிரை அழித்தானே. ஆதலால், முற்காலமே நற்காலம் என்பது ஓரளவு உண்மையாயினும், பெரிய அளவு கற்பனையே என்பதைக் காண்கிருேம்.

அன்றும் கொடுமை இருந்தது; இன்றும் கொடுமை நிலவுகிறது. அன்றும் வறுமை மக்களை வாட்டியது; இன்றும் வறுமை மக்களை வாட்டுகிறது. அன்று மக்களுள் பெரும்பாலோர் பண்புமிக்கவர்களாக இருந்திருக்கலாம். மக்கள் தொகை அக்காலத்தில் குறைவாக இருந்ததாலும், வாழ்க்கை வசதி ஓரளவு கிடைத்ததாலும், மக்கள் நல்லவர்களாக இருந்திருக்கலாம். இன்றோ மக்கள் தொகை உலகில் 226 கோடியே 75 லக்ஷத்து 85 ஆயிரமாகப் பெருகியிருக்கிறது. இந்தியாவில் மட்டும் 36கோடி மக்கள் இருக்கிறார்கள். 10 ஆண்டுகளுக்கு 5கோடி மக்கள் இந் நாட்டில் பெருகுகிறார்கள். மக்களுக்கு உண்ண உணவு இல்லை; இருக்க இடம் இல்லை; உடுக்க உடையில்லை. பசியும் பட்டினியும் நாட்டில் தாண்டவமாடுகின்றன. மனிதன் எச்சில்இலைக்காகப் போட்டியிடுகின்றான். சிலர் சுருக்கமான குறுக்கு வழியில் பொருளைப் பெருக்கத் தொடங்குகின்றனர். உண்மையாக நடப்பவர்களுக்கு வாழ வழியில்லை. பொருளாதாரப் பங்கீடு எங்கும் பாங்காகப் பரவவில்லை. காலச் சூழ்நிலை இங்ஙனம் இருக்கையில், மக்கள் எங்ஙனம் அறவாழ்வில் வாழமுடியும்? நற்பண்புடையவர்களாக விளங்க முடியும்? ஆதலால், இக் காலம் கலி காலம் என்றும், தீமை மிகுந்த காலம் என்றும் சொல்வது அழகாகுமா? முறையாகுமா? எண்ணிப் பாருங்கள்!

ஆழ்ந்து சிந்தனை செய்து பார்த்தால் பழமைக் காலத்தைவிடப் புதுமைக் காலமே போற்றத்தக்க பொற் காலம் எனலாம். நம் முன்னோர்களுக்கு இல்லாத நன்மைகள் பல இன்று நமக்கு உண்டு. நாம் பல நூற்றாண்டின் அறிவை நலமுடன் பெற்றுள்ளோம். விஞ்ஞானக் கலைஞர்கள் இனிய வாழ்வளிக்க நமக்காக இன்று முற்றும்

துறந்த முனிவர்களைப்போலத் தொண்டாற்றி வருகிறார்கள்; தீராத நோய்களை யெல்லாம் தீர்த்து வைக்கிறார்கள். மனிதன் இன்று முயன்று முயன்று தூரத்தைக் குறுக்கி விட்டான்; காலத்தைச் சுருக்கிவிட்டான்; சந்திரமண்டலத்துக்கும் செவ்வாய் உலகத்துக்கும் போக முயன்று வருகிறான்; மக்களுக்கு ஆயுட்காலம் நீடிக்க கூடியவை யெல்லாம் செய்கிறான். இன்றைய அரசாங்கங்கள் மக்களுக்கு இனிய நல்வாழ்வை அளிக்க இடைவிடாது பாடு பட முயல்கின்றன. இத் தகைய காலமா தீய காலம்?

விஞ்ஞானம் செய்யுங் கொடுமையால் அஞ்ஞான காலம் இக் காலம் என நினைக்கலாம். 'கொடுமை நடப்பது விஞ்ஞானத்தின் குறையா? மனித நெஞ்சத்தின் குறையா?' என்று கூர்ந்து சிந்தித்துப் பாருங்கள். விஞ்ஞானத்தைப் பயன்படுத்தும் மனித இனத்தின் தவறே இது. கத்தி கூர்மையாக இருக்கிறது; கையை அறுத்து விடுகிறது. அறுத்தது கத்தியின் குற்றமாகுமா? இல்லை. அதைப் பயன்படுத்தியவர் குற்றமேயாகும். எனவே, நம்மை வாழவைக்கும் விஞ்ஞானத்தைக்கொண்டு, வீழவைப்பவர் குறையைக் கண்டு, இக்காலத்தைக் கொடியதாக எண்ணுவதா? கூடாது. காலத்தில் குறையில்லை; காசினியில் வாழும் மாந்தர் சிலரிடம் காணும் குறையாலே இக் கொடுமை நடமாடுகிறது. ஆதலால், இக் காலத்தைக் குறை கூறலாகாது.

புதுமையிலும் நன்மை உண்டு; பழமையிலும் நன்மையுண்டு. பழமையான நல்ல பழக்க வழக்கங்களுண்டு; பழமையான தீய பழக்க வழக்கங்கள் உண்டு. புதுமையான நற்பழக்க வழக்கங்கள் உண்டு; புதுமையான தீய பழக்கவழக்கங்கள் உண்டு. பழைய கண்

மூடிப் பழக்கங்கள் மண்மூடிப் போகட்டும்; நல்ல பழைய பழக்கங்கள் வாழட்டும். அங்ஙனமே புதிய பழக்க வழக்கங்களுள் நல்லன நிலைக்கட்டும்; தீயன ஒழியட்டும். பழையன கழிதலும் புதியன புகுதலும் வளர்ச்சிக்குரிய இயற்கையான முறைகள்.

> **"பழையன கழிதலும் புதியன புகுதலும்**
> **வழுவல கால வகையினானே"**

என்று பவணந்தி முனிவர் இலக்கணத்திற்குக் கூறியது சமுதாய வாழ்விற்கும் பொருந்தும். எனவே, "பழமையே நன்று. புதுமையே தீது" என்று எண்ணவேண்டுவதில்லை. பழமையில் நன்மை இருந்தால் கொள்ளுவோம்; தீமை இருந்தால் தள்ளுவோம்; புதுமையில் நன்மை காணின் போற்றுவோம்; தீமை காணின் தூற்றித் தள்ளுவோம். வாழ்வு இனிதாக மலரட்டும்.

விதியும் மதியும்

பண்டைக்காலம் முதல் இன்றுவரை பன்னெடுங் காலமாக நம் நாட்டில் நின்று நிலைத்து வேரூன்றியுள்ள சில கொள்கைகளுள் விதியைப்பற்றியது ஒன்று என்று கொள்ளலாம். இது சங்க நூல்களிலுமே காணப்படுகிறது. இது, ஆரியர் கொள்கையா தமிழர் கொள்கையா என்று பிரித்தறிய முடியாத நிலையில் பிணைந்து நிற்கிறது. சாதிப்பிரிவில் நம்பிக்கையற்ற பண்டைத் தமிழர்க்கு இக் கொள்கை கி. மு. 7-ம் நூற்றாண்டில் ஆரியர் தென்னாட்டில் புகுந்து கலந்த பின்பே நுழைந்திருக்க வேண்டும் என்று கருதலாம். சங்க காலம் ஆரியரும் தமிழரும் கலந்துவிட்ட காலம் என்பதில் ஐயமில்லை. ஆதலால், பல வடவர் கொள்கைகள் சங்க நூல்களிலும் இடம் பெற்றிருக்கக் காண்கிறோம்.

விதியைப் பற்றிய கொள்கை நம் நாட்டினரை மட்டுமன்றி மேலை நாட்டினரையும் கைப்பற்றியுள்ளது.

மில்டன் என்ற ஆங்கிலப் பெருங்கவிஞரும் 'மோட்ச இழப்பு' என்னும் நூலில் இக் கொள்கையைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். அமெரிக்க நாட்டு அறிஞரான எமர்சன் விதியைப்பற்றித் தமது கட்டுரையில் ஆராய்ந் துள்ளார். நம் நாட்டில் இக் கொள்கை ஒருவர் வாழ் வுக்கோ தாழ்வுக்கோ இன்றியமையாத காரணமாகப் பெரும்பாலோரால் நம்பப்படுகிறது. இத் தகைய கொள் கையைப் பற்றி ஆராய்ந்தறிவது வாழ்க்கையின் முன்னேற்றத்துக்கு நன்மை அளிக்கக்கூடும் என்று கூறலாம்.

தெய்வம், பால், முறை, நியதி, ஊழ் என்பன ஒரு பொருட்சொற்கள்: இவை விதியையே குறிப்பவை. ஒல்காப் புகழுடைய தொல்காப்பியனுர் முதலாகப் பாரதி யார் வரையில் எவரும் விதி என்னும் ஊழ்வினையைக் குறித்துச் சொல்லாமல் விட்டதில்லை. தொல்காப்பியர் அஃறிணை முடிவுபெறும் உயர்திணைச் சொற்களைச் சொல்லும் பொழுது, "காலம், உலகம், உயிரே, உடம்பே, பால்வரை, தெய்வம், வினையே, பூதம், ஞாயிறு திங்கள், சொல் எனவரும் சொற்கள் உயர் திணையைக் குறிப்பனவாயினும் அஃறிணை முடிவு கொள் ளும்" என்று குறிப்பிட்டுள்ளார். "பால்வரை தெய்வம் என்பது எல்லார்க்கும் இன்பத் துன்பத்திற்குக் காரண மாகிய இருவினையையும் வகுப்பது. வினை என்பது அறத் தெய்வம்" என்று சேனவரையர் உரையெழு தினர். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று தொடங்கும் புறநானூற்றுச் செய்யுளைப் பாடிய சோதிட வல்லுநரான கணியன் பூங்குன்றன் என்பார், "மழை குளிர்ந்து துளியைப் பெய்தலால் அமையாது கல்லைப்

அலைத்து ஒலிக்கும் வெள்ளம் புரண்டோடும் பேர்யாற்று நீரின் வழியே போகும் மிதவை (தெப்பம்) போல அரிய உயிர், ஊழின் வழியே போகும் என்பது அறிஞர் கூறிய நூலாலே தெளிந்தனம்'' என்று பொருள் தருமாறு 'யாதும் ஊரே' என்று தொடங்கும் பாடலில்,

> ''வானம் தண்துளி தலைஇ ஆனாது
> கல்பொருது இரங்கு மல்லல் பேர்யாற்று
> நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
> முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
> காட்சியில் தெளிந்தனம்''

என்று பாடித்தெளிந்தோர் நூலில் கண்டு தெளிந்ததாக உறுதியுடன் வற்புறுத்தியுள்ளார். புறநானூற்றுக்குப் பல நூற்றுண்டுகளுக்குப் பின் யாரோ ஒருவரால் பாடப்பட்டு ஔவையார் பேரில் வெளிவந்த ''நல்வழி''யும், ''பூந்தாமரையோன்பொறி வழியே'' என்று பிரமன் விதித்த வழியே எதுவும் நடக்கும் எனக் கூறியுள்ளது. சங்க காலத்தின் இறுதியில் வாழ்ந்த வள்ளுவர் ஒருவரே, ''ஊழ் உண்டெனினும் அதனை வெல்லலாம். விதி உண்டு என்பது உண்மையே. அதன் வலி பெரிது தான். எனினும், விதியை மதியால் வெல்லலாம்'' என்று நன்கு மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

> ''ஊழின் பெருவலி யாஉள? மற்றொன்று
> சூழினும் தான்முந் துறும்''

என்று அறத்துப்பாலில் எடுத்து வற்புறுத்திய வள்ளுவர் பொருட்பாலில், 'ஊக்கம் உடைமை' 'மடியின்மை' 'ஆள்வினையுடைமை' என்று மூன்று சிறந்த கருத்துக்கள் அமைந்த அதிகாரங்களை அமைத்து,

ஊழ்வலிது எனினும் மதியால் அதனைத் தாழ்வுறச் செய்யமுடியும் என வற்புறுத்தியிருப்பதைக் காணலாம். குமரகுருபரர் தவிர மற்றவர்கள் வள்ளுவரை நன்குணர வில்லை எனில் தவறாகாது. "ஊழின் பெருவலியாஉள?" என்று கூறிய வள்ளுவர், இங்ஙனம் மூன்று அதிகாரங்களை அமைத்து, "ஊழையும் உப்பக்கம் காண்பர்" என்று கூறியது எங்ஙனம் பொருந்தும் எனக்கருதலாம். இது முன்னுக்குப் பின் முரண்படுதலாகாது. முரண் படக்கூறுதல் வள்ளுவரிடம் காணமுடியாது. ஊழில் இரு வகை உண்டு: ஒன்று ஆகூழ், மற்றொன்று போகூழ். ஆகூழ் நன்மை செய்வது; போகூழ் தீமை செய்வது. போகூழ் தீமைசெய்வதாயினும் ஒருவர் அதனை இடை விடாது எதிர்த்து முயற்சிசெய்தால் அப் போகூழ் வலி யிழந்து நலிந்து மடிந்து போகும்; முயன்றவர் வெற்றி பெறலாம். ஊழ் ஒருமுறை அல்லது இருமுறை விலக் குவதன்றிப் பலமுறை முயல்வாரைத் தடுக்கமுடியாதாம். ஆதலால், செந்நாப்போதார் பிற்பகுதியாகிய பொருட் பாலில் மூன்று அதிகாரங்களை அமைத்து ஊக்கமிகுந்து மடியின்றி முயற்சியை மேற்கொண்டு விதியை மதியின் திறனால் வெல்லுமாறு வழி வகுத்துக் காட்டினார்.

முதலில் ஊக்கம் கொள்ளவேண்டும். ஊக்கம் என்பது உள்ளத்தில் எழும் கிளர்ச்சி. ஊக்கம் தோன்றி னால் மடிமை ஒழியும். மடிமை மடிந்தால் முயற்சி தோன் றும். உடலால் செய்வது முயற்சி. முயற்சி மட்டும் போதாது; மேலும் மேலும் முயலும் விடா முயற்சி வேண் டும். விடா முயற்சி இருந்தால் ஊழை நிச்சயமாக வெல்ல முடியும். இதுதான் வள்ளுவர் கருத்து. ஊக்க

முடைமை என்னும் அதிகாரத்தில் விதியை வெல்லுவதற்கான விடா முயற்சிக்கு அடிப்படையான ஊக்கத்தைக் கூற வந்த வள்ளுவர், ஊக்கமே ஒருவருக்கு ஆக்கம் என்றும், அந்த ஆக்கம் ஊக்கமுடையவர் இருக்குமிடம் தேடி ஓடி அடையும் என்றும், ஊக்கம் இல்லாதவர் உயர் மரங்களே அன்றி மக்களாகார் என்றும் எடுத்துக்காட்டி, அடுத்த அதிகாரமாகிய 'மடியின்மை' என்பதில் மடிமை என்னும் சோம்பல் ஒருவரை அடிமையாக்கும் என விளக்கி, அதற்கு அடுத்த அதிகாரமான 'ஆள்வினையுடைமை' என்பதில் முயற்சி செய்யவேண்டும் என்றும், விதியை வெல்ல முடியாமை ஒருவர்க்குப் பழியாகும் என்றும் வற்புறுத்தினார்.

விதியை நம்பி ஒருவரும் ஒரு செயல் முடித்தற்கு அரியது என்று சதிசெய்யக்கூடாது. எடுக்கும் முயற்சியே அது முடிப்பதற்கு ஏற்ற தகுதியைக் கொடுக்கும். வள்ளுவர் கூறும் இக் கருத்தை,

> **"அருமை உடைத்து என்று அசாவாமை வேண்டும்;**
> **பெருமை முயற்சி தரும்"**

என்னும் குறளில் காண்க. இதன் பின்னர் முயற்சி எடுக்க வேண்டுவதன் அவசியத்தை எடுத்துக்காட்டுவதற்காக,

> **"முயற்சி திருவினை ஆக்கும்; முயற்றின்மை**
> **இன்மை புகுத்திவிடும்"**

என்று "முயற்சியானது செல்வத்தை உண்டாக்கும்; முயற்சியின்மை வறுமையில் தள்ளிவிடும்" என எச்சரித்தார். இதுமட்டுமா கூறினார்? இல்லை. இதற்கு மேலும்,

"தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்"

என்றும் வற்புறுத்தினர். ஊழ்வினை பயனைத் தாரா தெனினும் எடுக்கும் முயற்சி வீணாவதில்லை. உடல் வருத்தத்திற்கு ஏற்ற பயனை முயற்சி தருவது உறுதி.

விதியிருப்பது உண்மையாயினும், நாம் ஊக்கங் கொண்டு சோம்பியிராது முயற்சி செய்து அதனை எதிர்த்துப் போராடினால் பயனுறுவது உறுதி என்பது நன்கு புலனாகும். மனிதர்களுக்குச் சுதந்திரம் உண்டு. எதிர்த்துப் போராடினால் மனிதர் வெற்றியடையலாம்.

எதை எடுத்தாலும் விதி என்பது பொருந்தாது. விமான ஓட்டியின் கவனக் குறைவினால் விமானம் கீழே விழுந்து நொறுங்கினால், அச் செயல் விதியின் செயலல்ல; விமான ஓட்டியின் தவறால் நிகழ்ந்தது. எதிர் பாராத முறையில் ஒருவருக்குப் பிறரால் கெடுதி நேரலாம். அதனை ஆராய்ந்து பார்த்தால் காரணம் புலனாகும். ஆராய்ந்து காரணம் சிறிதும் காண முடியாத போதுதான் விதியின் செயல் என்று அமையவேண்டும். மனச்சாந்தி அளிப்பதற்கே விதிக்கொள்கை பயன் படுகிறது.

பல ஆண்டுகளுக்கு முன்பு பினியன் என்ற ஆங்கில அறிஞர் இயற்றிய அக்பர் சக்கரவர்த்தியின் வரலாற்றைப் படித்தேன். அதில் அக்பர் விதியில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவர் என்று கண்டேன். எனக்கும் விதியில் ஆழ்ந்த நம்பிக்கை ஏற்பட்டது. எதைச் செய்யினும் விதியின்படி நடக்கும் என்று கருதி

ஒரு நாள் அந்தி நேரத்தில் வீட்டுக்கு வெள்ளையடித்த தால் கழற்றி வைக்கப்பட்டிருந்த கதவை எடுத்து மாட்டி னேன். கதவு பெரியது. நான் அதை மாட்டியபொழுது என் விரல் நசுக்குண்டது. விதியின்படி ஆகும் என்று நினைத்து மதியின்றிச் சிறு மருத்துவம் செய்தேன். முடி வில் பெரிய அறுப்பு மருத்துவரிடம் சென்று பணச்செலவு செய்து விரலையும் உயிரையும் பாதுகாக்க வேண்டுவ தாயிற்று. இது விதியைப் பற்றித் தவருக உணர்ந்த அறிவீனத்தால் வந்த விளைவு. ஆதலால், விதியைத் தவருக எண்ணி வாழ்க்கையில் விபத்தை விளைவித்துக் கொள்ளலாகாது என்றுணர்க.

விதியை நம்பிய அமெரிக்க அறிஞர் எமர்சன் விதி யைப்பற்றி எழுதிய கட்டுரையில் கூறியதைப் படியுங் கள். அவர் ஆங்கிலத்தில் எழுதிய கட்டுரையின் தமி ழாக்கம் இது. அவர் கூறியது என்ன என்பதை ஆய்ந்து பாருங்கள்.

''மனிதன் சிந்திக்கச் சிந்திக்க அவன் விதியினின்று விடுதலை அடைகிருன். மனச் சிந்தனையே மனித சுதந் திரம். இந்த வகையில் மனித மூளை, சிந்தனையால் விதியை எதிர்த்து விதியை அழிக்கவும் ஆற்றல் பெற்று விடுகிறது. விதியின் முன் கெஞ்சாமல் எதிர்த்து வேலை செய்வதே மனித சுதந்திரம்.......இயற்கையின் கொடிய தன்மையைப் பற்றிச் சிந்திக்காதே. **விதி விதி என்று கதறு கிறவர்கள் இழிவான அடிமையுள்ளம் உள்ளவர்களே.** முனைந்து முட்டிக் குமுறி உழை, வெற்றி காண்பாய்.........

''விதியின் கொடிய நிலையை வாழ்க்கையில் மனிதன் அஞ்சாது, சோர்வு அடையாது, எதிர்த்து நின்று பழக

வேண்டும். இதுவே விதியைப் பலனுடன் அனுபவிக்கும் முறை.........கடமையில் குறுக்கிடும் எதையும் எதிர்த்து நில். எப்போதும் விதி உறுதியான துணை என்று கருதி உழை. நல்ல பலனுண்டு; நம்பு, உறுதியாய் நம்பு!'' (ஸ்டார் பிரசுரம்)

தமிழ்க்காப்பியங்களில் விதிசெய்த சதியால் காப்பிய மாந்தர்கள் அல்லலுக்கு ஆளானதாக அறிவிக்கப்படுகிறேம். அப்படிக் கூறுவது உண்மையல்ல. நளனுக்கு அமைச்சர்கள் சூதினுல் உண்டாகக் கூடிய கேடுகளை நன்கு எடுத்துச் சொன்னுர்கள். "தீதுவருக, நலம் வருக; சிந்தையால் சூது பொர இசைந்து சொல்லினேம்; யாதும் விலக்கலீர் நீர்'' என்ருன் நளன். இது விதியின் செயலா? இல்லை. நளன் தனது குணக் கேட்டால் துன்பத்தை வரவழைத்துக் கொண்டான். கோவலன் மாதவியை நாடியதும், குன்றனைய பொருளைத் தொலைத்ததும் ஊழாலா? இல்லை. கோவலனது கலைப்பித்தால் ஆனது. கண்ணகியின் குறையும் அதற்குக் காரணமாகும்.

விதியின் செயல் என்று மதியிழந்து இருத்தல் அறிவுடைமையாகாது. விதிப்படி உயிர் போகும் என்று வேதனைப்பட்டுச் சாகும் நிலையிலிருப்பவர்களுக்கு மருந்து கொடாமல் இருக்கலாமா? குமர குருபரர், நீதிநெறி விளக்கத்தில்,

"உறுதி பயப்பக் கடைபோகா வேனும்
இறுவரை காறும் முயல்ப;—இறும் உயிர்க்கும்
ஆயுள் மருந்து ஒழுக்கல் தீது அன்ருல்; அல்லன போல்
ஆவனவும் உண்டு சில''

என்றார். ஆதலால், இறுதிகாறும் முயற்சி செய்ய வேண்டும். இராமபிரானைக் காட்டுக்குப் போகுமாறு கைகேயி கூறிய கட்டளையைக் கேட்டபோது இலக்குமணன் வெகுண்டான். இராமபிரான், "அது விதியின் பிழை" என்றான். அச் சொல்லைக் கேட்ட இலக்குமணன், "வானவர்க்கு வலிஇதாம் விதிக்கும் விதியாகும் என்வில் தொழில் காண்டி" என்றான். இலக்குமணனைப் போல யாவரும் விதிக்கும் விதி காண முயல வேண்டும்; ஊக்கம் இல்லாது மடிமைக்கு அடிமையாகாமல், தோல்வி மனப்பான்மை கொள்ளாமல், மதியைப் பயன்படுத்தி, விதியை வெல்ல வேண்டும். திரைப் படத்தில் காட்டப்படும் விதியின் சதி அதிகமான கதைக்கற்பனையே அல்லாது வேறல்ல. வள்ளுவர் கூறிய,

> **"பொறியின்மை யார்க்கும் பழியன்று; அறிவு அறிந்து**
> **ஆள்வினை இன்மை பழி"**

என்னும் பொன்மொழியை என்றும் மறவாது மதியால் விதியை வெல்ல முயன்றால், வெற்றி கிடைப்பது உறுதி.

நண்பராகா நாயகங்கள்

வாழ்க்கையில் நட்பு முக்கியமானது என்று சொல்லத் தேவையில்லை. நட்பே ஒருவரை ஆக்கவும் அழிக்கவும் வல்லது. நல்ல நட்பு என்பது நல்ல சூழ்நிலை; தீய நட்பு தீய சூழ்நிலை. வாழ்க்கையில் நட்பு இன்றியமையாததாயிருப்பதனால், தண்டமிழ் நூல்கள் எல்லாம் நட்பின் தன்மை, கொள்ளவேண்டிய நட்பு, தள்ளவேண்டிய நட்பு ஆகியவற்றை நன்கு ஆராய்ந்து பல கருத்துக்களை வளமுறத் தந்துள்ளன.

தான் வேறு, அவன் வேறு என்று இல்லாமல் ஒன்று படுவதே நட்பாகும். அகம் நக நட்பதே நட்பன்றி முகம் நக நட்பது நட்பு அல்ல; அழிவின்கண் அல்லல் உழப்பதே நட்பன்றிச் செல்வநிலையில் இன்பமளிப்பது நட்பல்ல. முட்டிகை (சம்மட்டி) போல முனியாது கொட்டி உண்டு, குறடுபோல் கைவிடுவது நட்பல்ல; கொல்லன் உலையில் சுட்டுக்கோல் போல் எரி புகுந்து நிற்பதே நட்பாகும்.

நட்பின்றி உலகில் ஒருவரும் இரார். அங்ஙனம் இருப்பின், ஆங்கில நாட்டுப் பேரறிஞர் பேக்கன் தம் கட்டுரையில் அறிவித்தவாறு, அவர் கடவுளாக இருக்க வேண்டும்: இல்லாவிடின் விலங்காக இருக்கவேண்டும். விலங்குகளிடத்தும் நட்புக் காணப்படுகின்றது. படைப் பின் மணிமுடியான மக்களுக்கு நட்பு வேண்டாம லிருக்குமா? ஒருவருக்குத் துன்பத்தைக் குறைத்துக் கொள்ளவும் இன்பத்தைப் பெருக்கிக்கொள்ளவும் தவருன வழிப்புகுங்கால் தட்டிவிலக்கவும் நண்பர் வேண்டும். நண்பரின்றி வாழ்வது நலமிழந்த வாழ்வே யாகும். ஆனால், நண்பர்கள் நல்ல நண்பர்களாக இருக்க வேண்டும். தீய நண்பர்கள் கூட்டுறவால் வாழ்வே அழிந்துபோகும். இதனால்தான் வள்ளுவர்,

"ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாந் துயரம் தரும்"

என்றார்.

பலர் எளிதாக நண்பராகின்றனர். சிலர் பல நாட்கள் பக்கத்தே இருப்பினும் நண்பராகாப் பான்மை யுடையவர்களாக இருப்பர். இவர்கள் நண்பர்களாக முயன்றாலும் ஏற்றுக்கொள்வார் இருப்பதில்லை. நண்ப ராகா நாயகங்களுள் பலர் தீய குணமுடையவர்கள் அல்லர்; நல்ல குணமுடையவர்கள். எனினும், அவர்கள் நடந்துகொள்ளும் முறையாலும், அவர்களுக்குள்ள குணக்கோளாறுகளாலும் இவ்வுலகத்தில் பாவம்! பிறர் அவர்களுக்கு நண்பர்களாவதில்லை. அவர்களே நண்பர் களாக முயன்றாலும், ஒருவரும் அவர்களை ஏற்றுக் கொள்வதும் இல்லை. ரயில் வண்டியில் சிலர் குறைந்த நேரத்தில் விட்டுப் பிரிய முடியாத அளவும், கடிதம்

போடவேண்டும் என்னும் அளவும் நண்பராகி விடுகின்றனர். கும்பிடுகள் போட்டே ஒரு சிலர் நண்பராகி விடுவதுண்டு. ஒரு சிலர் எத்தனை நாட்கள் பழகினாலும் இத்தரையில் ஒருவருக்கும் நண்பராகா நாயகங்களாகவே இலங்குவர்.

மூர்க்க குணமுடையோர் முதுநீர் உலகில் நண்பராவதில்லை; நண்பராயினும் அவர்களுடைய நட்பு வேர்க் கொள்ளாது. ‘‘நூருண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை நீர்க்குள் பாசிபோல் வேர்க்கொள்ளாது’’ என்று அதிவீரராம பாண்டியன் ‘வெற்றி வேற்கை’யில் கூறுவது பொய்யாகுமா? முன்கோபமுடைய மூர்க்க நாயன்மார்கள் தங்களுடைய குடும்பத்திலேயே அன்புபெற முடியாதிருக்கும்போது, பிறரிடத்தில் எப்படி நட்புப் பெறமுடியும்? சொந்த மனைவியும் மக்களும் முன்கோபக்காரரை எந்நாளும் விரும்பாதபோது, மற்றவர்கள் அவரை எங்ஙனம் விரும்பி நட்புக் கொள்வார்கள்? முன்கோபக் காரர்கள் ஒரு நாளும் நண்பர்களாக மாட்டார்கள்; அவர்களால் நண்பராக முடியவும் முடியாது. ‘உலக நீதி’ என்னும் நூல் ‘‘முன்கோபக்காரரோடு இணங்க வேண்டாம்’’ என்று வற்புறுத்துகிறது.

தன்னைப் பற்றியுமே தன் வாழ்வின் முன்னேற்றத்தைக் குறித்துமே எண்ணி வாழும் தன்னலம்மிக்கவர்கள் இந் நிலத்தில் நண்பர்களாக மாட்டார்கள். தம் மனைவி மக்களுக்குக் கொடாமல் தாம் மட்டும் நல்ல உணவு உண்கிற தன்னலப் பெரியார்கள் இல்லாமல் இல்லை. இவர்களிடம் அன்பைக் காணமுடியுமா? முடியாது. தன்னலமுள்ளவர்கள் பிறர் வாழ்வைக் கெடுக்க அஞ்ச

மாட்டார்கள். தங்கள் நலத்துக்காகப் பிறரைப் பாழ் படுத்தும் புண்ணியம் மிக்கவர்கள் நண்பர்களாக முடியுமா? நினைக்கத்தான் முடியுமா? ஒருவர் நண்பரானு லும் பொன்னே கொடுத்தும் இப் பாவிகளிடமிருந்து நீங்கி விடுவார். ஆதலால், நண்பராகா நாயகங்களுள் தலைசிறந்தவர்கள் தன்னலம்மிக்கவர்களே என்று குறிப் பிட வேண்டுவதில்லை.

ஒருவரை ஒருவர் ஏமாற்றும் திருவுடைய எத்தர்கள் இருவர் ஒரு நாளும் நண்பர்களாக இருந்து கூட்டு வாணிகம் செய்ய முடியாது. நம் நாட்டில் பெரும் பாலான கூட்டு வாணிகங்கள் நடைபெருததற்குக் கார ணமாயுள்ளவர்கள் இத்தகையோர்களே. தக்காணத் துப் பூர்வ கதைகளுள் ஒன்று, ‘தஞ்சாவூர் எத்தனும் திருச்சிராப்பள்ளி எத்தனும்’ என்னும் கதை. ஒருவன் களிமண்ணைக் கட்டுச்சோறு போல் கட்டி வைத்துக் கொண்டு போனுன்; மற்ருருவன் மணலைக் குறுநொய் போல் மூட்டை கட்டிக்கொண்டு சென்ருன். இருவரும் ஒரு குளத்தருகில் நண்பகலில் சந்தித்தனர். ஒருவன் மற்ருருவனைப் பார்த்து, “ஐயா என்னிடம் குறுநொய் இருக்கிறது. நடுப்பகலாயிற்று. பசி வருத்துகிறது. குறு நொய்யைச் சமைக்கும் வரையில் பசிதாங்காது. பழை யது இருந்து கொடுத்தாலும் குறுநொய் கொடுத்துவிடு வேன்” என்ருன். மற்றவன், “ஆ! ஆ! என்னிடம் பழையது இருக்கிறது. நீங்கள் பழையதை எடுத்துக் கொண்டு பசியை ஆற்றிக்கொள்ளலாம். குறுநொய்யை என்னிடம் கொடுங்கள்” என்ருன். இரண்டு எத்தர் களும் மூட்டைகளைப் பரிமாறிக்கொண்டு திரும்பிப் பாரா மல் நெடுந்தூரம் சென்று அவிழ்த்தார்கள்; ஏமாந்து

போனுர்கள். இத்தகைய எத்தர்கள் நண்பர்களாக முடியுமா? கிழக்கில் உதிக்கும் பகலவன் மேற்கில் உதித்தாலும் உதிக்கலாம்; இவர்கள் நண்பர்களாதல் இல்லை.

இழிவான பேச்சு, இழிவான செயல் இவற்றில் ஈடு படுபவர்களும் நண்பர்களாவதில்லை. "காக்கை உகக்கும் பிணம்" என்பதுபோல இவர்கள் இழிவான செயலில் ஈடுபட்டிருப்பதால், இவர்களை விரும்புகிறவர் களும் அத்தகையோர்களாகவே இருப்பார்கள். இவர் கள் நல்ல நண்பர்களாதலும் கடினம்.

வேருெரு வகையினரும் உண்டு. இவர்களிடம் இழிகுணம், இழிசெயல் இவை இல்லை எனினும், நடந்து கொள்ளும் பண்பின்மையால், இவர்கள் நண்பராகா நாயகங்களாக இருக்கிருர்கள். பிடிவாதம், குதர்க்கம், வாதாடுதல், ஒருவரது குடும்பத்தைப்பற்றிய இரகசிய மான செய்திகளை ஊன்றிக்கேட்டல் இவையுடைய வர்கள் நண்பர்களாக மாட்டார்கள். ஒருவருடைய குடும்ப இரகசியங்களைக் கேட்பது வெறுக்கத்தக்கது. என்ன சம்பளம் என்றும், என்ன சாப்பிட்டீர்கள் என்றும் கேட்பது தவறு. 'தோழனேடும் ஏழைமை பேசேல்' என்பது மூதறிஞர் கண்ட உண்மை. இப்படி யிருக்கக் குடும்ப இரகசியங்கள் கேட்பவர்களை யார் விரும்புவர்? எனவே, இத்தகையோர் எவரிடத்தும் நண்பராகார்.

உலகில் குற்றங்குறைகள் இல்லாதவர்கள் இல்லை "மனிதருடைய குற்றங் குறைகளையே கூறுபவன் கடவுளைப் பழித்தவனுவான்" என்று ஆங்கில நாட்டுப் பெரு

நாவலராக விளங்கிய பர்க் என்பவர் கூறியுள்ளார். ஒரு சிலர் குற்றங்குறைகளையே கண்டு புறங்கூறுவர். குற்றங்குறைகளைக் கூறிக்கொண்டு திரிபவர்கள் எவருக்கும் உற்ற நண்பர்களாக முடியுமா? முடியாது. அவர்கள் பிறர் வெறுப்புக்கே ஆளாவார்கள். ஆதலால், இத்தகையோரும் நண்பராதல் இல்லை.

தங்கள் துன்பங்களையும் குறைகளையும் சொல்லிக் கொண்டிருப்பவர்கள் உண்டு. இவர்கள் ஒருவரிடம் தங்கள் துன்பங்களையும் குறைகளையும் விரித்துக் கொண்டு அழுவார்களே அல்லாது, கேட்பவர்கள் கூறும் துன்பங்களையும் குறைகளையும் காதுகொடுத்துக் கேட்க மாட்டார்கள். ஒருவரை ஒருவர் கேட்கவும் சொல்லவும் இருந்தாற்றான், நட்பு ஏற்படும். இப்படியில்லாமல் ஒருவரே தம்முடைய குறைகளையும் துன்பங்களையும் கொட்டிக்கொண்டிருந்தால், கேட்பவருக்குத் தொல்லையாகத்தானிருக்கும். இத்தன்மையுடையோரைச் சிலர் கண்டாலே அஞ்சி அவர்களைக் காணாது அகன்றுவிடுவர். இத்தகையவர்களும் நண்பர்களாக மாட்டார்கள்.

நேர்மையாக நடந்துகொள்வதாகக் கூறி, 'வெட்டு ஒன்று; துண்டு இரண்டு' என்று உண்மை பேசுபவர்களும் நண்பர்களாக மாட்டார்கள். 'யதார்த்தவாதி வெகுஜன விரோதி' என்பது வடமொழியில் வழங்கும் பழமொழி. 'உண்மையுரைப்போன் ஊர்க்குப் பகைவன்' என்பது அதன் பொருள். ஒருவர் உண்மையாக இருக்கலாம்; ஆனால், கடுமையாக நடந்துகொள்ளலாகாது. நேர்மையாக இருக்கவேண்டுவது இன்றைக்

குத் தேவையானது; ஆனால், நேர்மை என்று சொல்லிக் கடுமையாகப் பேசலாகாது.

"இன்சொலால் அன்றி இருநீர் வியனுலகம்
வன்சொலால் என்றும் மகிழாது"

என்று நன்னெறிப்பாட்டில் சிவப்பிரகாசர் கூறுவது மிக மிக உண்மை. நேர்மையாக இருப்பவர்களும் இனிமையாக இருக்கவேண்டுவது உலகியல். அங்ஙனமின்றி நேர்மை என்னும் பெயரால் இனிமையான பண்பாடின்றி நடப்பவர்கள் நண்பர்களாக மாட்டார்கள்.

இவர்களனைவரினும் தனிப்பட்ட ஒருவகையினர் உண்டு. இவர்கள் மனித இனத்தையே வெறுப்பவர்கள். இம் மனித வெறுப்பாளர்கள் தனிமையாக இருப்பவர்களே அன்றி இனிய பண்புடையவர்களாய் அன்பு கொண்டு பிறரிடம் நட்புக்கொள்வதில்லை. இவர்கள் தனியினமானவர்கள். இத்தகையவர்களும் உலகத்தில் இல்லாமலில்லை.

மக்கள் இத்தகைய நண்பராகா நாயகங்களைப் போல் இல்லாமல் பலரோடு இனிமையாகப் பழகி வாழ வேண்டும். இப்படி வாழ்ந்தாற்றான் இவ்வுலக வாழ்வு இன்பமாய் இருக்கும் என்றறிக.

வாழ்வதும் வீழ்வதும்

வாழ்வதும் வீழ்வதும் எதனாலே?—இந்த
வையத்தில் அவரவர் குணத்தாலே;
ஆழ்ந்திதை யாவரும் உணர்ந்தாலே – மக்கள்
அழிதுயர் இன்றியே வாழ்வாரே.

— அ .கி. ப.

ஒருவர் உலகில் நன்கு வாழ்வதும் கெட்டு வீழ்வதும், ஆழ்ந்து சிந்திக்கும்போது, அவரது குணத்தாலே என்பது புலனாகாமற் போகாது. ஆண்மகனுக்காயினும் பெண்மகளுக்காயினும் நல்ல குணமிருந்தால் இனிய வாழ்வு உண்டு; தீயகுணமிருந்தால் வீழ்ச்சிதான் உண்டு. ஒரு சிலர் ஆவதும் அழிவதும் பெண்ணாலே என்கின்றனர். பெண்ணாலேதான் வீழ்ச்சி உண்டு என்பது மண்மீதிருந்து பெண்ணோரம் கூறுவதாகும். ஆனாலும் அழிவது உண்டு என்பதை யார் மறுக்க முடியும்? வேறு சிலர் ஒருவருக்கு வாழ்வோ

வீழ்வோ ஊழ்வினையால் உண்டாவதாகக் கூறுவர். இங்ஙனம் கூறுவது எங்ஙனம் பொருந்தும்? விதியைப்பற்றி உணராதவர்கள் விதியின் மீது போடும் பழி இது. ஒவ்வொருவரும் உண்மையை உணரவேண்டும்.

மானிடன் தன்னை ஆக்கிக் கொள்ளும் மாண்புடைய சிற்பி (Man is the architect of his own) என்று ஆங்கிலப் பழமொழி பகர்கிறது. சங்க நூல்களுள் ஒன்றுன பழமொழி, "தனக்கு மருத்துவன் தான்" எனச் சாற்றுகிறது. மற்றொரு சங்க நூலான நாலடியார்,

"நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும், தன்னை
நிலைகலக்கிக் கீழிடுவானும், நிலையினும்
மேன்மேல் உயர்த்து நிறுப்பானும் தன்னைத்
தலையாகச் செய்வானும் தான்"

என்று நமக்கு உரைக்கிறது. 'ஒருவர் தம்மை ஆக்கவும் கூடும்; அழிக்கவும் கூடும்' என்றே இந் நாலடி வெண்பா இயம்புவதைக் காணலாம்.

ஒருவரை ஆக்கவும் அழிக்கவும் காரணமாயிருப்பது அவரது குணமே என்பதில் ஐயமில்லை. ஒருவர் தம்மைக் குணத்தாலே உயர்த்திக் கொள்ளவும் தாழ்த்திக் கொள்ளவும் முடியும் என்பதை இலக்கியங்களிலும் நடைமுறை வாழ்க்கையிலும் காணலாம். கோவலன் தனக்கிருந்த அவசரக் குணத்தால் அழிந்தான். நளன் பெரியோர் சொன்னதைக் கேளாமல் கெட்டான். இங்ஙனம் பல எடுத்துக்காட்டுகள் கூறலாம்.

சந்தேகம் கொள்ளுதல், விட்டுக் கொடுத்தல் இன்மை, கடுங்கோபம் கொள்ளல், பேராசைப் படுதல், பிடிவாதமா யிருத்தல், தன்னலமே மிகுதல், சூதாடுதல்,

ஆனமுதலில் அதிகம் செலவுசெய்தல் முதலான தீய பண்புகளுள் எது மிகுதியாக இருக்கிறதோ அதுவே ஒருவரது வீழ்ச்சிக்குக் காரணமாகிறது. ஒத்துப்போதல், அன்பு கொள்ளுதல், பொறுமையற்றிருத்தல், துன்பத்தை இன்பமாக்கிக் கொள்ளல், சோம்பல் இன்மை, இன்சொல் பேசுதல், பெரியோர் சொற்கேட்டல், பொறுமையுடைத்தாதல் முதலிய குணங்களுள் ஏதாயினும் சில அதிகமாக இருக்குமானல், ஒருவர் வாழ்வு மேன்மையடைகிறது.

ஒரு சிலர் தீய குணமுடையவராக இருந்தும் வாழ்வு பெற்றுத் திகழ்கிறதைக் காண்கிறோமே என்று பலர் கருதலாம். உலகில் நல்லவர்களிடம் ஒன்றிரண்டு தீய பண்புகள் இருப்பதுண்டு; தீயவர்களிடம் ஒரு சில நல்ல குணங்கள் இருப்பதும் உண்டு. ஒருவருக்கு நல்ல பண்புகள் மிகுந்திருக்குமாயின் அவரிடமுள்ள தீய குணத்தால் அவருக்கு வீழ்ச்சி ஏற்படுவதில்லை. ஒருவருக்கு நல்ல பண்புகள் அருகித் தீய பண்புகள் மிகுந்துவிட்டால், அத் தீய பண்பின் மிகையால் அவருக்கு வீழ்ச்சி ஏற்படுகிறது.

தீய குணத்தால் ஆய பொருளிழந்து வாழ்வு இழந்து வீழ்ச்சியடைபவர்கள், தங்கள் குணக்கேட்டால் நேர்ந்த விளைவை நினையாது, விதியின் மீது பழியின்றிப் பழி போடுவார்கள். விதியா சதி செய்கிறது? இல்லை. இவர்கள் ஆழ்ந்து சிந்தித்துத் தவறுகளை உணர்கிறார்களா? உணர்வதில்லை. ஒருவர் தவறு செய்யலாம். ஆனல், அவர் தக்க பொழுதில் அத்தவறை உணர்ந்து திருந்திஞல் முன்னேறலாம்; இனிதாகவும் வாழலாம்.

எத்தனையோ செல்வக் குடும்பங்களில் ஆண்களின் குணக்கேட்டால் பொருளும் வாழ்வும் சிதைகிறதைக்கண் கூடாகக் காண்கிறோம். எத்தனையோ ஏழைக் குடும்பங் களில் இனிய குணத்தால் ஆண்களும் பெண்களும் அல்லலின்றி நல்ல வாழ்வு வாழப் பார்க்கிறோம்.

ஒரு குடும்பத் தலைவன் அல்லது ஒரு நாட்டுத் தலை வன் வண்டிச் சக்கரத்தின் குடம் போன்றவன். ஒரு சக்கரத்தின் குடம் உடைந்தால் அதிலிருக்கும் இலைகள் உடையும்; வட்டைகள் உடையும்; சக்கரம் உடையும்; வண்டியும் உடையும்; வண்டியில் ஏற்றியுள்ள பொருள் களும் விழுந்தழியும். அது போல ஒரு குடும்பத் தலை வனோ தலைவியோ குணக்கேடுடையவராக இருந்தால், அவருடைய மனைவி மக்களுமல்லாமல் சுற்றத்தாரும் அழிந்தொழிவர்; அல்லது துன்பத்துக்குள்ளாவர். ஒரு நாட்டின் தலைவன் தீய குணமுடையவனா யிருந்தால் அவ னுடைய நாடு பிணக்காடாக மாறிவிடும். ஆதலால், குடும்பத்துக்கோ நாட்டுக்கோ தலைவராயிருப்பவருடைய குணக்கேட்டால் அல்லல் ஏற்படுவதை அறியலாம்.

ஷேக்ஸ்பியர் எழுதிய ஒப்புயர்வற்ற துன்பியல் நாட கங்களை நன்கு ஆராய்ந்த ஆங்கிலப் பேரறிஞரும் பெருந் திறனாய்வாளருமான எ. சி. பிராட்லி என்பார் தமது 'ஷேக்ஸ்பியர் துன்பியல் நாடகங்கள்' என்னும் தலை சிறந்த திறனாய்வு நூலில், துன்பியல் நாடகத் தலைமாந்தர் களுடைய வீழ்ச்சிக்குக் காரணம் அவர்களுடைய குணக் கேடே என்று எடுத்துக் காட்டுகிறார். அவர், ஷேக்ஸ்பிய ருடைய துன்பியல் நாடகத் தலைமக்களுக்குத் துன்பங்கள் அல்லது அழிவுகள் திடீரென்று வானத்திலிருந்து அவர்க

ளுடைய தலையில் இடிபோல் விழுந்து விடவில்லை என்றும், அவ்வழிவுகள் ஒருவரால் அவர்களுக்கு உண்டாக்கப்படவில்லை என்றும், அவர்களுக்கு நேர்ந்த அழிவுகள் அவர்களுடைய செயல்களால் ஆனவை என்றும், குணக் கேட்டால் அத் தலைமாந்தர்களது அழிவு உருவாயிற்று என்றும், ஷேக்ஸ்பியருக்குக் குணமே ஊழ்வினையாகிறது என்றும் வற்புறுத்துகிறார். மாக்பெத் என்பவன் பேராசைக் குணத்தால் பேரழிவுற்றான். ஹாம்லெட் என்னும் கதாநாயகன் காலக் கழிவுக்குணக் கேட்டால் அழிந்தான் இங்ஙனம் ஆராய்ந்தால் வாழ்வும் வீழ்வும் ஒருவரது குணத்தால் உண்டாவதை நன்கு காணலாம்.

இளைஞர்கள் ஆணாயினும் பெண்ணாயினும் நல்ல பண்புகளை உருவாக்கிக் கொண்டு நாட்டின் திருவாகவும் வீட்டின் விளக்காகவும் திகழ வேண்டும். ஒருவர்க்குத் தீய குணம் தீய சூழ்நிலையால் உருவாகலாம்; அது உருவாகும் முன்பே அதனை அழிக்க முனைய வேண்டும். வள்ளுவரும்,

> "வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்
> வைத்தூறு போலக் கெடும்"

என்று நம் உள்ளத்தில் பசுமரத்து ஆணிபோல் படியுமாறு கூறி எச்சரித்துள்ளார். நல்ல குணத்தை நாம் விடலாகாது. 'குணமது கைவிடேல்' என்று ஆத்திசூடியும் அறிவுறுத்துகிறது. இளைஞர்கள், ஆணாயினும் பெண்ணாயினும், இவ்வுண்மையை உணர்ந்து, தீய குணங்களைப் பெரிதும் களைந்து, இனிய பண்புகளைப் பெற்று நல்ல உலகில் வல்லவர்களாய் நனி சிறந்து வாழ வேண்டும்.

இயல்பறிவு

மனிதரை விலங்குகளினின்று பிரிப்பது அறிவின் மாண்பினாலே என்று குறிப்பிட வேண்டுவதில்லை. பொது மறையை உலகுக்கு அளித்த பொய்யா மொழியார், மனத்தைச் சென்ற இடத்தால் செலவிடாது தீயதை நீக்கி நல்லதன்கண் செலுத்துவது அறிவு என்றும், எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருளில் மெய்ப்பொருள் காண்பது அறிவு என்றும், தான் சொல்லும் சொற்களை அரிய பொருளவாயினும் கேட்பார்க்கு எளிய பொருளாக விளங்குமாறு மனங்கொளச் சொல்லிப் பிறர்வாய்க் கேட்கும் சொற்களின் நுண்ணிய பொருள் காண அரிதாயினும் அதனைக் காண வல்லது அறிவு என்றும், எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு அவ்வது உறைவது அறிவு என்றும், உலகத்தோடு ஒட்ட ஒழுகல் அறிவு என்றும், எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப் பொருள்களினின்று மெய்யாகிய பொருளைக் காண்பது அறிவு என்றும் பலவகை

யான அறிவையும் பொதுப்பட விளக்கியுள்ளார். அறிவுடைமையை விளக்கவந்த பரிமேலழகர், கல்வி கேள்விகளானுய அறிவோடு உண்மை யறிவுடையனுதல் என்று விளக்கம் தந்திருக்கிருர். ஒப்பும் உருவும் என்னும் தொல்காப்பிய சூத்திர உரையில் நச்சினுர்க்கினியர், "அறிவாவது நல்லதன் நலனும் தீயதன் தீமையும் உள்ளவாறு உணர்தல்" என்று அறிவுக்கு இலக்கணம் கூறினுர். கலித்தொகை என்னும் சங்க நூல், 'அறிவெனப்படுவது பேதையார் சொல் நோன்றல்' என்கிறது. அறிவு என்று சொல்லப்படுவது அறியாதார் ஒருவர் புண்படச் சொல்லும் சொல்லைப் பொறுத்துக் கொள்ளுதல் என்பது இவ்வடிக்குப் பொருளாகும். இங்ஙனம் தமிழிலக்கியங்களில் அறிவுக்கு விளக்கம் காண்கிருேம்.

அறிவு பல வகைப்படும். நூலறிவு, மெய்யறிவு, பொது அறிவு, பகுத்தறிவு, நுண்ணறிவு, இயல்பறிவு என அறிவைப் பல வகையாகக் கூறலாம். இயல்பறிவை ஆங்கிலத்தில் "காமன் சென்ஸ்" என்பர்.

'காமன்சென்ஸ்' என்னும் இயல்பறிவு உள்ளுணர்வால் தோன்றுவது: ஐம்புலனறிவுக்குப் பொதுவாக அமைவது; யாவரும் அறிந்துகொள்ளக் கூடியது; உலகியல் நடைமுறைக்கு இன்றியமையாதது. ஒன்றை இப்படிச் செய்யவேண்டும் என்று அறிவிப்பதும் சமயோசித புத்தியை அளிப்பதும் இவ்வறிவே ஆகும்.

ஹாஸ்லிட் என்ற ஆங்கிலப் பேரறிஞர், நடைமுறை நிகழ்ச்சிகளில் தவறின்றி உள்ளுணர்ந்து நடந்துகொள்ளும் திறமையைக் கொடுக்கும் அறிவே இயல்பறிவாகும் என்று இவ்வறிவுக்கு இலக்கணம் கூறியுள்ளார்.

எந்த எந்தச் சமயத்தில் எந்த எந்த முறையில் நடந்து கொள்ள வேண்டுமோ அந்த அந்த முறையில் நடந்து கொள்ளும் அறிவே சிறந்த அறிவாகும் என ஆங்கில நாட்டுப் பிரதமராக ஒரு காலத்தில் இருந்த வால்போல் என்பார் குறிப்பிட்டுள்ளார். இதுதான் இந்த இயல் பறிவு. இது வாழ்க்கைக்கு இன்றியமையாதது.

இவ்வறிவு சாதாரண அறிவுதான். என்றாலும், எல்லாரிடத்திலும் இது காண்பதரிது. முன்குறித்த ஹாஸ்லிட், பெண்களிடத்தில் இவ்வறிவு மிகுதியாக இருப்பதாகக் கூறியுள்ளார். இவ்வறிவு விஞ்ஞானத் தால் மலர்வதில்லை; மெய்ஞ்ஞானத்தால் அலர்வதில்லை; உழைப்பினால் உண்டாவதும் இல்லை; இயற்கையாகவே தோன்றுகிறது. இவ்வறிவும் கல்வியும் செவ்வையாகக் கலந்துவிட்டால் அங்ஙனம் கலந்த அறிவு, சிறந்த அறி வாக விளங்குவது காணலாம்.

இயல்பறிவு யாது என்று தெரிந்துகொள்ள வேண்டுவதில்லையா? தெரிந்து கொள்வோம். ஒருவர் இன்னொருவரிடத்தில் மற்ற வேலைகளைச் செய்யுமாறு கூறியதோடு காலையில் சிற்றுண்டி வாங்கிவந்து தருமாறு சொல்லியதாக வைத்துக் கொள்வோம். அவர் மற்ற வேலைகளை யெல்லாம் பார்த்து முடித்துவிட்டுச் சிற் றுண்டியைப் பன்னிரண்டு மணிக்குக் கொண்டு வந்து கொடுத்தால், அவரது அறிவை என்னென்று கூறுவது? இயல்பறிவு அவருக்கு இல்லை என்றுதானே சொல் வோம்.

இப்படி எத்தனையோ பேர்கள் செய்கிறார்கள்? ரயில் கூலியாள் சாமான்களை வண்டி மேடையில் கொண்டுவந்து வைத்து, உள்ளதற்கு மேல் கூலி கேட்

கிறான். வண்டி புறப்படப்போகிறது. ரயில் வண்டி யேறுபவர் கூலியாளிடம், "வண்டி போனாலும் போகட்டும். நிலைய அதிகாரியிடம் இதை முறையிடுவேன்" என்று வண்டி மேடையில் நின்று பேசிக்கொண்டிருப்பதா? கூடாது. அவர் ஏதாவது கூலியாளிடம் கொடுத்துவிட்டுப் புறப்படவேண்டும். அவர் அப்படிச் செய்யாது அவனிடம் சொற்போர் புரிந்துகொண்டு ரயிலை விட்டுவிடலாமா? 'ரயில் வண்டி போனாலும் போகட்டும்' என்றிருப்பது இயல்பறிவு இன்மையால் ஏற்படுவது.

ஒன்றிலே வெறுப்புக் கொண்டவர்களிடமும், ஒரு குறிப்பிட்ட கொள்கையிலே ஆழ்ந்த பற்றுள்ளவர்களிடமும், பிடிவாதமுடையவர்களிடமும் செருக்குடையவர்களிடமும், டாம்பீகம் பேசுபவர்களிடமும், பொய்யே கூறி வாழ்பர்களிடமும், புறங்கூறித் திரிபவர்களிடமும், ஒருவருக்கொருவர் சண்டையிடுமாறு கலகம் செய்யும் திருத்தொண்டர்களிடமும் இயல்பறிவு உருவாவதில்லை. ஓர் ஆராய்ச்சியில் ஈடுபட்டு அதில் அல்லும் பகலும் அநவரதமும் ஆழ்ந்திருப்பவர்களிடமும் இயல்பறிவு தாழ்ந்து மங்கி விடுவதுண்டு. பூமியின் இழுப்பாற்றலைக் கண்டு பிடித்த விஞ்ஞானக் கலைஞரான நியூட்டனைப் பற்றி ஒரு செய்தி சொல்லப்படுகிறது. அவர் தம்மிடமிருந்த தாய்ப்பூனைக்கும் அதன் இரு குட்டிகளுக்குமாக ஒரு தச்சனிடம் மரக்கூடு ஒன்று செய்துவருமாறு கூறினார். அத் தச்சன் கூடு ஒன்று செய்துவந்து வைத்தான். இருக்கவேண்டிய முறைப்படி அக் கூட்டிற்கு ஒரு வாயில் இருந்தது. மூன்று பூனைகளும் எப்படி ஒரு வழியாகக் கூட்டில் போக முடியும் என்று நியூட்டன் ஐயம்

கொண்டு தச்சனைக் கேட்டார். தச்சன் பூனைகளை ஒவ்வொன்றாகக் கூட்டில் போகுமாறு செய்தான். அவர் அதைக் கண்ட பின்பே ஐயம் தெளிந்தார். இங்ஙனம் அவர் ஐயமுற்றது இவ் வியல்பறிவின்மையாலல்ல;பேராராய்ச்சியில் மனம் பதிந்திருந்தபடியாலாகும். அவரிடம் இவ் வியல்பறிவு மங்கி நின்றது. அதன் காரணமாக அவருக்கு அத்தகைய ஐயம் ஏற்பட்டது. இங்ஙனம் பேரறிஞர்களிடம் இவ்வறிவு மங்கி நிற்பதுண்டு.

கவிஞர்கள் காப்பியங்களில் நம்பத்தகாத கற்பனைகளை அமைத்துப் பாடுவதால் அவர்களிடம் இயல்பறிவு இல்லை எனநினைத்தலாகாது. கவிஞர்கள் கற்பனையுலகில் வாழ்பவர்களாதலால், அவர்களை இக் குறைக்கு ஆளாக்குதல் தவறாகும்.

நேர்மையும் நீதியும் நடுவுநிலைமையும் வாழ்க்கை அனுபவமும் உள்ளவர்களிடம் இயல்பறிவு என்றும் மங்காது மறையாது இருக்கும். ஆதலால், வாழ்க்கையில் சிறந்து விளங்க வேண்டுபவர்கள் இந்த விலைமதிக்க முடியாத இரத்தினமாகிய இயல்பறிவைப்பெற்று விளங்க வேண்டும்.

பொது அறிவின் அவசியம்

ஆணாயினும் பெண்ணாயினும் வாழ்க்கையை வள முற நடத்தவேண்டு மென்றால், பொது அறிவு பெற வேண்டுவது அவசியமாகும்.

பலவகை அறிவுக்கும் அடிப்படையானது பொது அறிவு. ஒருவர் எவ்வளவு இலக்கிய, இலக்கண, சமய, தத்துவ அறிவு பெற்றிருந்தாலும், அவருக்குப் பொது அறிவு இல்லை என்றால், அவரது அறிவு பயனற்ற அறிவாகும் என்பதில் ஐயமில்லை.

அறிவு என்பது தனித்துறை அறிவு, மெய்யறிவு நுண்ணறிவு, இயல்பறிவு, பொது அறிவு எனப் பல வகைப்படும். இலக்கணம், இலக்கியம், பொறி இயல் முதலான துறைகளுள் ஒன்றில் மட்டும் அறிவு பெறுவது தனித்துறை அறிவாகும். ஒன்றை நுனித் தறியும் அறிவையே நுண்ணறிவு என்கிறோம். வள்ளுவர் இதனை, 'நுண்மாண் நுழைபுலம்' என்பர்.

"நுண்ணுணர்வு இன்மை வறுமை; அஃது உடைமை பண்ணப் பணைத்த பெருஞ்செல்வம்" என்கிறது நாலடியார். எல்லா அறிவுக்கும் அடிப்படையாகவும், கருவூலமாகவும், ஊற்றுகவும் இருந்து ஒருவரை நல்லறிஞராக்குவது பொது அறிவேயாகும்.

பொது அறிவு இல்லாதவர்கள் முதுநீர் உலகில் பலர் போற்றுமாறு வாழ்வது அரிதினும் அரிதே. ஒருவர் இலக்கணத்தில் வல்லுநராக இருக்கலாம். மற்றொருவர் கம்பன் பாடிய இனிய பாக்கள் பதினாயிரத்தையும் செம்மையாக மனப்பாடம் செய்து கேட்டார்ப் பிணிக்குமாறு சொற்பொழிவாற்றலாம். இவர்களுக்குப் பொது அறிவு இல்லை எனில் தவமுயன்று கற்றவையெல்லாம் கடலில் கரைத்த பாகு போல் பயனற்றுப் போகும். ஆதலால், ஆங்கிலக் கல்விமுறைத் திட்டத்தில் ஆரும் படிவம் வரையில் பொது அறிவு பாங்காக அமைந்திருக்கக் காணலாம்.

கணக்கு, வரலாறு, விஞ்ஞானம், அரசியல், இலக்கியம் முதலியவற்றைப் பற்றி அறிவதுதான் பொது அறிவாகும். நம்மைச் சூழ்ந்திருப்பனவற்றைப் பற்றித் தெரிந்துகொள்வதுதான் பொது அறிவு என்பது. நம் தமிழ்நாட்டில் பண்டைக் காலத்தில் இலக்கிய இலக்கணங்களை மட்டும் மக்கள் கற்றார்களில்லை; சின்னஞ் சிறு வயதில் கணக்கு, பொது அறிவு முதலிய பாடங்களையும் படித்தார்கள். பொது அறிவுக்காகச் சில நூற்றாண்டுகளுக்கு முன் சதகங்கள் தோன்றின. இச் சதகங்களின் வாயிலாக மக்கள் அக் காலத்துக்கு வேண்டுவனவாகக் கருதப்பட்ட பொது அறிவைப் பெற்றார்கள்.

பொது அறிவு நூல்களே சதகங்கள். தமிழ் மொழியில் குமரேச சதகம், அறப்பளீசுர சதகம் ஆகிய இவை தலை சிறந்தவை. குமரேச சதகத்திலிருந்து பொது அறிவைக் காட்டக் கீழ் வரும் பாடல் ஒன்றே போதுமானது. இக் காலத்துக்கு வேண்டாதனவும் இச் சதகங்களில் உண்டு. என்றாலும், அக் காலத்தில் இச் சதகங்கள் பொது அறிவுக் களஞ்சியங்களாக இருந்தன. நோய்க்குக் காரணங்களைக் குமரேச சதகச் செய்யுள் ஒன்று கூறுவதைப் பாருங்கள் :

''கல்லினால் மயிரினால்
மீதூண் விரும்பலால்
கருதிய விசாரத்தினால்
கடுவழி நடக்கையால்
மலசலம் அடக்கையால்
கனிபழங்கறி உண்ணலால்
நெல்லினால் உமியினால்
உண்டபின் மூழ்கலால்
நித்திரைகள் இல்லாமையால்
நீர்ப்பகையினால் பனிக்
காற்றில் உடல் நோதலால்
நீடுசருகு இலை ஊறலால்
மெல்லிநல்லார் கலவி
அதிகம்உள் விரும்பலால்
வீழ்மலம் சிக்குகையினால்
மிகுசுமை எடுத்தலால்
இளவெயில் காய்தலால்
மெய்வாட வேலை செயலால்
வல்இரவிலே தயிர்கள்

சருகுஆதி உண்ணலால்
வன்பிணிக்குஇடம் என்பர்காண் ;
மயிலேறி விளையாடு
குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே''

[கனி - மிகவும் கனிந்த; பழங்கறி - நாட்பட்ட அல்லது ஊசிப்போன கறி.]

விஞ்ஞான காலமான இந் நாளில் ஆணும் பெண்ணும் எஞ்சாத பொது அறிவு பெறவேண்டுவது மிகமிக அவசியமாகும். ஒருவர் தம்மைப்பற்றி அறிந்து கொள்வதே முதன்மையான அறிவு. ஏன் பிறந்தோம் என்று அறிந்துகொள்வதைப் பார்க்கிலும் எங்கே போகிறோம் என்று தெரிந்துகொள்வதைக் காட்டிலும், இந்த உடம்பின் தன்மைகள் யாவை என்றும், எப்படி உடம்பைப் போற்றினால் உலகில் பாயும் படுக்கையுமாக இல்லாமல் நோயின்றி உடல் நலத்துடன் வாழமுடியும் என்றும் அறிந்து கொள்ளவேண்டும். உண்ணும் உணவு சீரணமாகக் குறைந்தது மூன்று மணி நேரமாகும் எனவும், ஓர் உணவு நேரத்துக்கும் மற்றோர் உணவு நேரத்துக்கும் இடையீடு குறைந்தது மூன்று மணி நேரமாவது இருக்கவேண்டும் எனவும், முக்கியமாக மலச்சிக்கலுக்குக் காரணங்கள் கீரை, பழம் ஆகியவற்றை உணவில் பயன்படுத்தாமையும் காலை நேரத்தில் மலங்கழிக்கப் பழகாமையும் ஏதாவது வேலை காரணமாக மலங்கழிக்காது அடக்கிவைப்பதுமேயாகும் எனவும், மலச்சிக்கலால் மூலநோய் உண்டாகும் எனவும் அறிந்துகொள்ள வேண்டுவது அவசியம் என்று சொல்ல

வேண்டுமோ? இத்தகைய உடல்நல அறிவுதான் முதன்மையாக வேண்டுவதாகிய அறிவாகும்.

உடல் நலத்தைக் குறித்து அறிந்துகொள்வது போலவே, நாட்டின் ஆட்சி முறை எவ்வாறு நடை பெறுகிறது என்றும், மாநில அரசாங்கத்தில் மேல் சபை கீழ்சபை உண்டு என்றும், மத்திய அரசாங்கத் திலும் மக்கள் சபை, மேல்சபை என இரண்டு சபைகள் இருக்கின்றன என்றும், இந்திய அரசியலமைப்பில் காணப்படும் இன்றியமையாத சட்டங்கள் இவை என் றும் தெரிந்துகொள்வதும் அவசியம். இவைபோன்ற அடிப்படை அரசியலறிவு இக் காலத்தில் இன்றியமை யாதது. 'இராமன் ஆண்டால் என்ன? இராவணன் ஆண்டால் என்ன?' என்று எண்ணுமல், இன்று மக்க ளாட்சிக் காலத்தில் வயது வந்தோர் ஒவ்வொருவரும் வாக்குரிமை பெற்றுள்ள காரணத்தால், நன்கு தெரிந்து கொள்ள வேண்டும். பாரதியார் கூறியவாறு நாம் இன்று நாட்டு மன்னர்களாய் விட்டோம். நல்ல ஆட் சியோ தீய ஆட்சியோ ஒவ்வொருவரும் வாக்களிப் பதையே பொறுத்திருக்கிறது. ஆதலால், ஆணும் பெண்ணும் நாடாளும் அறிவையும் நன்கு அடைய வேண்டும்.

பொருள் வழக்குச் சட்டங்கள் (**Civil laws**), குற்ற வழக்குச் சட்டங்கள் (**Criminal laws**) ஆகிய இவற் றைக் குறித்தும் மேற்போக்காகப் பார்த்துத் தெரிந்து கொள்வதும் வேண்டும். இந்துக்களுக்காகத் தனிச் சட்டமும், முஸ்லீம்களுக்கெனத் தனிச் சட்டமும் கிறித்தவர்களுக்காகத் தனிச் சட்டமும் எனப்பொருள் சட்டங்கள் உண்டு. வீடோ நிலமோ கிறித்தவரிட

மிருந்தோ முஸ்லீமிடமிருந்தோ வாங்குகிறவர், அவரவர்களுக்குரிய சட்டங்களை அறிந்து வாங்காவிட்டால், பிற்காலத்தில் அச் சொத்தை ஒரு வேளை இழந்துவிடவும் நேரிடும். தக்க வழக்கறிஞர் உதவியின்றி வீடு நிலங்கள் வாங்குவது கூடாது. தரகர்களால் ஏமாற்றப்படாமலிருப்பதற்கு இச் சட்ட அறிவு வேண்டுவதாகும். குற்றச் சட்டம் எல்லாருக்கும் பொதுவானது. அதில் இந்து என்றோ முஸ்லீம் என்றோ கிறித்தவர் என்றோ வேறுபாடு இல்லை. குற்றச்சட்டமாகிய நீதிபதியின் முன் அனைவரும் ஒரே தன்மையுடையராகவே கருதப்படுவர். கொலைக் குற்றத்தில் சூழ்ச்சி செய்து திட்டமிட்டுக் கொலைபுரிவதற்கும், தற்காலிகப் பைத்தியமாகிய கோபாவேசத்தால் கொலை செய்வதற்கும் தண்டனை அளிப்பதில் வேறுபாட்டை நீதிபதிகள் சான்றுகளைக் கொண்டு காட்டுவதுண்டு.

இந்து சமயத்தைச் சேர்ந்த ஒருவன் ஒரு மனைவி இருக்க மற்றொரு மனைவியை மணந்துகொண்டால் தண்டனைக்கு ஆளாவான். இத்தகைய சட்டப் பொதுஅறிவு வேண்டாதது என்று கூறமுடியுமா?

பொருளாதாரத்தைப் பற்றிய அறிவும் வேண்டுவதாகும். பலர், அரசாங்கம் விருப்பம்போல் காகித நாணயங்களை அச்சிட்டு வழங்கலாம் என்று தவறாகக் கருதுகின்றனர். எந்த அரசாங்கமும் குறிப்பிட்ட அளவு பொன்னோ வெள்ளியோ அரசாங்க உடைமையாக வைத்திராமல் நினைத்தபடி காகித நாணயங்களை அச்சிட்டு வழங்கமுடியாது. அதில் மிகுந்த கட்டுப்பாடு உண்டு. கள்ள நாணயங்களை மாற்றுவது பெருங்குற்றமாகும். ஒருவர் கள்ள நாணயத்தால் ஏமாற்றப்பட

லாம். அவர் அதைக் கொடுத்து மற்றொருவரை ஏமாற்ற முனைவது குற்றமாகும். அதனால், கள்ள நோட்டு எண்களைப் பெருவணிகர்கள் குறித்து வைத்துக் கொண்டு நாம் கொடுக்கும் ஒவ்வொரு நோட்டின் எண்களையும் ஒத்துப் பார்த்துப் பார்த்து வாங்குவதை வங்கியிலும் (Bank) பிற இடங்களிலும் காணலாம். இத்தகைய பொது அறிவு, தேடிய பொருளை இழக்காதிருப்பதற்கு அவசியமாகிறது.

'களவும் கற்றுமற' என்னும் பழமொழி ஒன்று உண்டு. களவைக் க்ளவு செய்யக் கற்க வேண்டுவதில்லை; ஆனால், களவுக்கு இரையாகாமல் இருக்க அதைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுவது அவசியம். இவ் வறிவை நாளிதழில் ஊர்காவல் துறை அதிகாரிகள் வெளியிடுவதைப் படித்துத் தெரிந்துகொள்ளலாம். பல களவுகளை நாளிதழ்களில் வெளியிடுவதன் நோக்கம், பொதுமக்கள் பல களவு செய்யும் முறைகளை அறிந்து கள்வர்களால் களவாடப்படாமல் விழிப்பாய் இருப்பதற்கேயாகும். ஒரு வீட்டில் நோயாய்ப் படுத்திருக்கும் நண்பர் பார்க்க வரச்சொன்னார் என்று கூறி, வீட்டுக்குரியார் வெளியேறியதும், திருடர்கள் வீட்டுப் பொருள்களைத் திருடிச் சென்றார்கள். தன்னுடைய குழந்தையைப் படம் பிடிப்பதற்காகத் தங்கச்சங்கிலி ஒன்றை உடனே திருப்பித் தருவதாகச் சொல்லிக்கடனாக வாங்கிச் சென்றவள், அதனுடன் ஓடிவிட்டாள். ஜிப்பாவின் பக்கப் பைகளிலிருக்கும் பணப்பைகளே பெரும்பாலும் களவாடப்படுகின்றன. ஒருவன் காக்கை வலியால் கீழே விழுந்து துன்பப்படுவது போல் நடித்துக் கொண்டிருக்கும்போது, அவனுடைய திருட்டுக்குழுத் தோழர்கள்,

குனிந்து, விழுந்தவனை இரக்கத்தால் பார்த்துக் கொண்டிருப்பவர்களுடைய பணப்பைகளைத் திருடுகிற புது முறைத் திருட்டு இப்போது நடைபெற்று வருகிறது. விழிப்பாய் நடந்து கொள்வதற்கு இச் செய்திகளைப் படித்தறிவது அவசியமாகிறது.

இத்தகைய பொது அறிவைப் பெறுவதற்கு வழியாக இந்நாளில் இருப்பன நாளிதழ்களும் வார மாத வெளியீடுகளுமாகும். நாளிதழ்கள் இன்று நாடெங்கும் கற்றோருக்கும் மற்றோருக்கும் பொது அறிவைப் பரப்பும் சாதனங்களாக உள்ளன. எவரும் இன்று நாளிதழ்களைப் படிக்காமல் இருக்க முடியுமா? முடியாது. கற்றவர்களுள்ளும் நாளிதழ் படியாதவர்கள் பலர் இருக்கின்றனர். இவர்கள் இருளுலகத்தில் இருப்பவர்கள். இவர்களுடைய அறிவில் இருள் சூழ்ந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. எவ்வளவு மொழித்திறமையுடையவர்களாயினும், எவ்வளவு இலக்கிய இலக்கணக் கலையறிஞர்களாயினும், பொதுஅறிவுக் களஞ்சியமாக உள்ள நாளிதழ்களைப் படியாதவர்களை நல்லறிஞர்கள் என்று கூறமுடியுமா? முடியாது.

ஆதலால், படித்தவர்களும் கட்டாயம் நாளிதழைப் படிக்க வேண்டும். வருவாய் உள்ளவர்களும் மனத் தரித்திரத்தால் நாளிதழ்களைப் படிக்க விரும்புவதில்லை; படித்தாலும் கடன் வாங்கிப் படிக்கிறார்கள். நாளிதழ்களைக் கடன் வாங்கிப் படிப்பது கூடாது; நாளிதழ் வாங்குகிறவர்கள் பிறருக்குக் கடனாகக் கொடுத்துப் படிக்க விடலாகாது. இங்ஙனம் செய்வதால் நாளிதழ்கள் இந்நாட்டில் வளர வில்லை. நாளிதழ்களைக் கடன் கொடுக்காத கடமையை மேற்கொள்பவர்கள் நட்டை

இழந்து போகாத வகையில் செய்யவேண்டும். ஓரிரு நாட்கள் நாளிதழ் கொடுப்பதால் தவறில்லை. நாள் தோறும் கடன் கொடுப்பது நன்றாக இல்லை. வருவா யுள்ளவர்கள் நாளிதழை நாள்தோறும் கடன் வாங்கிப் படிப்பதும் நன்றாகக் கருதுவதற்கில்லை என்று சொல்ல வேண்டுவதில்லை. வருவாய் இல்லாதவர்கள் படிப்பகங் களில் சென்று படிக்கவேண்டும். குறைந்த வருவாயுள் ளவர்கள் இருவர் சேர்ந்து நல்ல நாளிதழ் வாங்கிப் படிக்க வேண்டும். நாளிதழ்களைப் படிப்பவர்கள் அவற் றில் வரும் வழக்குகள், நடுவர்கள் அளிக்கும் தீர்ப்புகள், விஞ்ஞானம் முதலியவற்றை விடாது படிக்கவேண்டும். வயிற்றுக்கு உணவளிக்கிறோம். மூளைக்கும் அறிவாகிய உணவு கொடுக்கவேண்டாமா? ஆதலால், ஆடவர்களும் மாதர்களும் நல்ல தமிழில் வெளிவரும் நாளிதழ்களைப் படித்துப் பொது அறிவு பெற்று வீட்டுக்கும் நாட்டுக்கும் சமுதாயத்திற்கும் பயன்படக் கூடிய நல்லறிஞர்களாக விளங்குவார்களாக!

அண்டை வீடு போற்ற வாழும் பண்பாடு

தண்டமிழ் நாட்டில் வாழும் நம் மக்கள் நல்ல பண்பாடுடையவர்கள் என்று இம் மாநிலத்தில் எண்டிசையும் பாராட்டப்படுகிறார்கள்; புகழப்படுகிறார்கள். இதற்குக் காரணம் நம் பண்பாட்டில் மிகுந்தகுறை இல்லாததேயாகும். என்றாலும், நம்மவர்கள் நல்ல அண்டை வீட்டினராய் வாழும் பண்பாட்டை ஏனோ அறியாதிருக்கிறார்கள்? நாட்டில் நாம் நற்குடி மக்களாக வாழத் தெரிந்து கொள்வது மட்டும் போதாது; அண்டை வீட்டினருக்கு எந்த வகையிலும் தொல்லை கொடாத முறையில் வாழும் பண்பாட்டையும் அறிந்துகொள்ள வேண்டும்.

நல்ல முறையில் நடந்து கொள்வது பண்பாடு. பிறருக்குத் தொல்லை கொடாத முறையில் நடந்து கொள்வதோ மிகவும் உயர்ந்த பண்பாடு.

சமுதாயம் ஒருவரை ஒருவர் மதித்து வாழும் அடிப்படையில் அமைந்துள்ளது. ஒருவர் தம்மைப்போலப் பிறரையும் மதித்து வாழ்ந்தாற்ருன் சமுதாய வாழ்வு சிறந்து விளங்கும்; இல்லையென்ருல் சமுதாய வாழ்வு விலங்கு வாழ்வாக மாறிவிடும். 'தன்னைப் போன்று பிறனையும் நினைப்பாயாக' என்று விவலிய மறை வற்புறுத்துகிறது.

சமுதாய வாழ்வு இனிதாக விளங்க வேண்டுமென்ருல், சமுதாயத்தின் உறுப்பினராக உள்ள ஒவ்வொருவரும், நல்ல அண்டை வீட்டினராக வாழவேண்டும். ஒரு வீட்டில் இருப்பவர் அல்லது ஒரே வீட்டில் ஒட்டுக்குடியினராய் வாழ்பவர், அண்டை வீட்டினர் அல்லது பக்கத்துக் குடியினரது சுகாதாரத்தையோ மனநிலையையோ வழக்க பழக்கங்களையோ தாக்காதவாறு நடந்துகொள்ள வேண்டும்.

முற்காலக் கிராம அல்லது நகர அமைப்புமுறைவேறு; இக் கால அமைப்புமுறை வேறு. பண்டைக்காலத்தில் அரசர் வீதி, அந்தணர் வீதி, வணிகர் வீதி, வேளாளர் வீதி என இன முறையில் குடியிருப்புக்கள் அமைந்திருந்தன. ஒரே வழக்க பழக்கமுள்ளவர்கள் ஒரே குடியிருப்பில் வாழ்ந்த காரணத்தால், ஒருவரை ஒருவர் அறிந்து வாழ்ந்தார்கள். இக் காலத்தில் அம்முறையில் குடியிருப்பு அமையமுடியாது; அமைய வேண்டுவதுமில்லை. இக் காலம் எல்லாரும் ஓர் இனம் என்று எண்ணும் காலம். சாதிசமய வேறுபாடு மறந்து ஒன்றுபட்டு ஒரு நாட்டுக் குடிமக்கள் என்று வாழுங்காலம் இக் காலம். ஒரே தெருவில்-ஏன்-ஒரே? வீட்டில் பல்வேறு சமயத்தாரும் பல்வேறு

இனத்தாரும் ஒரு குடி மக்களாய் பெருகிய அன்புடன் வாழும் காலம் இது. பக்கத்துவீட்டினர் சைவராய் இருக்கலாம்; வைணவராய் இருக்கலாம்; கிறித்தவராய் இருக்கலாம்; முஸ்லீமாய் இருக்கலாம்; ஆத்திகராய் இருக்கலாம்; நாத்திகராய் இருக்கலாம்; பார்ப்பனராய் இருக்கலாம்; அரிசனராயிருக்கலாம். எவராக இருந்தபோதிலும் ஒருவரை ஒருவர் மதித்து வாழவேண்டும். ஒருவர் மற்றொருவர் சமயக்கொள்கையைக்குறித்தோ வாழ்க்கை முறையைக் குறித்தோ கடவுட் கொள்கையைக் குறித்தோ ஏளனஞ் செய்தோ இழிவாகக் கூறியோ வாழலாகாது. வேற்றுமையில் ஒற்றுமை காண்பதுதான் இன்றைய பண்பாடு. பக்கத்து வீட்டினர், அண்டைக்குடியினர் மனம் புண்படாத முறையில் தக்கவர்களாக நடந்து கொள்வது இன்றியமையாதது.

இன்று உயரினம் தாழ்வினம்என்பது அநாகரிகமாகி விட்டது. நாத்திகராயுள்ள ஒருவர் ஆத்திகரான மற்றொருவரைப் பார்த்து நகையாடுதல் கூடாது. அண்டை வீட்டுக் கிறித்தவக் குடும்பத்தினர் காலையிலோ இரவிலோ வழிபாடு நடத்தும்போது, பக்கத்து வீட்டினர் அமைதியாக அந்த நேரத்தில் இருக்கவேண்டுமே யல்லாது கூச்சலிடுதல் பண்பாடாகாது. குழந்தைகள் கூச்சலிட்டாலும் பக்கத்து வீட்டார் வழிபாட்டை மதிக்கக் கூச்சலை அடக்கவேண்டும். "நாம் இந்துக்கள்; நமக்கு என்ன கவலை?" என்றிருத்தல் கூடாது. இங்ஙனமே கிறித்தவர்களும் முஸ்லீம்களும் மதித்து நடக்கவேண்டும்.

பக்கத்து வீட்டினர் சுகாதாரத்தை மதிப்பதும் இன்றியமையாத பண்பாடு. பலர் தங்கள் வீட்டுக் குழந்தைகளைப் பக்கத்து வீட்டுப் படுக்கையறையின் அருகில்

இருக்கும் கால்வாயில் மலங்கழிக்க விடுவதை அன்றாட வாழ்விலே பெருநகரங்களிலும் சிறு நகரங்களிலும் நடக்குங் காட்சியாகக் காண்கிறோம். பெரியவர்களும் பக்கத்து வீட்டினரைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. சிலர், குழந்தைகளின் மலத்தைத் துணியில் துடைத்துக் கொண்டுபோய் அண்டை வீட்டுப் பக்கத்தில் கூசாமல் போடுகின்றனர். வேறு சிலர் வாழைப்பழத் தோலையோ தேங்காய் ஓடுகளையோ பக்கத்து வீட்டுக்கருகில் வீசியெறிவதுண்டு. உடைந்த புட்டி ஓடுகளையும் பிறர் காலில் பொத்தி ஆபத்து உண்டாக்குமே என்று கருதாதுபோட்டு விடும் கருணையாளர்களும் இருக்கிறார்கள். மாடியிலிருந்து மாண்புறக் குப்பையை அண்டை வீட்டினரைக் குறித்துக் கவலைப்படாமல் கொட்டி அபிடேகம் செய்பவர்கள் இல்லாமல் இல்லை. மேல் மாடியிலிருந்து வெற்றிலை பாக்கு எச்சிலைத் துப்பும் மேன்மக்களும் உளர். பக்கத்து வீட்டினர் சுகாதாரத்தை ஒரு சிறிதும் கவலைப்படாது எருமைகளையும் பசுக்களையும் வைத்துக்கொண்டு சாணத்தைக் குவித்துவைத்து, இடத்தைத் துப்புரவு செய்யாமல், கொசுக்களையும் ஈக்களையும் பெருக்கும் பெருமான்கள் பல்லாயிரவர் இருக்கின்றனர். வானொலிப் பெட்டியைத் திருப்பித் தேர்வுக்குப் படிக்கும் மாணவர்கள் காதைத் துளைத்துப் படிக்க முடியாதவாறு செய்பவர்களும் உண்டு. தேர்வுக் காலத்திலும், சில வீட்டினர், பக்கத்து வீட்டு மாணவர்களைக்குறித்து ஒரு சிறிதும் கவலைப்படுவதில்லை. இப்படிச் செய்வது உரிமை என்றும் பலர் வாதம் செய்கின்றனர். இதுவா உரிமை? பிறருக்கு ஊறு செய்யாதவாறு நடந்து கொள்ளுவதில் உரிமையைப் பயன்படுத்த முடியுமே அன்றிப் பிறருக்குத்

தொல்லை தரும் முறையில் பயன்படுத்துவது உரிமை யாகாது. இதை நம் மக்கள் நன்குணர வேண்டும்.

மற்றொன்றும் பக்கத்து வீட்டினர் மறந்து செய்வ துண்டு. அண்டை வீட்டிலே வயதானவர்கள் இருப் பார்கள். அவர்களுக்குச் சிறு ஒலியும் உறக்கத்தைக் கெடுத்துவிடும். உறக்கம் மூதேவி அல்ல; சீதேவி. உறக்கம் உடலை வளர்க்கும் சஞ்சீவி. உறக்கம் கெட்டால் உடற் சுகம் கெடும். பெரியவர்களுக்கு மட்டுமல்லாது யாருக்கும் உறக்கம் கெடலாகாது. இங்ஙனமிருக்க அண்டை வீட்டினர் தம்முடைய அருமையான நாயை அறையில் விட்டுப் பூட்டுப் போட்டுத் திரைப்படம் பார்க் கச் செல்வர். நாயோ ஓலமிடத் தொடங்கிவிடும். நாய் குலைக்கும் சத்தம் அண்டை வீட்டார் மண்டையைப் பிளக்கும். பக்கத்து வீட்டார் உறங்கமுடியுமா? முடியாது. இங்ஙனம் நாயை வீட்டில் விட்டுப் பூட்டுப்போட்டுப்போக அது குலைத்துப் பிறர் உறக்கத்தைக் கெடுத்து விடுமாறு செய்வது பண்பாடாகுமா? நீதியாகுமா? முறையாகுமா?

அண்டை வீட்டில் எலும்புருக்கி நோயால் துன்புறு கிறவர்கள், சளியைத் துணியில் துப்பி அத்துணியை எரிக்க வேண்டுமேயல்லாது, பக்கத்து வீட்டுக்கருகில் துப்பி அவ்வீட்டில் இருப்பவர்களுக்கும் அந்நோய் பரவு மாறு செய்தல் கூடாது.

ஆதலால், நம்மவர்கள் நல்ல பக்கத்து வீட்டின ராய்ப் பிறருக்குத் தொல்லை கொடாதவாறு வாழப் பழக வேண்டும். பிறருக்கு ஊறு செய்யாதவாறு வாழ்வதே இனிய பண்பாடு. நாம் நமக்காக மட்டும் வாழாமல் பிறருக்காகவும் வாழவேண்டும் என்பதை என்றும் மறத்தலாகாது.

பொழுது போக்கு

பொழுது போக்கு வாழ்க்கைக்கு இன்ப விழுது. இக் காலம் மக்கள் இன்பத்தை நாடிவாழும் இயல்புடைய காலம். ஆண்டி முதல் அருஞ்செல்வர் வரையில் யாரும் இன்பத்தை அடைய விரும்புகின்றனர். எவரும் இன்பத்தை விழைவதில் தவறில்லை. பொழுது போக்கு நல்ல முறையில் அமைந்தால், அது விழுமிய இன்பத்தை அளித்து வாழ்க்கையையும் வளம்படுத்தும்.

இன்பத்தைத் தேடி நாடும் இக் காலத்தில், இன்பமளிக்கும் சாதனங்களுக்குக் குறைவில்லை. இருந்தாலும் தக்கதொரு சாதனத்தைத் தேர்ந்தெடுத்து மேற்கொண்டால் பொழுது போக்கு, வாழ்வில் முழு இன்பத்தையும் அளிக்கவல்லதாகும். ஆனால், பொழுதுபோக்கு ஒன்றே வாழ்வில் முழுமையான இன்பத்தை அளித்துவிட முடியாது என்றறியவேண்டும். அதற்குச் சூழ்நிலையும் பிறவும் துணையாகவேண்டும். முதலாவது குடும்ப வாழ்க்கை

இடும்பையின்றி யிருக்கவேண்டும். மனைவியாலும் மக்களாலும் எத்தகைய தொல்லையும் ஏற்படலாகாது. இரண்டாவது தூய்மையும் நேர்மையான செயலும் வேண்டும். மூன்ருவது மனத்துக்கு ஏற்ற ஊன்று கோலான ஒரு தொழில் வேண்டும். இம் மூன்றும் ஓரளவு செம்மையாக இருந்தால்தான் பொழுது போக்கு ஒருவருக்கு இன்பமளிக்கும் எனலாம்.

கல்வியின் பல நோக்கங்களுள் ஒன்று, ஓய்வு நேரத்தை நல்வழியில் பயன்படுத்துவது. ஓய்வு என்பது வேலை மாற்றமே அன்றிச் சோம்பலாயிருப்பது என்ருே, 'கும்பகரணனும் தோற்றும் உனக்கே பெருந்துயில்தான் தந்தானே?' எனப் போற்றுமாறு உறங்கிக் கிடப்பது என்ருே கொள்ளலாகாது. உரிமையின்றிப் பொருள் தேடுவதற்காக உழைப்பது வேலை; உரிமையோடு இன்பத்துக்காகச் செய்வது பொழுது போக்கு. பொழுது போக்கிலும் வேலை உண்டு. இன்பத்தின் பொருட்டு ஆற்றிலோ பெருங்குளத்திலோ படகு ஓட்டுவது பொழுது போக்கு. படகு ஓட்டுவதே தொழிலானல் அது வேலையாகிறது. ஆதலால், பொழுது போக்கில் கண்மூடி மௌனியாய்ச் சும்மா சுகம் பெறுவதில்லை; ஓய்வு நேரத்தை இன்பமாக்க மனத்துக்கு ஏற்றதொன்றைச் செய்வதுண்டு.

பலர், "ஐயோ எனக்கு ஓய்வு நேரம் பாரமாக இருக்கிறது. நகரத்தில் இருந்தாலும் நேரம் போகும். நாட்டுப் புறத்துக்குச் சென்று சில நாள் தங்கியிருந்தாலும் பொழுது போக்குக்கு வழி இல்லையே" என்று கூறுகின்றனர். இளைஞர் பலர், "கிராமத்துக்குப் போனல் ஓய்வு நேரம் பெருஞ்சுமையாய் இருக்கிறது. பொழுது போக்கு

இல்லாமல் இருக்கிறோம்'' என முறையிடுகின்றனர். அரசாங்க அலுவலிலோ வேறு தொழிலிலோ ஓயாது உழைத்தவர்கள் வேலையிலிருந்து விடுதலை யடைந்ததும் ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தத் தெரியாது கண் தெரியாக் காட்டிலே கண்ணைக் கட்டிவிட்டதுபோல் இந்தப் பெரிய நிலவுலகில் வழி தெரியாது அலமருகின்றனர். ஒரு சிலர் பொழுது போக்க வழி தெரியாமல் குழியில் விழக்கூடிய சீட்டு ஆட்டத்திலும் சொக்கட்டான் விளையாட்டிலும் புகுந்து விடுகின்றனர். எப்போதாவது இவற்றை ஆடுவதால் தவறு ஏற்படாது. ஆனால், இவற்றைப் பொழுது போக்காகக் கொண்டால், வாழ்க்கைக்குப் பழுது ஏற்படும் என்று சொல்லவேண்டுவதில்லை.

பண்டைக்காலத்தில் தண்டமிழ் நாட்டில் அரசர்களும் செல்வர்களும் பெரும்பாலும் புனல் விளையாடியும் பொழில் விளையாடியும் உண்டாட்டு நிகழ்த்தியும் பொழுதுபோக்கினார்கள். ஆடவர் சிலர், யானை, குதிரை, தேர் இவற்றை ஏறிச் செலுத்தியும் காடைப் போர், சேவல் போர், யானைப் போர், எருமைக்கடாப் போர் முதலியவற்றைக் கண்டுகளித்தும் பொழுது போக்கினர். மகளிர் சிலர் ஊடியும் கூடியும், இன்னிசை பாடியும், விறலியர் ஆடல் பாடல் கேட்டும், புனலாடியும் பூச்சூடியும் பொழுது போக்கினர். முதற் குலோத்துங்கன்,

''கலையினொடும் கவிவாணர் கவியினொடும்
இசையினொடும் காதல் மாதர்
......................மனுநீதி முறையினொடும்
மறையினொடும் பொழுது போக்கி''

வாழ்ந்ததாகச் சயங்கொண்டார் கலிங்கத்துப் பரணியில்

வருணித்துள்ளார். நன்னூல் சிறப்புப்பாயிரம் இயற்றிய வர் சீயகங்கனைக் குறிப்பிடுங்கால்,

"திருந்திய செங்கோல் சீயகங்கன்
அருங்கலை விநோதன்"

எனக் கலைகளை ஆராய்தலைப் பொழுது போக்காகக் கொண்டவன் சீயகங்கன் என்று பாராட்டி யிருக்கக் காண்கிறோம். அநபாயன் என்ற இரண்டாம் குலோத்துங் கச் சோழன், சிந்தாமணிக் காப்பியத்தை நந்தாத பற் றோடு படித்துப் பொழுது போக்கி இன்பத்தை அடைந்து வந்ததாகச் சேக்கிழார் புராணம் பாடியவர் கூறியுள்ளார். இங்ஙனம் பண்டைக்காலத்தில் பெரும் பாலோர் இன்ப விளையாட்டுகளையும் சிறுபான்மையோர் கலையாராய்ச்சிகளையும் காப்பியங்கள் படித்தலையும் பொழுது போக்காகக் கொண்டிருந்தனர் என்று அறி கிறோம்.

இக் காலத்தில் முன்னைய நாட்களை விடப் பல பொழுது போக்குச் சாதனங்கள் உள்ளன. திரைப் படங்கள், நாடகங்கள், இசை யரங்குகள் இன்ன பல இருக்கின்றன. நாளிதழ்கள், வார மாத இதழ்கள் இவை யும் உள. என்றாலும், நாடகங்களும் இசையரங்குகளும் திரைப்படங்களும் நாள் தோறும் ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தும் பொழுதுபோக்குகள் ஆகா; அப்படிக் கொண்டாலும் இவற்றால் உடல் நலம் கெடுவதோடு பொருளழிவும் உண்டாகும். இவை ஒவ்வொரு நேரத்தில் பொழுது போக்காகப் பயன்படக் கூடியவை.

இவையெல்லாம் இல்லையென்றால் எவை பொழுது போக்குக்கு ஏற்றவை எனக் கேட்கலாம். ஆம். பொழுது போக்கு எப்படி யிருக்கவேண்டும் என்று தெரிந்து

கொண்டால் பொழுது போக்குக்கு ஏற்றவை எவை என அறிந்துகொள்ள முடியும். பொழுது போக்கு வாழ்க்கையை வளம்படுத்த வல்லதாக இருக்கவேண்டும்; அறிவைத் தரத்தக்கதாகவோ உடலுக்கு உரம் கொடுக்கத் தக்கதாகவோ அமையவேண்டும்; மனத்துக்குப் பிடித்ததாகவும் இன்பமளிக்கக் கூடியதாகவும் விளங்கவேண்டும். இத்தகைய பொழுதுபோக்கு, உண்மையிலேயே, எவர்க்கும் இன்பமளிப்பது திண்ணம். இது, வயதுக்கும் மனப்பண்புக்கும் ஏற்றவாறு மாறுபடும் என்றறிக.

இளைஞர்களுக்கு ஏற்ற பொழுது போக்கு இனிய விளையாட்டே. வேலையற்றுச் சோம்பியிருப்பவர்களைப் பேய் பிடித்தாட்டும் என்பர். ஆதலால், காதல் அரும்பும் பருவத்திலுள்ள காளையரும் கன்னியரும் பேய்க்குரங்காம் மனத்தை நாய்போல் அலையவிடாமல் வைப்பதற்கு ஏற்ற விளையாட்டுகளை மேற்கொள்ள வேண்டும். உதைபந்தாட்டம், வலைப்பந்தாட்டம் முதலிய மேலை நாட்டு விளையாட்டுகளாலும் தக்க கீழ்நாட்டு விளையாட்டுகளாலும் ஒற்றுமை முதலிய நற்பண்புகள் வளர்வதோடு உடலும் உரம் பெறுகிறது. ஐரோப்பாவை நடுங்கச் செய்த நெப்போலிய வீரனைத் தோல்வியுறச் செய்தது தங்கள் நாட்டு உதை பந்தாட்டப் பயிற்சியே என்று இன்றும் ஆங்கிலேயர்கள் சொல்வதுண்டு. விடுதலை பெற்ற இந்தியாவின் இளஞ் சிங்கங்களாகிய நம் இளைஞர்கள் விளையாட்டை இனிய பொழுது போக்காகக் கொள்ளவேண்டும். உடல் வலியில் சிறந்து விளங்க வேண்டுமாயின் விளையாட்டைப் பொழுது போக்காகக் கொள்வது சிறந்தது. எதிர்கால இன்ப வாழ்விற்கு விளையாட்டு உறுதுணையாக இருக்கும்.

கிராமத்தில் வாழும் இளைஞர்களும் பெரியோர்களும் கற்ற ஆண்களும் பெண்களும் யாராயிருப்பினும் நேரம் பாரமாய் இருப்பதாகக் கூறவேண்டுவதில்லை. இவர்கள் ஓய்வு நேரத்தில் வீட்டுக் காய்கறித் தோட்டம் அமைத்துக் கீரை வகைகளையும் தக்காளி, கத்தரி, வெண்டை முதலிய காய்கறிச் செடிகளையும் பயிராக்கி நீர்பாய்ச்சி இனிதாகப் பொழுது போக்கலாம். கிராம நகரங்களில் வாழ்பவர்களும் வீட்டுக் காய்கறித் தோட்ட வேலையில் பொழுது போக்கலாம். பெண்கள், மல்லிகை, முல்லை, மணமுள்ள ரோஜா, கண்ணுக்கு இனிய காட்சி தரும் கனகாம்பரம் இவற்றைப் பயிராக்கிப் பூச் சூடி மகிழலாம். தோட்டப் பொழுது போக்கில் தூய இன்பம் உண்டு என்று பேக்கன்என்ற ஆங்கில அறிஞர் கூறியுள்ளார். அவர் கூறியது மிகமிக உண்மையே. அமெரிக்காவில் கிராமங்களில் வாழும் அறிஞர்கள் வீட்டுத் தோட்ட வேலையைப் பொழுது போக்காகக் கொள்கிறார்கள். நம் நாட்டிலும் அத்தகைய பொழுது போக்கில் ஈடுபட்டுள்ள அறிஞர்கள் இருக்கிறார்கள். இது பயனுடைய பொழுதுபோக்காக இருக்கும் என்பதில்ஐயமில்லை.

இந்தியாவின் தந்தையும் இந்நாட்டு விடுதலைச்சிற்பியும் உலக ஒளிவிளக்குமாக விளங்கிய நம் அண்ணல் காந்தியடிகள் நூல் நூற்றலை இனிய பொழுது போக்காக மேற்கொள்ளச் சொல்லாமல் நாட்டுக்குச் செய்யும் நற்றொண்டாக வற்புறுத்தி வந்தார்கள். நூல் நூற்பு வேலை பெரும் பயனளிக்கக்கூடிய நாட்டுத் தொண்டாக இல்லாவிடினும், அது பொறுமை முதலிய நற்பண்புகளை உருவாக்கும் இனிய பொழுது போக்காக மிகவும் பயன் படும் எனலாம்.

கற்றவர்களுக்கு உற்ற தலைசிறந்த பொழுதுபோக்கு ஒன்று உண்டு. அது தனிமையிலே இனிமை தருவது; எல்லையற்ற இன்பமளிப்பது; கவலையை மறக்கச் செய்வது. அது வேறொன்றும் இல்லை: தக்க நூல்களைப் படிப்பதேயாகும். நான் நெடுங்கதைகளையோ சிறு கதைகளையோ படிப்பதைக் குறிக்கவில்லை. இரத்தக் கொதிப்படையச் செய்யும் திடீர் சம்பவங்களைக் கூறும் நெடுங்கதைகளாலும் சிறு கதைகளாலும் மிகுந்த பயன் ஏற்படாது. இவற்றைச் சில நேரங்களில் படிக்கலாம். படிக்க வேண்டுவதில்லை என்று சொல்லவில்லை. உண்ணும்போதும் தின்னும்போதும் வீதியில் நடக்கும்போதும் வீட்டில் உறங்கும் முன்னும் கதைக்காகவே படிக்கும் வெறியர்களைப் பார்க்கிறேன். இப்படிச் செய்வது தவறான பொழுது போக்கு. வண்டிகளில் செல்லும் போது படிப்பதால் கண்கள் கெடும். வீதிகளில் நடக்கும் போது படிப்பதால் விபத்து நேரிடும். இங்ஙனம் செய்யாமல் ஓய்வு நேரத்தில் விடுமுறை நாட்களில் நல்ல தலை சிறந்த நூல்களைப் படித்தின்புறவேண்டும்.

ஓய்வு நேரத்திலோ விடுமுறை நாட்களிலோ படித்தலுக்குத் திட்டம் வேண்டும். 'கண்டதைக் கற்கப் பண்டிதனாவான்' என்று கையில் கிடைக்கும் நூல்களை யெல்லாம் படிப்பது நன்றல்ல. சில நூல்களை முன்னதாகத் தெரிந்து அவற்றை நூல் நிலையத்திலிருந்து பெற்றுப் படிக்க வேண்டும். **உண்மையான வாழ்க்கை வரலாறுகளைப் படிப்பது வாழ்க்கையை வளம்படுத்தும்.** செய்யுள் நூலைப் படித்தால் உள்ளம் பண்படும். "பழைய நூல்களைப் படிப்பதா? புதிய நூல்களைப் படிப்பதா?" என்று சிலர் வினவுவர். பழைய நூல்களையும் புதிய நூல்களை

யும் படித்தாற்ருன் அறிவு விரிவடையும். சிறு கதைகளை யும் நெடுங்கதைகளையும் மட்டும் படிப்பது பாராட்டத் தக்கதல்ல.

பண வசதியுள்ளவர்கள் கலைச் செல்வங்கள் மலிந்த நிலையங்களையும் இயற்கைக் காட்சி மிகுந்த எழில் கொழி யும் இடங்களையும் இன்ன பலவற்றையும் காண்பதை இடையிடையே ஓய்வு நாட்களில் பொழுது போக்காகக் கொள்ளலாம்; மாமல்லபுரம், கங்கைகொண்ட சோழ புரம் போன்ற இடங்களைக் கண்டு இன்புறலாம்; கன் னியாகுமரியில் கடலழகு கண்டு களிப்புறலாம்; திருக் குற்ருலக் காட்சியைக் கண்டு இன்பப் பெருக்கடைய லாம். ஊர்களைப் பார்ப்பதால் பரந்த அறிவும் பெருகும்.

விளையாடல், உலவுதல், தோட்டவேலை செய்தல், படித்தல், வெளிச்செலவு இவற்றுள் ஏற்பனவற்றை ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தப் பொழுது போக்காகக் கொண்டால், வாழ்க்கையில் முழு இன்பம் காண முடி யும் என்பது திண்ணம்.

உடல் நல வழிகள் சில

"அரும்பெறல் யாக்கையைப் பெற்ற பயத்தால்
பெரும்பயனும் ஆற்றவே கொள்க"

என்று நாலடியார் என்னும் நூல் நமக்கு அறிவுறுத்து கிறது. பெரும்பயனை மிகுதியாகக் கொள்ள வேண்டு மாயின் நாம் பெறுதற்கரிய இவ்வருமையான உடம்பைக் கண்ணுங்கருத்துமாய்ப் போற்றிப் பாதுகாக்க வேண்டும். நோயும் சாவும் பெரும்பாலும் தலைவிதியால் ஏற்படுவ தில்லை; அறியாமையினாலும் கவலையீனத்தாலும் உண் டாகின்றன. உடல் நல விதிகளைப் புறக்கணிப்பதால் நோய் ஏற்படக் காண்கிறோம். ஒருவர் உடல் நல விதிகளை நன்கு மேற்கொண்டு உடம்பைப் பேணினால் நோயைத் தடுக்கலாம்; நீண்ட காலம் வாழலாம்; வாழ்வை இன்பமாக நடத்தலாம்.

நானூறு ஆண்டுகளுக்கு முன்பு ஐரோப்பிய நாடு களில் மக்கள் உடல் நல முறைகளைக் கவனித்து வாழாத

காரணத்தால், அவர்களுடைய சராசரி வயது இருபதாக இருந்தது. இன்று ஐரோப்பிய நாடுகளிலும் பிறநாடுகளிலும் அரசாங்கங்களும் மக்களும் நன்ருக உடல்நல வழிகளை விழிப்போடு மேற்கொண்டு கவனித்து வருவதால், மக்களுடைய சராசரி வயது மிகவும் உயர்ந்திருக்கிறது. இதனைக் கீழ்வரும் புள்ளி விவரத்தால் நன்குணரலாம்.

நாடுகள்	சராசரி வயது
இங்கிலாந்து, வேல்ஸ், ஸ்காட்லந்து	69
சுவீடன்	68
கனடா	67
நியூசலந்து	67
நார்வே	64
அமெரிக்க ஐக்கிய நாடு	63
பிரான்சு	59
ஜப்பான்	58
ரஷ்ய நாடு	45
எகிப்து	39
இந்தியா	32

இன்றைக்கு ஏறக்குறைய எட்டு ஆண்டுகளுக்கு முன் இந்தியாவில் மக்களின் சராசரி வயது 25 ஆக இருந்தது. இந் நாளில் மக்களின் சராசரி வயது அந் நாளைப் பார்க்கிலும் 7 வயது கூடியிருக்கிறது. காரணம் யாது? இந்திய மக்களும் அரசாங்கமும் ஓரளவு தனிச் சுகாதாரத்திலும் பொதுச்சுகாதாரத்திலும் இந்நாளில்

அக்கறை காட்டுவதே, சராசரி வயது உயர்ந்திருப்பதற்குக் காரணமாகும். என்ருலும், பிறநாட்டு மக்களுடன் இந்திய நாட்டு மக்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது இந்நாட்டு மக்களின் சராசரி வயது மிகக் குறைவாக இருக்கிறது என்பது மேற்குறித்த புள்ளி விவரத்திலிருந்து தெள்ளத் தெளிய அறியலாம். இன்னும் நம்மவர்கள் உடல்நல வழிகளில் மிகுந்த கவனம் செலுத்திஞல், அரும்பெறல் யாக்கையிஞல் பெரும்பயன் கொண்டு இன்பத்தோடு நீண்ட காலம் வாழலாம்.

சில தவருன பழக்கங்கள் நம்மிடையே உள்ளன. தலை முழுகும்போது கட்டாயம் கண்ணுக்கு எண்ணெய் கட்டிக்கொள்ள வேண்டும் என்பது அப் பழக்கங்களுள் ஒன்று. கண்ணுக்கு எண்ணெய் கட்டிக் கொள்வது தவருன பழக்கமாகும். எண்ணெய் கண்ணுக்குப் போடக்கூடிய அளவுக்கு துப்புரவுடையதல்ல. பனி நீரும் கண்ணுக்குள் விடக்கூடாது என்று கண் மருத்துவர்கள் வற்புறுத்துகிருர்கள் என்ருல், துப்புரவில்லாத எண்ணெயைக் கண்ணுள் வாரம் தவருது விட்டுத் தலை முழுகுவது நல்லதென்று கருத முடியுமா? முடியாது. ஒரு சிலர் ஒரு கண்ணில் விட்ட எண்ணெயை மறு கண்ணில் வழித்து மாற்றி மாற்றி அழுத்தித் தேய்த்துக் கண்கட்டிக் கொள்வதைப் பலர் பார்த்திருக்கலாம். இப் பழக்கத்தை விடுவது நல்லது.

ஒரு சிலர் தம் கண்களில் கலிக்கம் என்னும் கார மருந்தைப் போட்டுக் கொள்வதுண்டு. தாய்மார் சிலர் துடுக்குச் செய்யுங் குழந்தைகளின் கண்களில் மிளகையோ சுக்கையோ அரைத்துத் தடவுவது உண்டு.

இப்படிச் செய்வது பெருந்தவறு. கண் மருத்துவர் போடும் மருந்தைத் தவிர மற்றவர் கூறும் மருந்துகளை ஒருவரும் கண்ணில் போடவே கூடாது. கண் சிவந்திருந்தால் தாய்ப்பாலைக் கண்ணில் விடுவதால் தவறு நேராது.

தவருன செயலாலே கண் குருடாகிறது. 1951-ஆம் ஆண்டுக் குடி மதிப்பின்படி நம் நாட்டில் 20 லட்சம் முழுக் குருடர்களும், 60 லட்சம் அரைக் குருடர்களும் இருக்கிருர்கள். சென்னை மாநிலத்தில் மட்டும் 50 ஆயிரம் குருடர்கள் இருக்கிருர்கள். இவர்களுள் தவருன செயலால் குருடானவர் பலர் உளர். கண் கெட்டுப் போனல் மண்ணுலக வாழ்வில் இன்பமே இல்லை என்றறிக.

நோய் நொடி இல்லாமல் கண்ணைப் பாதுகாக்க வேண்டுமானல், எவரும் ஓடும் வண்டிகளில் உட்கார்ந்து கொண்டு படித்தல் கூடாது; வெளிச்சம் இல்லாத அந்தி வேளையில் படிப்பதும் கூடாது; சிறு மண்ணெண்ணெய் விளக்கு வெளிச்சத்திலும், அளவுக்கு மிகுந்த ஒளி விளக்கு வெளிச்சத்திலும் படித்தல் கூடாது. கண்ணில் புகை படும்படியாக விடுதல் கூடாது. சமையல் செய்பவர்கள் இதை நன்கு தெரிந்து கொள்ளுதல் வேண்டும். நல்ல தண்ணீரில் முகம் கழுவுவது கண்ணைப் பாதுகாப்பதாகும். கண்களில் ஈக்கள் மொய்த்தல் நோய்க்கு வழியாகும். கண்ணேய் உள்ள ஒருவர் கண்ணில் உட்கார்ந்த ஈ, எட்டுக்கல் தொலைவில் இருக்கும் மற்றொருவர் கண்ணில் உட்கார்ந்து கண்ணேயை உண்டாக்குமாம்.

காதுகளில் குறும்பி எடுக்கும் கம்பி போட்டுக் குடைந்து கொண்டிருப்பது தவருன பழக்கமாகும். குறும்பி காதுகளைப் பாதுகாக்கும் பொருட்டே இருக்கிறது. செவிப்பறை கிழிந்துவிட்டால் காதே கேட்காது செவிடாகும். குழந்தைகளைக் காதிலே அறையக் கூடாது; அறைந்தால் காது அடிபட்டுச் செவிடாகலாம். பெரிய விஞ்ஞானக் கலைஞராக விளங்கிய தாமஸ் ஆல்வா எடிசனைச் சின்னஞ்சிறு வயதில் ஒருவர் காதில் அறைந்த காரணத்தால், அவரது காது செவிடாகி விட்டதாம். மூக்கை மிகப் பலமாகச் சிந்தினுலும் காதுக்குக் கேடு நேரிடும்.

பற்களைப் பாதுகாப்பதில் பெரும்பாலோர் அக்கறை காட்டுவதில்லை. சிலர் எருச் சாம்பலாலும் விறகுச் சாம்பலாலும் ஆற்ருேர மணலாலும் செங்கற் பொடியாலும் பல் விளக்கக் காண்கிருேம். விறகுச் சாம்பல் ஈறுகளைப் புண்ணுக்கிவிடும். மற்றவை ஈறுகளையும் பற்களையும் கெடுத்துவிடும். நல்ல பற்பொடி பல்விளக்கத் தகுந்தது. பற்பசையைக் கொண்டு பிரஷால் பல்விளக்கும் பழக்கமுள்ளவர்கள் பிரஷில் கிருமிகள் சேராதவாறு அதைப் பாதுகாத்துப் பல்விளக்குதல் நல்லது. சிலர் சிக்கனம் கருதி மிகப் பழைய பிரஷைக் கொண்டு பல் விளக்கப் பார்க்கிருேம். இத்தகைய பிரஷ் பல் வலியை உண்டாக்கும். பல் நோயை உண்டாக்கும் கிருமிகள் அதிலே தங்கியிருப்பதே அதற்குக் காரணமாகும். ஆலங்குச்சியும் வேலங்குச்சியும் பல் விளக்குவதற்கு மிகவும் சிறந்தவை. பல ஆண்டுகளுக்கு முன்பு இங்கிலாந்தில் நடைபெற்ற மருத்துவர் மகாநாட்டில் ஆங்கிலப் பல் மருத்துவர் ஒருவர் ஆலங்குச்சியையும் வேலங்குச்சியை

யும் குறிப்பிட்டு, "முதல் முதல் பல் பிரஷ் கண்டுபிடித்தவர்கள் இந்தியர்களே" என்று கூறியதைப் படித்திருக்கிறேன். ஆலங்குச்சியும் வேலங்குச்சியும் நன்றாகப் பல் விளக்கப் பயன்படுபவை. 'ஆலும் வேலும் பல்லுக் குறுதி; நாலும் இரண்டும் சொல்லுக் குறுதி' என்பது தமிழ் நாட்டுப் பழமொழி.

அடிக்கடி வெற்றிலை போடும் பழக்கம் பற்களைக் கெடுக்கக் காரணமாகிறது. நம் நாட்டில் பெண்களுள் பெரும்பாலோர் அடிக்கடி வெற்றிலை போடும் பழக்கத்திற்கு அடிமையாகிப் பற்களைக் கெடுத்துக் கொள்கிறார்கள். ஆண்களுள்ளும் சிலர் அடிக்கடி வெற்றிலை போடும் பழக்கத்துக்கு இரையாகியுள்ளனர். வெற்றிலையோடு சிலர் புகையிலை போடுகின்றனர். இப்பழக்கம் மிகக் கொடியது. சிலர் வெற்றிலை போடுவதால் கால்சியம் கிடைப்பதாகவும் சீரணமாகும் நன்மை ஏற்படுவதாகவும் காரணம் கூறுகின்றனர். அதிகச் சுண்ணும்பு ஈறுகளைக் கெடுத்துவிடும். வெற்றிலை பாக்கு போடுவது பற்களின் அழகைக் கெடுத்துப் பார்க்க அருவருப்பை உண்டாக்குகிறது. தமிழ் இலக்கியங்களில் பெண்களின் பற்களை முல்லை முகை போன்றவை என்றும், முத்துப் போன்றவை என்றும் வருணித்திருப்பதைக் காணலாம். பற்கள் வெண்மையாய் இருந்தாற்றான் அழகிய தோற்றம் இருக்கும். அரிதாக வெற்றிலை பாக்கு மட்டும் போடுவது தவறல்ல.

பற்கள் கெட்டால் சீரணக்கோளாறு முதலிய பல நோய்கள் உண்டாகும். ஆதலால், பற்களைப் பாதுகாக்க வேண்டுவது இன்றியமையாதது. "பல் விளக்கக் காசு

செலவு செய்வதா?'' என்று எண்ணக்கூடாது. பல் கெட்டுப் போனால் பல நோய்கள் உண்டாகும்.

நீர்ச்சீலை (கோவணம்) கட்டுவதைப் பற்றிய குறையையும் குறிப்பிடாமல் இருக்க முடியாது. சிலர் ஆண்டுக் கணக்காக அழுக்கான நீர்ச்சீலை கட்டியிருக்கக் காணலாம். இதனால், புண் ஏற்படலாம். நீர்ச்சீலை துப்புரவானதாக இருக்க வேண்டும். மிகவும் அழுக்கானதைக் குப்பையில் எறிந்து விட்டுப் புதியதாகக் கட்டிக்கொள்ள வேண்டும். கோவணத்துக்குங்கூட நல்ல துணி வேண்டுமா என்று எண்ணாமல், நோய் வாராமல் தடுப்பதற்காக மேட்டூர் மல் துணி ஒரு கஜம் வாங்கி வைத்துக்கொண்டு வேண்டும் போது கிழித்துக் கட்டிக்கொள்வது நல்லது.

மாதர்களும் வீட்டு விலக்குக் காலத்தில் அழுக்குத் துணியைப் பயன்படுத்தாமல் துப்புரவானதையே உபயோகிக்க வேண்டும்.

இங்குச் சொல்லப்பட்டவை சாதாரணமானவையெனினும் மிகவும் கவனித்து மேற்கொள்ள வேண்டியவை. இவ்வுண்மைகளை அற்பமானவை என்று புறக்கணித்தால், மக்கள் பல நோய்களுக்கு இரையாகித் துன்புறவேண்டுவதாகும்.

> **''செய்தக்க அல்ல செயக்கெடும்; செய்தக்க**
> **செய்யாமையானும் கெடும்''**

என்னும் வள்ளுவர் குறளை உள்ளத்துக் கொண்டு இச் சில உடல்நல வழிகளை மேற்கொண்டு நோய் நொடியின்றி மக்கள் இன்பமாக வாழ்வார்களாக!

நீண்ட காலம் வாழ

நிலவுலகில் மக்கள் நீண்டகாலம் வாழ விரும்புகிறூர் கள். எண்பது வயது மிகுந்து தண்டு ஊன்றி நடக்குந் தொண்டு கிழவியும் தன் பேரன் அல்லது பேர்த்தி வயிற்று மகன் அல்லது மகள் திருமணத்தைக் கண்ணுரக் கண்டு களித்த பின்னரே மண்ணுலக வாழ்வை மறக்க விரும்புவதைக் கண்கூடாகக் காண்கிறோம். யாவருக்கும் நீடு வாழ ஆசை இருப்பது இயற்கை. "நெடுநாள் இருந்த பேரும், நிலையாகவே இனும் காயகற்பம் தேடி நெஞ்சு புண்ணுவர்" என்றூர் தாயுமானூர். 'இன்றைக்கு இருப்பார் நாளைக்கு இருப்பரோ என்று எண்ணுதற் கில்லை' என்னும் உண்மையை எல்லாரும் நன்கு அறி வர். 'நெருநல் உளன் ஒருவன் இன்று இல்லை என்னும் பெருமை உடைத்து இவ்வுலகு' என்பதையும் பலரும் செவ்வையாக உணர்ந்திருக்கின்றனர். எனினும், மக் கள் உலகில் நீண்ட காலம் வாழ விரும்புகிறூர்களே

யன்றி விரைவில் மாண்டுபோக மனங்கொள்வதில்லை. இவ்வாசையை நிறைவேற்ற அன்று சிலர் காயகற்பம் என்னும் அற்புத மருந்தை விரும்பித் தேடியலைந்தனர். இன்று விஞ்ஞானக் கலைஞர்கள் மரணத்தைத் தடுத்து மக்களை நெடுங்காலம் வாழுமாறு செய்ய எஞ்சாது அல்லும் பகலும் உழைத்து வருகிறார்கள்.

படைப்பில் மானிடரே உலகில் நீண்ட காலம் வாழத் தக்கவர்களாக இருக்கின்றனர். எலியும் சுண்டெலியும் 3 ஆண்டுகளுக்கு மேல் உயிர் வாழ்வதில்லை. முயல் 5 ஆண்டுகளே வாழும். பூனை, குள்ளநரி, மான் இவை 10 ஆண்டுகள் உயிர் வாழுமாம். செம்மறியாடு 12 ஆண்டுகள் வரையிலும், நாய், வெள்ளாடு, புலி இவை 15 ஆண்டுகள் வரையிலும் வாழுமாம். சிறிய விலங்காயிருப்பினும் கீரிப்பிள்ளை 13 ஆண்டுகளுக்கு மேலும் வாழும். புனுகு பூனை, குதிரை, பசு, பன்றி இவை ஏறக்குறைய 25 ஆண்டுகள் வரையிலும் உயிரோடிருக்கும். குரங்குகளின் வயதைத் திட்டமாகச் சொல்ல முடியாதாம். திருவனந்தபுரம் விலங்குக் காட்சிச் சாலையில் இருந்த குரங்கு ஒன்று 15 ஆண்டுகள் உயிரோடு இருந்ததாம். தென்னாப்பிரிக்காவில் ஒரு மிருகக் காட்சிச் சாலையில் இருந்த ஒரு குரங்கு 27 ஆண்டுகள் வாழ்ந்திருந்ததாம். விலங்குகளுள் நீண்ட காலம் வாழ்வது யானை. அது 100 ஆண்டுகள் வாழக்கூடும் என்று கருதப்படுகிறது. சாதாரணமாக யானை 50 ஆண்டுகள் வாழுமாம். மனிதர் 100 ஆண்டுகளுக்குக் குறையாது வாழலாம். 100 ஆண்டுகளுக்கு மேலும் வாழ்ந்தவர்கள் உண்டு. பொதுவாக மனிதர்க்கு வயது நூறு எனப்படும். "மனிதர்க்கு

வயது நூறு அல்லது இல்லை'' என்று கபிலரகவல் கூறுகிறது. தொண்டரடிப் பொடியாழ்வார், ''வேதநூல் பிராயம் நூறு மனிசர்தாம் புகுவரேனும்'' என்று குறிப்பிடுகிருர். அளவிலும் ஆற்றலிலும் பருமனிலும் விலங்குகளுக்கு இணையாக மனிதர் இருக்க முடியாவிடினும், வயதிலும் அறிவிலும் அவற்றை வென்று விடலாம். இளம் வயது முதற்கொண்டு ஆணும் பெண்ணும் நல்ல சுகாதாரமான உணவு உண்டு, உடற்பயிற்சி செய்து, அறிவைப் பயன்படுத்தி, நல்ல வழியில் வாழ்வாங்கு வாழ்ந்தால், ஏன் நூருண்டு வாழ்வது முடியாது? நூருண்டு வாழாவிடினும் 80 ஆண்டுகளுக்கு மேல் மக்கள் வாழ முடியும். 40 வயது கடந்த நோயாளிகளிலுங் கூடப் பலர் குடிப்பது போன்ற தீய பழக்கங்களை விடுத்து நல்ல பழக்கங்களைக் கைக்கொண்டு 80 வயது வரைக்கும் வாழ்ந்ததாக மருத்துவர்கள் கூறுகிருர்கள்.

நீண்ட காலம் வாழ விரும்புகிறவர்கள் எல்லாவற்றிலும் மிதமாக இருக்கவேண்டும்; கோபம், வருத்தம், பொருமை, பகை, கவலை இவற்றிற்கு இடம் கொடுத்தலாகாது. அன்பு கொண்டு வாழ்வதும், உளநிறைவுடன் இருப்பதும் ஒருவரை நீண்ட காலம் வாழச் செய்யும். கவலையை விலைக்கு வாங்குவது கூடாது. ஒருவரும் கவலையற்றிருக்க முடியாது. எல்லாருடைய வீட்டிலும் மண் அடுப்பு உண்டேயன்றிப் பொன் அடுப்பு இருப்பதில்லை. குடும்பத்திலிருப்போர்க்கு ஏதாவது ஒரு கவலை இருந்தே தீரும். திண்ணைத் தூங்கிகளாக இருப்பவர்களுக்கு ஒரு வேளை கவலை இல்லாமல் இருக்கலாம். குடும்பப் பொறுப்புடையவர்களுக்குக் கவலை இல்லாமல் இராது. என்ருலும், ஒருவரும் கவலையில் ஆழ்ந்து

வாழ்நாளை வீணாக்கிக் கொள்ளுதல் கூடாது. கவலையால் ஒருவருக்குத் தலை மயிர் நரைத்து விடுவதுமுண்டு. கவலையற்றிருப்பதற்கு நல்ல சூழ் நிலையை அமைத்துக் கொள்ளவேண்டும்.

புறநானூற்றில் நரை ஏற்படாததைக் குறித்துப் பிசிராந்தையார் பாடிய பாட்டு ஒன்று இருக்கிறது. கோப்பெருஞ் சோழனுடைய புதல்வர்கள் தங்களுடைய தந்தையுடன் ஆட்சியைக் கைப்பற்றும் பொருட்டுப் போர் புரிய நின்றார்கள். ஒரு புலவர் குறுக்கிட்டுக் கோப் பெருஞ் சோழனுக்கு நல்லறிவு கொளுத்திப் போரைத் தடுத்தார். சோழன், வாழ்வில் வெறுப்புற்றுச் சங்ககால வழக்கப்படி உண்ணா நோன்பிருந்து உயிர் விடுதல் போன்ற வடக்கிருத்தல் முறையை மேற்கொண்டான். சோழன் வடக்கிருத்தலைக் கேட்ட அவருடைய நண்பர் பிசிராந்தையார், சோழனோடு வடக்கிருந்து உயிர்விட அவ்விடத்துக்கு ஓடோடியும் வந்தார். அப்பொழுது அங்கிருந்த சான்றோர் சிலர் பிசிராந்தையாரை நோக்கி, "ஐயா, உமக்கு மிகுந்த வயதாகிறதே. ஏன் நரை இல்லை?" என்று கேட்டனர். அதற்குப் பிசிராந்தையார் கூறிய பாட்டு இது:

"யாண்டு பலவாக நரைஇல வாகுதல்
யாங்கா கியர்என வினவுதி ராயின்
மாண்டஎன் மனைவியொடு மக்களும் நிரம்பினர்;
யான்கண் டனையர் என்இளையரும்; வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கும; அதன்தலை
ஆன்றவிந்து அடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழும் ஊரே."

கேட்ட கேள்வியோ "ஏன் நரை இல்லை?" என்பது. பிசிராந்தையார் அக்கேள்விக்கு விடையாக, "என் மனைவியும் மக்களும் அறிவு நிரம்பியவர்கள். எனக்குள்ள ஏவலர்கள் என் கருத்தறிந்து நடப்பவர்கள். என் ஊரை ஆளும் மன்னன் இன்னல் செய்யாது ஆட்சி புரிபவன். இவைகட்கு மேலாக என் ஊரில் நற்குணங்களால் அமைந்து பணியவேண்டிய உயர்ந்தோரிடத்துப் பணிந்து ஐம்புலன்களையும் அடக்கிய கொள்கை மிக்க சான்றோர் பலர் உளர்" என்றார். இதனால், அவர் தமக்கு மனைவியாலும் மக்களாலும் ஏவலர்களாலும் மன்னனாலும் ஊரிலுள்ளவர்களாலும் கவலை ஏற்படாத காரணத்தால் நரை உண்டாகவில்லை என்று குறிப்பிட்டார். இதிலிருந்து நல்ல சூழ்நிலை இருந்துவிட்டால் ஒருவர் கவலையற்று நரைதிரை இன்றி நீண்ட காலம் வாழக் கூடும் என்று தெரிந்து கொள்ளலாம்.

சீனாவில் பீகிங் நகரில் 151 வயது வாழ்ந்த சீனர் ஒருவர், "நான் என் முதுகெலும்பை வளையவிடமாட்டேன். நிமிர்ந்துதான் உட்காருவேன். கோபம் கொள்ள மாட்டேன். எதற்கும் அஞ்சுவதில்லை. கவலை கொள்வதும் இல்லை" என்று தமது நீண்ட வாழ்வுக்குக் காரணம் கூறினார்.

நீண்ட காலம் உலகில் பலர் வாழ்கின்றனர். அவர்கள் தங்களுடைய நீண்ட ஆயுளுக்குக் கூறிய காரணங்களை ஆராய்ந்து பார்த்தால், நாம் அப்படி நீண்ட காலம் வாழ்வதற்கு என்ன செய்யவேண்டும் என்பது தெரிகிறது. சுகாதாரமான உணவு, சுகாதார வாழ்வு, நடத்தல் போன்ற உடற் பயிற்சி, தேநீர் காப்பி போன்ற பானங்களைக் குடியாது பால் குடித்தல்,

காரம் இல்லாத உணவு கொள்ளுதல், வயதான பின்பு இறைச்சியை விட்டுக் காய்கறி பழங்கள் இவற்றை மிகுதியாகப் பயன்படுத்தல், மலச்சிக்கல் இல்லாது பார்த்துக்கொள்ளுதல், குடிகுடித்தல் பொடி போடுதல் புகை பிடித்தல் முதலிய தீய பழக்கங்களை மேற் கொள்ளாதிருத்தல், பற்களைக் கெடாது பார்த்துக் கொள் ளுதல், துக்கத்தில் மூழ்காதிருத்தல், உணர்ச்சிக்கு இரையாகாதிருத்தல், மிதமான உணவு கொள்ளுதல், மகிழ்ச்சியாயிருத்தல், காற்றேட்டமான இடத்தில் வசித் தல், அதிகநேரம் கண் விழிக்காதிருத்தல் ஆகிய இவையே நீண்ட ஆயுளுக்குக் காரணங்கள். ஆண் களும் பெண்களும் இவற்றை மேற்கொண்டால் நிச்சயமாக நீண்டகாலம் வாழலாம்.

ஒருவர், மக்கள் நீண்டகாலம் மாநிலத்தில் வாழப் பன்னிரண்டு விதிகளைக் கூறுகிறர். அவை வருமாறு:

(1) வயதாகி விட்டதே என்று வருந்தாதீர்கள். (2) வயதானவர்கள் உணவைச் சுருக்கி ஆயுளைப் பெருக்க வேண்டும். (3) முறையான உணவும் ஒழுக்க மும் மேற்கொள்ளுங்கள். (4) தாழ்வு மனப்பான்மை யைத் தள்ளுங்கள். (5) துன்பப்படாதீர்கள். (6) குழந் தைகளோடு விளையாடுங்கள். (7) முறைகேடான வாழ்வு வாழாதீர்கள். (8) உழைப்பும் ஓய்வும் கொள் ளுங்கள். (9) நல்ல நீர் குடியுங்கள். (10) வயதிற் கேற்ற உடற் பயிற்சி செய்யுங்கள். (11) கவலை கொள் ளாதீர்கள். (12) அச்சங் கொள்ளாதீர்கள்.

‘‘கவலைப்படாதீர்கள். நீங்களும் 175 வயது வரைக் கும் வாழலாம்’’ என்று ரஷ்ய நாட்டுப் பேராசிரியர்

எர்ஸ்கின் கூறுகிருர். "150 வயது வரையில், ஏன்?, 175 ஆண்டுகள் கூடச் சாதாரணமாக மக்கள் வாழ முடியும். ஆனால், கவலையே பெரும்பாலும் முன்னதாகவே மக்களுக்குக் கிழப் பருவத்தை அடையச் செய்கிறது'' என்று அப் பேராசிரியர் கருதுகிருர்.

அவர் கூறும் பொன்விதிகளாவன:

1. அறிவோடு வேலைகளை அமைத்துக் கொள்க.
2. அளவுக்குமேல் வேலை செய்யாதே.
3. ஓய்வு நேரத்தையும் விடுமுறை நாட்களையும் உண்மையாகவே ஓய்வுக்குப் பயன்படுத்துக.
4. நடு வயதில் 8 மணி நேரம் உறங்குக.
5. இளைஞராக இருந்தாலும், வயதானவராக இருந்தாலும் 10 அல்லது 20 நிமிடங்கள் உடலுக்கு ஏதாவது ஏற்ற பயிற்சி தருக.
6. அளவாக நாள் ஒன்றுக்கு மூன்று அல்லது நான்கு முறை உணவு கொள்க.
7. குடி குடிக்காதே; புகை பிடிக்காதே.
8. நன்ருகக் குளித்து முறையாகத் தவருமல் நல்ல காற்றில் உலவுக.

ரஷ்ய நாட்டில் ஒரு குடியானவர் 143 வயது வாழ்ந்ததாகவும், சாகும் மட்டும் ஏறக்குறைய நாள் முழுதும் அவர் வயலில் வேலை செய்து வந்ததாகவும் அப்பேராசிரியர் குறிப்பிடுகிருர்.

ஐம்பத்தைந்து வயதானதும் நம்மவர்கள், "வீடு போ போ என்கிறது; காடு வா வா என்கிறது'' எனப் பல முறை சொல்கிருர்கள்; சாவின் பள்ளத்தாக்கில்

வாழ முனைந்து விடுகிறார்கள். இங்கே காடு என்பது சுடுகாட்டைக் குறிக்கிறது. ஜோசியம் பார்த்து நம்பிக்கையை இழந்துவிடுகிறார்கள். இப்படிச் செய்பவர்கள் எப்படி நீண்டகாலம் வாழ முடியும்? என்று எண்ணிப் பாருங்கள். நம் பிரதமர் சிறுவர்களோடு விளையாடி மகிழ்ந்து முதுமையை மறப்பதுபோல், நம்மவர்களும் செய்ய வேண்டும்; சோம்பியிராமல் ஏதாவது நல்ல தொண்டில் ஈடுபடவேண்டும். கள்ளமில்லாத உள்ளமுடைய இளைஞர்களுடன் நாள்தோறும் பழகும் வாய்ப்புள்ள ஆசிரியர்கள் நீண்ட காலம் வாழலாம்.

வயதான தாமஸ் மூர் என்ற ஆங்கில நாட்டு அறிஞர், தம் தந்தையார்முன் ஓடிச்சென்று குதிப்பது வழக்கமாம். "நம்முடைய மகன் சிறியவனாகத்தான் இருக்கிறான். எனக்கு அதிக வயதாகவில்லை" என்று தம் தந்தையார் கருதவேண்டும் என்று அவர் நாள்தோறும் அப்படிச் செய்ததாக அவர் வரலாறு கூறுகிறது. இதில் உண்மை இல்லாமல் இல்லை. இந்த எண்ணம் அவரை நீடுவாழச் செய்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

நாம், காற்றோட்டமுள்ள இடத்தில் வசித்து, காரம் சேர்ந்த உணவுகளைக் குறைத்து, மிதமாக உண்டு, நன்றாக மென்று, மெதுவாகச் சாப்பிட்டு, நிமிர்ந்து நடந்து, பற்களையும் நாவையும் சுத்தமாக வைத்து, போதிய நேரம் உறங்கி, கோபத்தையும் கவலையையும் போக்கி, மகிழ்ச்சி கொண்டு, நாளும் வயதுக்கு ஏற்ற உடற்பயிற்சி செய்து, சுகாதார முறையில் அன்புடன் வாழ்ந்து வந்தால், நூறாண்டு வாழலாம்; இல்லாவிடினும் நீண்ட காலம் கட்டாயம் உயிருடன் இருக்கலாம். செய்வோமா?

சான்றாண்மை

நாடு சிறந்து விளங்க வேண்டுமெனில், நாட்டில் வாழ்பவர்களான ஆணும் பெண்ணும், நற்பண்புள்ளவர்களாக இருக்க வேண்டும். ஔவைப் பிராட்டியார்,

> "எவ்வழி நல்லவர் ஆடவர்
> அவ்வழி நல்லை : வாழிய நிலனே"

என்றார். ஆடவர் மட்டும் நல்லவரா யிருப்பின், நாடு நலம் பெறாது; மகளிரும் நல்லவரா யிருந்தால்தான் நாடு நலம்பெறும். நாடு நலம்பெறச் சான்றாண்மை என்னும் பண்பு இருபாலார்க்கும் இன்றியமையாதது.

சான்றாண்மை என்பது பல நற்குணங்களை ஆளுந் தன்மை. இச்சொல், சால்பு என்பதிலிருந்து தோன்றியது. சால்பு என்னும் சொல்லுக்கு எல்லா நற்குணங்களின் நிறைவு என்பது பொருள். இந் நாளில் சான்றாண்மை யுடையவரைப் பெரியார் என்றும் பெருந் தன்மையுடையவர் என்றும் சொல்கிறோம்.

திருக்குறளில் பெருமை, சான்ருண்மை என்று இரண்டு அதிகாரங்கள் இருக்கின்றன. செயற்கரிய செய்தல், தருக்கு இன்மை, பிறர் குற்றம் கூருமை என்றிவை முதலிய நற்குணங்களால் பெரியாரது தன்மையே பெருமை என்றும், பெருமையுள் அடங்காத அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணேட்டம் வாய்மை முதலிய பண்புகளின் நிறைவே சான்ருண்மை என்றும் பரிமேலழகர் விளக்கியுள்ளார். ஆனல், இன்று உலக வழக்கில் நாம் பெருமைப் பண்புகளையும் சான்ருண்மைப் பண்புகளையும் ஒன்று சேர்த்துப் பெருந்தன்மை என்னும் சொல்லாகக் கூறுகிருேம்.

ஆங்கிலத்தில் 'ஜென்டில்மென்' (Gentleman) என்னும் சொல் வழங்குகிறது. இதற்குச் சான்ருேன் என்னும் தமிழ்ச்சொல் பொருத்தமாக இருக்கிறது. 'யார் ஜென்டில்மென்'? என்பதைக் குறித்து நியூமென் என்ற ஆங்கிலப் பேரறிஞர் மிக அழகாக விளக்கம் தந்துள்ளார். நியூமென் எழுதிய விளக்கம் அற்புதமாக இருப்பதைக் காணலாம். அவர் கூறியதன் சுருக்கம் வருமாறு:—

''சான்ருேன் என்பவன் பிறருக்குத் துன்பம் செய்யாதவன் என்று சுருக்கமாகக் கூறலாம். அவன் தன்னைச் சூழ்ந்துள்ளவர்களுடைய இன்னலை நீக்குவதையே தொழிலாகக் கொள்பவன்; தான் முன் நின்று எச்செயலில் ஈடுபடாவிடினும், பிறர் நடத்தும் நல்ல இயக்கங்களுக்குப் பொல்லாங்கு செய்யமாட்டான். அவன் பிறருடைய உள்ளம் உடையுமாருே புண்படும்படியோ மாறுபட்ட கருத்துக்களை வேறுபடச் சொல்லமாட்டான்; பிறர் செயல்களில் சந்தேகம் கொள்ளவும் மாட்

டான். பிறரை நன்கு மதிப்பதே அவனது நோக்கமாகும். அவன் எல்லாரிடத்தும் அன்புள்ளவனாகவும் அருளுள்ள வனாகவும் இருப்பான்; எவருடன் பேசினாலும் அவருடைய குற்றங் குறைகளைக் கூறி உள்ளம் உடையு மாறு செய்யமாட்டான்; பிறனுக்கு உதவி செய்யும் போது உதவி செய்வதாகக் காட்டிக் கொள்ளாமல் உதவி செய்வான்; அவசியம் ஏற்பட்டாலன்றித் தன்னைக் குறித்து ஒரு போதும் பெருமையாகப் பேச மாட்டான்; பிறரைப் பற்றிப் புறங் கூறமாட்டான்; பிறர் புறங்கூறுதலுக்குக் காது கொடுத்தலும் செய் யான்; பிறர் செய்யும் செய்கைகளிலும் செயல்களிலும் 'ஏதோ இருக்கவேண்டும்' என்று ஐயமும் கொள்ள மாட்டான். அவன் எவர் செயலிலும் நல்லதைக் காணும் இயல்பு உள்ளவனாவான்; எவரிடமும் இழிவாகவோ மரியாதை குறைவாகவோ நடந்து கொள்ளவும் மாட்டான்.

"இன்னா செய்தவருக்கும் இனியது செய்தலே அவனது செயலாகும். பிறரிடம் பெருநோக்குடனும் இனிய பண்புடனும் நடந்து கொள்வதே அவனுடைய இயல்பு. அவன் இன்பம் தோன்றும்போது துடிப்ப தில்லை; துன்பம் வரும் போது அஞ்சுவதில்லை. ஒருவ ரிடம் வாதம் செய்யும் போது, அவன் என்றும் வரம்பு கடந்து நடப்பதில்லை; தன் கருத்துச் சரியாக இருப்பினும் தவறாக இருப்பினும் நீதிமுறையிலிருந்து தவறுவதில்லை. அவன் எதிர்வாதம் செய்பவன் மனநிலையைக் கண்டு அவனிடம் இனிதாக நடந்து கொள்வான்.

"தனக்குக் கடவுள் நம்பிக்கை இல்லையெனினும் அவன் கடவுள் நம்பிக்கையுள்ளவர்களைத் தாக்கிப் பேசி

இழிவுபடுத்தும் செயலைச் செய்யமாட்டான்; பிறர் பக்தியை மதிப்பான்; நல்ல சிறந்த பழக்க வழக்கங்களைப் போற்றிப் பேசுவான். அவனிடம் பிடிவாதக் கொள்கையோ வெறியோ இருப்பதில்லை. தனக்குக் கடவுள் நம்பிக்கையில்லை என்பதற்காகச் சமயத் தலைவர்களை மதிக்காமல் இருப்பதில்லை. தனக்குப் பிடிக்காத சமயக் கொள்கைகளைத் தாக்காமலும், ஒன்றும் கூறாமலும் புறக்கணித்து விடுவது அவனது இயல்பு. விரிந்த மனப்பான்மையும் பரந்த பெருநோக்கமும் திருந்திய அருளுள்ளமும் அரிய நேர்மையும் அவனிடம் காணப்படும் சிறந்த பண்புகள்.''

இனி வள்ளுவர், பெருமையைப் பற்றியும் சான்றாண்மையைக் குறித்தும் கூறுவதைக் காண்போம். அரிய செயலை ஆற்றுவார் பெரியார் என்றும், செருக்கின்றி ஒழுகுபவர் பெரியார் என்றும், பிறர் குற்றத்தை மறைத்து வைப்பது பெருமைக்குச் சிறந்த பண்பு என்றும் கூறிய வள்ளுவர், அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை இவற்றை யுடையவர் சான்றோர் என்றும், அவர்கள் பிறர் தீமையைச் சொல்ல மாட்டார்கள் என்றும், தங்களைப் பார்க்கிலும் தாழ்ந்தவரிடத்தும் தங்களுக்குத் தோல்வி ஏற்பட்டால் ஒப்புக்கொள்வார்கள் என்றும், அவர்கள் இன்னா செய்தவர்களுக்கும் இனிய நன்மைகளையே செய்வார்கள் என்றும் சான்றாண்மையை விளக்கியுள்ளார்.

நாலடியார் என்னும் நூலோ, இரகசியத்தில் செவிடனாயும், தீய புறங்கூற்றில் ஊமையாயும் இருப்பவனே சான்றோனாவான் என்று நவில்கிறது.

சங்க நூல்களுள் ஒன்ருகிய புறநானூற்றுச் செய்யுள் ஒன்றில் சான்ருண்மைப் பண்புகளை நன்ருகக் காண்கிருேம். அச்செய்யுளைப் பாடியவன் இளம் பெருவழுதி என்ற பாண்டியன். செய்யுள் வருமாறு :—

" உண்டால் அம்மஇவ் வுலகம்! இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதுஎனத்
தமியர் உண்டலும் இலரே ; முனிவு இலர்:
துஞ்சலும் இலர்பிறர் அஞ்சுவது அஞ்சி ;
புகழெனின் உயிரும் கொடுக்குவர் ; பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் ; அயர்விலர்;
அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கு என முயலா நோன்தாள்
பிறர்க்கு என முயலுநர் உண்மையானே."

இளம் பெருவழுதி, இவ்வுலகம் எப்படி நடைபெறுகிறது என்பதைக் குறித்து வியந்து, அப்படி இவ்வுலகம் நடைபெறுதற்குக் காரணமாயிருப்பவர்கள்சான்ருண்மை மிக்க ஆன்ருேர்களே என்று முடிவுகட்டி, அப்பெரியார்களின் பண்புகளை இச்செய்யுளில் விரித்துக் கூறியுள்ளான். " தேவாமிர்தம் கிடைத்தாலும் தாங்களே, உண்ணது பிறருக்குக் கொடுத்துண்ணும் பெருந்தன்மையும், யாரிடத்தும் வெறுப்பின்மையும், பிறர் அஞ்சும் துன்பத்திற்கு அஞ்சிச் சோம்பியிராமையும், புகழுக்காக உயிரையும் கொடுக்கும் மனப்பான்மையும், பழியுடன் உலகம் கிடைப்பதெனினும் அதைப் பெருத வீரப் பண்பும், மனக் கவலை கொள்ளாமையும், அத்தகைய பண்புகளோடு தங்களுக்கென வாழாது பிறர்க்கென வாழும் பெரு நோக்கமும் கொண்ட பெரியார்களான சான்ருேர்கள் இருப்பதனலேயே இவ்வுலகம் நடைபெறு

கிறது'' என்பது இப்பாட்டின் பொருள். இதில் சான்றாண்மைப் பண்புகள் இனிது புலனாகின்றன.

ஆங்கிலப் பேரறிஞரான நியூமென் பாங்குறப் பகர்ந்தவையும், சங்க நூல்கள் இனிதெடுத்துக் கூறியவையும் சான்றாண்மை என்னும் பெருந்தன்மையின் அரும்பண்புகளாகும். இளம்பெருவழுதி இயம்பியுள்ள சான்றாண்மை இன்று மறைந்து வருகிறது; மறைந்து வாராதிருப்பினும் குறைந்து வருகிறது. பிசிராந்தையார், ஆன்றவிந் தடங்கிய சான்றோர் பலர் தம் ஊரில் இருந்த காரணத்தால் தமக்கு நரை தோன்றவில்லை என்றார். அன்று போல் இன்றும் நம் நாட்டில் சான்றாண்மைப் பண்பு மலர வேண்டும். நாம் அனைவரும் சான்றாண்மை மிக்கவர்களாகி வாழ நாளும் முயல்வோமாக !

முன்னேற வழிகள்

வாழ்க்கை பொதுவாக எண்ணிப் பார்த்தால் இன்பமானதல்லாது துன்பமானதல்ல. இவ்வுலகம், நாம் வாழ்வதற்காக இருக்கிறதே அல்லாது நம்மைத் துன்புறுத்துவதற்கு இல்லை. அவரவர் மனப்போக்கையும் பொருளாதார நிலையையும் அறிவையும் திறமையையும் பொறுத்தே வாழ்க்கை இன்பமாகவும் துன்பமாகவும் அமைகிறது. கம்பர் கூறியவாறு,

> **'' எல்லாரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்தலாலே**
> **இல்லாரும் இல்லை; உடையார்களும் இல்லை மாதோ ''**

என்னும் லட்சியப் பொருளாதார நிலை நாட்டில் ஏற்பட்டாலும், விஞ்ஞான முறைப்படியுள்ள வாழ்க்கைப் போராட்டத்தில் அறிவும் திறமையும் உள்ளவர்களே வெற்றி காணமுடியும் என்பதையும், மற்றவர் தோல்வியடைவர் என்பதையும் நாம் என்றும் மறத்தலாகாது.

வாழ்க்கைப் போராட்டத்தில் அஞ்சிப் புறங்கொடுத்து ஓடாமல் வெற்றி காண்பவனே வீரனாவான்.

வாழ்க்கை, கடல் போன்றது என்று அதில் நீந்திச் செல்லாமல் மூழ்கிப்போதல் கூடாது; அறிவு அன்பு அறம் ஆகிய இவற்றால் ஆனதொரு மரக்கலத்தில் ஏறி இன்பமாகிய கரையை அடைய வேண்டும்.

ஒருவர் தம்மை நன்னிலையில் நிறுத்திக்கொள்வதும் நிலைகலக்கிக்கீழ்நிலைக்குத் தள்ளிக்கொள்வதும் தம்மாலே தான் ஆவது என்று எண்ணி, முயற்சி செய்தால்தான் முன்னேற முடியும்.

“தன்னை உயர்த்திக்கொள்ள உதவி செய்து கொள்பவருக்கு இறைவன் உதவி செய்கிறான்” என்கிறது ஆங்கிலப் பழமொழி. ஆதலாலே, உலகில் முன்னேற்றம் அடைவதற்கு உள்ள வழிகளை அறிந்து அவற்றின்படி ஒருவர் நடந்தால் முன்னேறுவது முடியும்; முடியாமல் இருக்கமுடியாது; முன்னிருந்த நிலையைவிட ஒரு படியாவது முன்னேறலாம். அறிஞர்கள் அத்தகைய அற்புதமான வழிகளைக் கூறியுள்ளார்கள். வாழும் இலக்கியங்கள் எல்லாம் அவற்றை வளமாக எடுத்தியம்புகின்றன. நாம் அவ்வழிகளைக் கடைப்பிடித்து நடந்தால் வெற்றி காண்பது உறுதி.

வாழ்க்கையில் முன்னேறுவதற்கு முதலாவது வேண்டுவது அறிவுப்பெருக்கம். அறிவே ஆக்கம் தருவது. அறிவே ஆற்றல். கல்விமட்டும் போதாது. கல்வி என்பது நூல்களைமட்டும் கற்பதனால் நரம்புத் தொகுதியில் ஏற்படும் மாற்றம். மனத்தில் உள்ள ஆற்றல்களைக் கல்வி வெளிப்படுத்துவதுதான் கல்வி.

ஒருவன் கல்வி கற்றவனாக இருக்கலாம்; ஆனால் கற்றறிந்த மூடனாகவும் விளங்கலாம்.

கல்வியும் அனுபவமும் சேர்ந்ததே அறிவு. இதனாலன்றோ திருவள்ளுவர் தமது கூரிய மதியால் கல்வியைக் கூறிக் கல்லாமையைக் கூறிக் கேள்வியைக் கூறிப் பின்னரே அறிவுடைமையைக் கூறினார்? கல்வி கேள்வி இவற்றோடு அனுபவம் சேர்ந்த ஒன்றே அறிவாகும் என்பதை அவர் இம்முறையில் விளக்கியுள்ளார். அவர்,

"அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்"

என்றும் வற்புறுத்தி வாழ்வில் முன்னேறுவதற்கு அறிவே காரணம் என்பதைப் புலப்படுத்தியுள்ளார். முன்னேற்றத்துக்கு அறிவுப்பெருக்கம் வேண்டும்.

அறிவுப் பெருக்கம் என்பது பலவகையான அறிவுகளைப் பெருக்க வேண்டுவதையே குறிக்கும். உலகியல் அறிவு வேண்டும்; நூலறிவும் வேண்டும்; எல்லாவகை அறிவும் வேண்டும்.

முன்னேற்றத்துக்கு மற்றொரு வழி, சந்தர்ப்பம் வாய்க்கும்போது அதனை நழுவ விடாது பயன்படுத்துவது. வாழ்வும் தாழ்வும் வாழ்க்கையில் சந்தர்ப்பத்தைப் பொறுத்துள்ளன. ஒருமுறை கிடைக்கும் சந்தர்ப்பம் மறுமுறை வாய்க்காது. வாய்ப்புக் கிடைக்கும்போது அதை விடாதுபற்றி முன்னேறவேண்டும். "காலமும் அலையும் காசினியில் ஒருவருக்காகக் காத்திருப்பதில்லை" என்று ஆங்கிலப் பழமொழி நமக்கு அறிவுறுத்துகிறது. வாய்ப்பை நழுவவிட்டதே ஹாம்லெட்டின் அழிவுக்குக் காரணம் என்று ஷேக்ஸ்பியர் இயற்றிய உலகப் புகழ்

பெற்ற ஒப்புயர்வற்ற ஹாம்லெட் நாடகம, உலக மக்களுக்கு உணர்த்துகிறது. வாய்ப்புக் கிடைக்கும்போது சிறு தொழில் எனினும் ஏற்றுக் கொண்டால், அது பெருந் தொழிலாக மாறினும் மாறும். நாலடியார் செய்யுள் ஒன்று,

"அறிவின்றல்
கால்தொழில் என்று கருதற்க; கையினல்
மேல்தொழிலும் ஆங்கே மிகும்"

என்று நமக்கு அறிவிக்கிறது. ஆதலால், சந்தர்ப்பத்தைக் கைவிடாது, சிறு தொழிலேயும் மேற்கொள்வது முன்னேற்றத்துக்கு ஒரு வழியாகும் என்றுணரலாம்.

நிதானித்து அறிதலும் முன்னேற்றத்துக்கு உரிய மற்ருெரு வழியாகும். ஒருவர் தாமாகவே நிதானித்தறியும் ஆற்றல் பெறவேண்டும். உணர்ச்சியாலும் வெளித் தோற்றத்தாலும் எவரும் ஒன்றைத் தவருக மதித்து விடுதல் கூடாது. முகம், சொல் முதலியவற்றைக் கொண்டு ஒருவரை நன்கறிந்து கொள்ளலாம். இவற்றைக்கொண்டு சிலரை அறியவும் முடியாமலிருப்பதுண்டு. அரிய செயல் செய்ய வல்லாரை எளிய தோற்றத்தால் தவருக உணர்தலும் கூடும். இதனுல்தான் "உருவு கண்டு எள்ளாமை வேண்டும் உருள் பெருந்தேர்க்கு அச்சாணி அன்னூர் உடைத்து" இவ்வுலகம் என்ருர் வள்ளுவர். எனவே, முன்னேற விரும்புபவர் எதையும் நிதானித்தறிந்து ஒரு செயலைச் செய்யவேண்டும். உலகத்தில் நகைத்துப் பேசி மகிழ்விப்பவர்கள் அனைவரும் நல்லவர்களாகவே இருக்க மாட்டார்கள். "ஒருவர் நகைத்து நகைத்துப் பிறரை மகிழ்விக்கலாம்; ஆனல், கொடியவராக இருக்கலாம்" என்று ஷேக்ஸ்பியர்

நமக்கு அறிவிக்கிறர். இதனல், உலகத்தில் எல்லாரும் பொல்லாதவர்கள் என்று முடிவு கட்டி விடுதல் கூடாது. உலகத்தில் நல்லவரும் உண்டு; தீயவரும் உண்டு. நல்ல யோசனை சொல்வது போல் கெடுப்பவர்கள் உண்டு; கடுமையாகப் பேசி, எடுத்துக் கொள்ளத்தக்க நல்ல ஆலோசனை கூறுபவர்களும் உண்டு. ஆதலால், நிதானித்தறிந்து தக்கவர் சொல்லும் யோசனையைக் கேட்டு நடக்கவேண்டும். கண்டவரிடமெல்லாம் யோசனை கேட்பவன் மண்டலத்தில் முன்னேறுவது கடினம். தக்கவரிடம் கேட்பதும், சொன்ன ஆலோசனைகளை ஆராய்ந்து நிதானித்தறிதலும் உள்ளவனே முன்னேற முடியும்.

மிக முக்கியமான வழி, தக்க சூழ் நிலையை அமைத்துக் கொள்வது. தகாத சூழ்நிலை இருப்பினும் ஒருவன் முன்னேற முடியாது. சூழ்நிலையில் மிக முக்கியமானது நட்பேயாகும். நல்ல நண்பர்கள் நல்ல சூழ்நிலையாவார்கள்; தீய நண்பர்கள் தீய சூழ்நிலையாவார்கள். இச்சகம் பேசுவோர், உள்ளொன்று வைத்துப் புறமொன்று சொல்லுவோர், அடுத்துக் கெடுப்போர், நேர்மையற்றவர், பொருமைக் குணமுள்ளவர், முன்னேற்ற எண்ணமில்லாதவர், காலக் கழிவு செய்வோர், முயற்சிப் பண்பு இல்லாதவர், இழிகுணம் படைத்தோர் இன்னோர் அடங்கிய சூழ்நிலை ஒருவரை முன்னேற்ருது. ஆதலால், நல்ல சூழ்நிலை அமைத்துக் கொள்வது ஒருவரை நன்ருக முன்னேற்றும் என்பது பல்காலும் கண்ட நல்ல உண்மையாகும்.

முன்னேற்றத்துக்கு அதிர்ஷ்டம் வேண்டும் என்பது முற்றும் பொருந்தாத வெற்றுரை. இது சோம்பேறிகள்

கூறுவது. அதிர்ஷ்டம் என்னும் வட சொல்லுக்குக் கண்ணுல் காண முடியாதது என்பது பொருள். காண முடியாததைக் கட்டியழுவான் ஏன்? அதிர்ஷ்டம் வரும் என்று காத்துக் கொண்டிருப்பதா? எப்போது அதிர்ஷ்டம் வரும்? "அலை எப்போது ஓய்வது? தலை முழுகுவது எப்போது?" அலையிருக்கும்போதே தலை முழுக வேண்டுவதுதான். அலை அடித்துக்கொண்டு போகாதவாறு விழிப்பாகக் காலையூன்றி நின்று தலை முழுக வேண்டும். "அதிர்ஷ்டம், ஆகூழ்" என்று சொல்லாமல் முயற்சி செய்யவேண்டும். விட்டுவிட்டு முயற்சி செய்தலாகாது; விடாது முயலவேண்டும். முயற்சியுடையார் இகழ்ச்சியடையார். "அருமையுடைத்து என்று அசாவாமை வேண்டும்; பெருமை முயற்சி தரும்." "முயற்சி திருவினையாக்கும்." "தெய்வத்தான்(ஊழ்) ஆகாது எனினும் முயற்சி தன் மெய்வருத்தக் கூலி தரும்." "ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவு இன்றித் தாழாது உஞற்றுபவர்." இத்தன்மையினரிடம் "ஆக்கம் அதர்வினுய்ச் செல்லும்" என்பது உண்மை. பெரும் பொருள் தேடிய செல்வர்கள், அரும்பொருள் கண்ட அறிஞர்கள் இவர்கள் எல்லாம் அதிர்ஷ்டத்தால் முன்னேருமல், பெருமுயற்சியால் வெற்றி பெற்ருர்கள் என்பதை அறியலாம். முன்னேறுவதற்கு முயற்சி வேண்டும் என்றறிக. அதுவும் கொண்ட எண்ணத்தில் திண்ணியராக இருந்து முயன்ருல்தான் முன்னேற முடியும். "எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார் திண்ணியராகப் பெறின்" என்னும் அருமையான திருக்குறள் இதனை வலியுறுத்துவது காண்க.

வாழ்க்கையில் முன்னேற விரும்புகிறவர்கள் பணத்தில் விழிப்பாக இருக்க வேண்டுவதும் அவசியமாகும். ''பணமில்லாதவன் நடைப்பிணம்.'' ஈட்டி எட்டின மட்டும் பாயும்; பணம் பாதாளம் மட்டும் பாயும்.'' ''பணம் பந்தியிலே; குலம் குப்பையிலே.'' ஆதலால், பணம் வேண்டும்; ஆனால், அதை நல்ல முறையிலே தேட வேண்டும். தேடிய பணத்தையும் விழிப்பாக இருந்து அளவாகச் செலவு செய்து சிக்கனமாக வாழ்வு நடத்த வேண்டும். சிக்கனம் என்பது லோபத்தன்மையல்ல. பிற்கால வாழ்க்கைக்கு ஓரளவு சேர்த்து வைப்பது சிக்கனம். தனக்கும் செலவு செய்துகொள்ளாது பிறருக்கும் பயன்படுத்தாது சேர்த்து வைப்பதுதான் லோபத்தன்மை. வருவாய்க்குத் தக்க செலவு செய்வது அறிவுடைமை. தேடிய பணத்தையும் அதிக வட்டிக்குக் கொடுத்து இழந்து போகாமலும், பிறருக்கு நம்பிக் கொடுத்து இழந்து போகாமலும், தக்கவாறு தக்க முறையில் சேர்த்துப் பாதுகாத்தால், ஒருவர், வாழ்க்கையில் முன்னேற முடியும். ஒருவர் அறம் செய்ய வேண்டும்; ஆனால் அதை அளவாகச் செய்யவும் வேண்டும். கடையெழு வள்ளல்களைப் போல் கொடை மடம் படக் கொடுத்தல் அறிவுடைமையாகாது. பெருஞ் செல்வர்களாயினும் செல்வத்தைப் போற்றி வாழ வேண்டாமா?

தோற்றப் பொலிவும் முன்னேறுவதற்கு வழியாகும். உடலும் உடையும் கலந்து அளிக்கும் காட்சியே தோற்றம் என்பது. அலங்கோலமாகக் காட்சியளிப்பது தோற்றமாகாது; சவரஞ் செய்துகொண்டு நல்ல ஆடை அணிந்து காட்சியளிப்பதுதான் இனிய தோற்றம். இதற்காக ஆடம்பரமான ஆடையணிகள் அணியவேண்டும்

என்பதல்ல. வயதானவர்கள் அதிக ஆடம்பரமான உடையணிதலாகாது; பளிச்சென்று பகட்டுச் செய்யும் பட்டாடைகளையோ நிற ஆடைகளையோ அணிதல் கூடாது. ஆடையே அணிபவரது மனப்போக்கைக் காட்டுவது. தக்கதோர் உடையே தகுதியான தோற்றத்துக்குப் பயன்படும்.

விளம்பரம் வேண்டுவதும், முன்னேற உள்ள வழிகளுள் ஒன்று. "தோன்று தோற்றித் துறைபல முடிப்பினும் தான் தற்புகழ்தல் தகுதியன்றே" என்று கூறிய பவணந்தி முனிவரே, "மன்னுடை மன்றத்து ஓலை தூக்கினும், தன்னுடை ஆற்றல் உணராரிடையினும், மன்னிய அவையிடை வெல்லுறு பொழுதினும், தன்னை மறுதலை பழித்த காலையும், தன்னைப் புகழ்தலும் தகும் புலவோர்க்கே" எனக் கூறினர். இது புலவர்க்கே அன்றிப் பலர்க்கும் பொருந்தும். இதனால், ஒருவர் சுவரொட்டியால் விளம்பரம் செய்துகொள்ள வேண்டும் என்பதல்ல; குடத்துள் விளக்குப்போல் இல்லாமல் தம் திறமைகளையும், செய்த சிறந்த செயல்களையும் பலரும் அறியச் செய்யவேண்டும் என்பதேயாகும். இப்படிச் செய்யாவிட்டால் தகுதியற்றவர்கள் தந்திரத்தாலும் தகுந்த சூழ்ச்சியாலும் காக்கை பிடித்தலாலும் தகுதியுள்ளவர்களையும் தலைமைப் பதவியிலுள்ளவர்களையும் தள்ளி முன்னேறி விடுவார்கள். முன்னேற வேண்டுமெனில் அளவுகடந்த அடக்கம் கூடாது; ஓரளவு விளம்பரம் செய்துகொள்ள வேண்டும்.

வேலையில் முன்னேற வேண்டுமென்றால், ஒருவர் தமக்குத் தகுந்த வேலையைத் தேர்ந்தெடுத்து ஏற்றுச் செய்வதோடு, அதைப்பற்றிய அறிவையெல்லாம்

பெற்றுக் கடமையுணர்ச்சியோடு பொறுப்பாகச் செய்ய வேண்டும். முதல் தேதிச் சம்பளத்தைமட்டும் பார்த்து வேலை செய்பவன் முன்னேறமாட்டான்; பொறுப்புணர்ச்சி யோடு செய்யாதவனும் முன்னேறமாட்டான். எடுத்த வேலையில் ஈடுபடவேண்டும்; பொறுப்புணர்ச்சியோடும் செய்யவேண்டும். இக் காலத்தில் ஒப்படைத்த வேலை களைப் பொறுப்புணர்ச்சி யில்லாமல் செய்யும் இளைஞர் களைக் காண்கிறோம். "ஐந்தில் வளையாதது ஐம்பதிலா வளையும்?" இத்தகையோர் தந்திரத்தாலும் வேறு பல வகையாலும் முன்னேற முயன்றாலும் முடியாது. ஆசிரி யத் துறையாயினும், அலுவல் தொழில் துறையாயினும், வாணிகத் துறையாயினும் வேறு எத்துறையாயினும் பொறுப்போடும் கடமையுணர்ச்சியுடனும் ஒருவர் வேலை செய்தால் நிச்சயமாக முன்னேற முடியும்.

இறுதியாக, எல்லாவற்றினும் மேலாகத் திறமை யோடு கூடிய நேர்மைப் பண்பு ஒருவரை முன்னேற்றும் என்று உறுதியாகக் கூறலாம். நேர்மை மட்டும் போதாது; திறமை வேண்டும். திறமை மட்டும் போதாது; நேர்மையும் வேண்டும். முன்னேற இவ்விரண் டும் இணையவேண்டும். இவ்விணைப்பு இன்றைக்கு மிக வும் தேவையானது. நேர்மையாக இருந்தாலன்றி நாம் முன்னேறமாட்டோம். நல்லவர்களாக இருப்பதோடு வல்லவர்களாகவும் இருந்தாற்றான் ஒருவர் முன் னேறலாம்.

ஒவ்வொருவரும் வாழ்க்கை என்பது போராட்டம் என்னும் உண்மையை உணர்ந்து, வெற்றி பெற்று முன் னேற அறிவுப் பெருக்கம், சந்தர்ப்பத்தை நழுவவிடாது

பயன் படுத்தல், நிதானித்தறிதல், விடாமுயற்சி, தக்க சூழ்நிலை அமைத்துக்கொள்ளுதல், சிக்கனமாய் வாழ்தல், ஓரளவு விளம்பரம் செய்து கொள்ளுதல், பிடித்த வேலையை மேற்கொண்டு கடமை யுணர்ச்சியுடன் பொறுப்போடு செய்தல், திறமையோடு நேர்மையா யிருத்தல் ஆகிய இவ்வழிகளைக்கடைப்பிடித்து, வாழ்வை நடத்தினல் முன்னேறலாம் என்று சுருங்கக் கூறலாம்.

மணமக்களுக்கு

திருமணம் என்பது ஆணும் பெண்ணுமாகிய இருவரை ஒருவராகச் சேர்க்கும் இணைப்பு நார்; இன்ப ஊற்று; ஒழுக்க வேலி. மணம் என்னும் சொல்லுக்குக் கூடுதல் என்பது பொருள். வடமொழியில் திருமணத்தைக் கல்யாணம் என்பர். கல்யாணம் என்பதற்கு மங்களம் என்பது பொருள். இச் சொல்லைத் தமிழ் இலக்கண முறைப்படி கலியாணம் என்பர். பாகவதர் சிலர் கலி+யாணம் என்று பிரித்துச்சனியன் பிடிப்பது என்று கூறிப் புது மணமக்களை அச்சத்தில் புகுத்திவிடுவதுண்டு. கலி-சனியன்; யாணம்-பிடித்தல். கலியாணம் என்னும் சொல்லுக்கு இப்பொருளே இல்லை. இளைஞர்கள் தவறான பொருளைக் கேட்டுத் திருமணம் செய்து கொள்ள அஞ்ச வேண்டுவதில்லை. அறிவோடு ஆணும் பெண்ணும் நடந்து கொண்டால், மணவாழ்வு இன்பமுள்ளதாகவே இருக்கும். பொறுமையும், விட்டுக்

கொடுக்கும் மனப்பான்மையும், அன்பும் மணமக்கள் இருவருக்கும் இருக்குமாயின், திருமண வாழ்வு பெறு தற்கரிய இன்பவாழ்வாக விளங்கும்.

மணவாழ்வை நம் இலக்கியங்களும் மறை நூல் களும் மாண்புறப் போற்றுகின்றன. வள்ளுவர், "அறன் எனப் பட்டதே இல்வாழ்க்கை" என்றும், "அறத்தாற் றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில் போஒய்ப் பெறுவது எவன்?" என்றும் வற்புறுத்தியிருப்பதைக் காண்கிறோம். அவரே 'நன்றியில் செல்வம்' என்னும் அதிகாரத்தில் ஓர் அழகிய உவமை வாயிலாக மண வாழ்வை வற்புறுத்துவதைப் பார்க்கலாம். வறியவர் களுக்குப் பொருள் கொடுத்து உதவாதவனுடைய செல் வம் மிக அழகுடைய பெண் ஒருத்தி மணம் செய்து கொள்ளாது வாழ்ந்து முதுமையடைந்தமை போலாகும் என்னும் பொருள் தருமாறு,

"அற்றார்க்கு ஒன்று ஆற்றாதான் செல்வம் மிகநலம்
பெற்றாள் தமியள்மூத் தற்று"

என்று தெள்ளத்தெளியப் பாடியிருத்தலால், தக்கவர் கள் தக்க வயதில் மணந்து வாழ வேண்டும் என்னும் கருத்து வள்ளுவரது உள்ளத்தில் வேரூன்றியிருந்தது என்பது புலனாகிறது. உவமையில் இக் கருத்தைப் பயன் படுத்தி யிருப்பதால் இவ்வுண்மை வெளியாகிறது. வள்ளுவர் எவரையும் சின்னஞ் சிறு வயதிலே மண்ணை மறந்து, பெண்ணை மறந்து, பொன்னை மறந்து, இன்ப வாழ்வை மறந்து, துறவுக் கோலத்தை மேற்கொள்ளக் கூறவில்லை. எல்லா இன்பங்களையும் நல்ல முறையில் நுகர்ந்த பின்பே விரும்புகிறவர் உண்மையான துறவை, உள்ளத்துறவை, மேற்கொள்ளுமாறு அவர்சொன்னாரே

அன்றிச் சமண முனிவர் நாலடியாரில் கூறியவாறு இளமையிலேயே துறவியாகுமாறு வற்புறுத்தவில்லை.

மக்கள் தங்கும் மலர்ச்சோலை மணவாழ்வு. முயற்சியாம் வழியில் அயர்ச்சி நேரின் ஊன்றுகோலாய் ஊக்கம் அளிப்பது மண வாழ்வு. இனிய வாழ்வளிப்பது இந்த மணவாழ்வே. இதனை மேற்கொள்ளும் மண மக்கள் தொடக்கத்திலிருந்தே திறமையுடன் நடந்து கொண்டால், உம்பர் உறைவார் பதியில் வாழ்வார் அடையும் இன்பத்தினும் உயர்ந்த இன்பத்தை அடையலாம்.

பதின்மூன்று வயதில் பெண்ணுக்கும் பதினாறு வயதில் ஆணுக்கும் மணம் செய்வது நல்லதல்ல. பெண்ணை எப்படியாவது தள்ளிவிடவேண்டும் என்று நம்மவர்கள் எண்ணுவது தவறு. வயது வந்தபின் குறைந்தது மூன்று ஆண்டுகள் கழித்துப் பெண்ணுக்கு மணம் செய்வதே பெண்ணின் உடல்நிலை கெடாதிருப்பதற்கு வழியாகும். ஆணுக்கு இருபத்தைந்தாவது வயதில் மணஞ்செய்வது தகுதியானது. பெண்ணுக்குப் பதினெட்டு வயதில் திருமணம் முடிப்பது பெண், உடல் நலத்துடன் வாழ்வதற்குத் தகுதியாகும். மணமக்கள் மணமானதும் தனித்து வாழ விரும்புதல் கூடாது; ஓரிரண்டு ஆண்டு பெற்றோருடனே தமையன்மாருடனே வாழ்வது நல்லது. இப்படி வாழ்வதால் புதுமணமக்கள் விருப்பம்போல் ஆடாது குடும்ப வாழ்க்கையில் பழகும் அனுபவம் பெறமுடியும். கணவனும் மனைவியும் அடிக்கடி அளவுக்குமேல் பேசி மரியாதை இழந்து போகாமல் இருப்பார்கள். இளமைத் துடிப்பால் அளவு கடந்து சிற்றின்பத்தில் மூழ்கிவிடாமல் உடலைப் பாதுகாக்கும்

நன்மையும் இவர்களுக்கு உண்டாகும். கணவன் மனைவி இருவருக்குமிடையே அன்பும் பெருகும்.

குடும்பத்தோடு சேர்ந்து வாழ்வதால் தடுக்க முடியாத இடும்பை ஏற்படின், மணமக்கள் தனியாக வாழ்வது நல்லதே. மணமக்கள் சேர்ந்து வாழ்ந்து இன்பத்தை இழக்க வேண்டுவதில்லை.

வேலை செய்யவேண்டிய நிலையின்றிப் போதிய வருவாய் உள்ளவர்களாயினும் புதுமணமக்கள் ஒருவரை ஒருவர் நாள் முழுவதும் பார்த்துக்கொண்டேயிருத்தல் கூடாது. கணவன்மார் சிலர் வேறு அலுவல் இல்லாத காரணத்தால், மனைவிக்குக் காய்கறி அறுத்துக் கொடுக்கும் தொண்டிலே ஈடுபட்டு மனைவிமார் எதிரிலேயே காட்சி யளித்துக்கொண்டிருப்பதுண்டு. இப்படிச் செய்வதால் தவறில்லை. ஆனால், மனைவி எதிரிலே கணவன் காட்சியளித்துக்கொண்டும் வீண் பேச்சுப் பேசிக்கொண்டும் இருப்பதால், பல சங்கடங்கள் ஏற்படுவதுண்டு. ஆதலால், கணவன் மனைவியைக் காணும் வேளையில் காண்பதும், மற்ற நேரங்களில் அலுவல்களைக் கவனிப்பதுமாக இருக்கவேண்டும். வேலை இல்லை எனினும் படித்தல், வெளிச் செல்லுதல் முதலியவற்றை அலுவலாகக் கொள்ளவேண்டும். தொடக்கத்திலேயே ஒருவருக்கு ஒருவர் மதிப்பை உண்டாக்கிக் கொள்வது நன்று. ஆரம்பத்திலே மதிப்பை அடையாவிட்டால், கட்டையில் போகும் மட்டும் மதிப்படைவது அரிதாகும். மதிப்பை உண்டாக்க மணமக்கள் யந்திரங்கள் போல நடந்துகொள்ள வேண்டும் என்பதல்ல. மதிப்புண்டாக்க வேண்டுமென்று கணவன்மார் சிலர் தீப்பொறி பறக்குமாறு கடுகடுத்துப் பேசி மனைவிமார்களை அச்சுறுத்து

கின்றனர். "எங்கள் மனைவிமார் எங்கள் எதிரிலே நிற்கமாட்டார்கள்" என்று சிலர் பெருமை பாராட்டிக் கொள்கின்றனர். கணவன்மார் சிங்கங்களாகவும் புலி களாகவும் காட்சியளித்தால், மனைவிமார்களுக்கு வாழ்க் கையிலே வெறுப்புத் தோன்றும் என்றறிக. ஆதலால், கணவன்மார் தங்கள் மனைவிமார்களிடத்தில் பேச்சிலும் நடத்தையிலும் அன்பாகவும் மென்மையாகவும் நடந்து கொள்வது மிகமிக இன்றியமையாதது.

கடுங்கோபக் கணவர்கள் உண்டு. கடுங்கோப முள்ள மனைவிமார்களும் உண்டு. கடுங்கோபம் இன்ப வாழ்வைக் கெடுத்துப் பாழ்படுத்தி விடும். கடுங்கோபம் மிக்கவர் வாழ்வில் இன்பம் காண்பது அரிதினும் அரிது. மணமக்கள் கடுங்கோபத்தை இளமையிலே கைவிட வேண்டும். ஒருவர் கடுங்கோபமுள்ளவராயின் மற்றவர் பொறுத்துக் கொண்டு வாழ்வை நடத்தவேண்டும். "ஒருவர் பொறை இருவர் நட்பு" என்பது பழமொழி.

மனைவியினிடத்தில் மதிப்பாக இருக்கவேண்டும் என்று கணவன், ஆராய்ச்சியில் ஈடுபட்ட விஞ்ஞானக் கலைஞனைப் போலப் பேசாமலும் விளையாடாமலும் இருத்தலாகாது. இளமைப் பருவத்தில் மனைவி இன்பப் பேச்சையும் விளையாட்டையும் விரும்புவது இயல்பு. பொருளை மிகுதியாக ஈட்டும் எண்ணத்தால் வேலையில் அளவு கடந்து ஆழ்ந்து, மனைவியிடம் பேசுவதும் ஆடு வதும் மறந்து வாழ்ந்தால், மனைவியின் மனம் அல்ல லுறும் என்பதை அத்தகைய கணவன் என்றும் மறத்த லாகாது. மனைவி சிற்றின்பக் கருவியல்ல; பிள்ளை பெறும் யந்திரமல்ல; உணர்ச்சியுள்ள மங்கை. எனவே,

மனித நிலை அறிந்து, மனநிலை உணர்ந்து கணவன் மாண்புற நடந்துகொள்ள வேண்டும்.

புதுவாழ்வில் புகும் மணமகளுக்கு ஒன்றை வற்புறுத்த விரும்புகிறேன். ஒரு பெண் பெருஞ் செல்வக் குடியிலே பிறந்திருந்தாலும் சிறந்த மனைவியாக விளங்க வேண்டுமென்றால், சமையற் கலையில் நன்கு பயிற்சி பெறுவதோடல்லாது, கணவன் அருகிருந்து உணவு படைத்தலை மேற்கொள்வது மிகவும் நல்லது. நடுத்தரக் குடும்பப் பெண்கள் இனிதாக உணவு சமைப்பதில் வல்லவர்களாக வேண்டும். மனைவிமார் இனிதாக உணவு சமைக்குந் திறமையால் கணவன்மாருடைய உள்ளத்தைக் கவரமுடியும். ஒரு புது மணமகள் தயிர்க் குழம்பை இனிதாகச் சமைத்துக் கணவனுக்குப் பரிமாறி மகிழ்ந்ததைச் செவிலித்தாய் கண்டு, பெற்ற தாயினிடம் சென்று, "நற்றாயே உன்மகள், கணவன் உவக்கும்படி சமைத்து உண்பிக்கின்றாள்" என்று பாராட்டிக் கூறியது போல் ஒரு பாடல் சங்க நூலாகிய குறுந்தொகையில் உள்ளது.

அது வருமாறு:

"முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கம் கழாஅது உடீஇக்
குவளை உண்கண் குய்ப்புகை கமழத்
தான்துழந்து அட்ட தீம்புளிப் பாகர்
இனிதுஎனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே."

புக்ககம் புகுந்த புதுமணமகள் கட்டித் தயிரைக் காந்தள் மலர் போன்ற தன் கையால் பிசைந்து கூட்டி அடுப்பில் வைத்தாள். தாளிப்புச் செய்ய வேண்டிய

நேரத்தில் கட்டியிருந்த சேலை நெகிழ்ந்தது. கைகழுவிச் சேலையைக் கட்டிக்கொள்ளப் போதிய நேரம் இல்லை. ஏன்? தக்க வேளையில் தாளிக்காவிட்டால் தயிர்க்குழம்பு கெட்டுப் போகும். ஆதலால், அவள் தயிரைப் பிசைந்த கையைப் புடைவையில் துடைத்துக்கொண்டு, தக்க சமயத்தில் குழம்பைத் தாளித்துக் கீழே இறக்கி வைத்தாள்; கணவன் உண்ண வந்தபோது அமைதியாகப் பக்கத்திலிருந்து பரிமாறினுள். குழம்பு சுவையாக இருக்கக் கணவன், உணவை நன்ருக உண்டு மகிழ்ந்தான். மனைவி அதைக் கண்டு மட்டற்ற மகிழ்ச்சி கொண்டாள். செவிலி இதைக் கண்டு மகிழ்ந்து நற்ருயிடம் சென்று பெண்ணின் திறமையைப் பாராட்டினுள்.

மற்ருென்று சிலப்பதிகாரத்தில் பார்க்கிருேம். கோவலனேடு மதுரையம்பதிக்குச் சென்ற கண்ணகி அங்கே ஆயர்பாடியில் தங்கி உணவு சமைத்துக் கணவனுக்குப் பரிமாறியதை இளங்கோவடிகள் மதுரைக் காண்டத்தில் கொலைக்களக் காதையில் உளங்கொளும் முறையில் வளமாக வருணித்துள்ளார். கவுந்தியடிகள் என்ற சமணப் பெண் துறவியை வழித்துணையாகக் கொண்டு நடந்து சென்ற கோவலனும் கண்ணகியும் மதுரையம்பதியை அடைந்தார்கள். கவுந்தியடிகள் தம்முடன் வந்த இவ்விருவரையும் தனக்கு முன்னமே நன்கு அறிமுகமாயிருந்த மாதரி என்ற இடைக்குல மாதிடம் அடைக்கலமாக ஒப்படைத்து, அவர்களுக்கு வேண்டிய உதவியளிக்குமாறு அவளிடம் கூறினுர்கள். அடிகளார் சொற்படி மாதரி அவர்களைத் தன் இல்லத்திற்கு அழைத்துச் சென்று, இருக்க இடமளித்துத் தன் மகளாகிய ஐயையிடம் கண்ணகிக்கு வேண்டுவன

வற்றைக் கொடுக்குமாறு கட்டளையிட்டாள். ஐயையும் தன் தாயின் கட்டளைப்படி பலாக்காய், வெள்ளரிக்காய், மாதுளம் பசுங்காய், மாங்கனி, வாழைத் தீங்கனி, சாலி அரிசி, பால், தயிர், நெய் முதலிய உணவுப் பொருள் களையும் சமையற் பாத்திரங்களையும் கொடுத்துக் கூட இருந்து உதவி செய்யவும் அடுத்து நின்றாள். கண்ணகி தன் மெல் விரல்கள் சிவப்பப் பல்வேறு பசுங்காய்களை அரிவாள் மணையில் அரிந்து வைத்து, வைக்கோலால் அடுப்பு மூட்டிய ஐயையுடனிருந்து, தன் கைத்திற மையால் காதலனுக்கு உணவை இனிதாகச் சமைத் தாள். பின்பு அவள் மண்ணக மடந்தையின் மயக்கம் நீக்குவாள் போல் தரையின்மேல் தண்ணீரைத் தெளித்துத் தன் கையால் தடவிக் கையைக் கழுவிக் கொண்டு, கணவன் அமர்வதற்குப் பனையோலைத் தடுக் கைப் போட்டு, குலை ஈனுத வாழையின் குருத்திலையை விரித்து வைத்து, "அமுதம் உண்க அடிகள் ஈங்கு" என இன்முகத்தோடு அன்புரை கூறிக் கோவலனை அழைத்தாள். கோவலன் தடுக்கில் அமர்ந்தான். கண்ணகி அவனுடைய பக்கத்திலிருந்து பரிவுடன் உணவைப் பரிமாறினாள். கோவலன் இனிதாக உண் டான். மாதரியும் ஐயையும் இக்காட்சியைக் கண்டு விம்மிதமுற்று, "கண்கொளா நமக்கு இவர் காட்சி ஈங்கு" என்று கூறி மகிழ்ந்தார்கள். இளங்கோவடிகள் இக் கண்கொள்ளாக் காட்சியைக் கீழ்வரும் வரிகளில் படம் பிடித்துக் காட்டியிருப்பதைக் கண்டு இன்புறுக:

"இடைக்குல மடந்தையர் இயல்பில் குன்று
மடைக்கலந் தன்னொடு மாண்புடை மரபிற்
கோளிப் பாகல், கொழுங்கனித் திரள்காய்,

வாள்வரிக் கொடுங்காய், மாதுளம் பசுங்காய்,
மாவின் கனியொடு வாழைத் தீங்கனி,
சாலி அரிசி, தம்பால் பயனொடு
கோல்வளை மாதே, கொள்கெனக் கொடுப்ப
மெல்விரல் சிவப்பப் பல்வேறு பசுங்காய்
கொடுவாய்க் குயத்து விடுவாய் செய்யத்
திருமுகம் வியர்த்தது; செங்கண் சேந்தன;
கரிபுற அட்டில் கண்டனள் பெயர
வைஎரி மூட்டிய ஐயை தன்னொடு
கையறி மடைமையின் காதலற்குஆக்கித்
தாலப் புல்லின் வால்வெண் தோட்டுக்
கைவல் மகடூஉக் கவின்பெறப் புனைந்த
செய்வினைத் தவிசில் செல்வன் இருந்தபின்
கடிமலர் அங்கையின் காதலன் அடிநீர்
சுடுமண் மண்டையில் தொழுதனள் மாற்றி
மண்ணக மடந்தையை மயக்குஒழிப் பனள்போல்
தண்ணீர் தெளித்துத் தன்கையால் தடவிக்
குமரி வாழையின் குருத்தகம் விரித்து, 'ஈங்கு
அமுதம் உண்க அடிகள் ஈங்கு' என
....
ஐயையும் தவ்வையும் விம்மிதம் எய்திக்
'கண்கொளா நமக்(கு) இவர் காட்சி ஈங்கு' என''

இங்ஙனம் புதுமண மக்கள் தொடக்கத்திலிருந்தே பழகினல் எப்படி மணவாழ்வு இன்பம் இல்லாமல் போகும்?

மனைவி உணவு படைக்கும் போது கணவனுக்கு எவ்வித உணர்ச்சியும் தோன்றுமாறு பேசக்கூடாது. கோப உணர்ச்சி உண்டாகுமாறு செய்தால், உண்ட

உணவு 'டாக்ஸின்' என்னும் நஞ்சாக மாறி உடலுக்கு ஊறு செய்யும். மருத்துவர்கள் இவ்வுண்மையை ஆராய்ச்சி செய்து கண்டு பிடித்துள்ளார்கள். ஆதலால், அமைதியாகப் பெண்கள் உணவு பரிமாற வேண்டும்.

புதுவாழ்விலே புகுகின்ற மணமக்கள் அன்பு, அறிவு, ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, பொறுமை, டாம்பீகம் இன்மை, அளவு கடந்த சின மின்மை, பொறுப்புணர்ச்சி, ஒற்றுமை ஆகிய இப்பண்பு களைத் தொடக்கத்திலேயே மேற்கொண்டால், வாழ்வு இன்பமாக நடக்கும் என்பது உறுதி. போதிய செல்வம் மட்டும் வாழ்வை வளம்படுத்தாது; இன்பமுடையதாக் காது. இருவரது பண்பும் திறனுமே வாழ்வை வளம் படுத்தும். இன்ப வாழ்வே வாழ்வின் நோக்கம். மண மக்கள் இதனை நன்குணர்ந்து, "எதுவரினும் சரியே, இன்ப வாழ்வு நெறியே" என்று துன்பம் வந்தாலும் உளந்தளராமல் உறுதியாக நின்று, சிறிய குறைகளையும் பெரியனவாகக் கருதாது, அறிவு அன்பு அறம் இவற்றை மேற்கொண்டு, வள்ளுவர் கூறியவாறு வாழ்வாங்கு வாழப் பழக வேண்டும். மற்றவர்களும் மணமக்களது புதுவாழ்வைக் கண்டு பொறாமை கொண்டு பாழ்படுத் தாது இன்பமாக்க வேண்டும்.

நவபாரத் பிரஸ், 30, ஜோன்ஸ் தெரு, சென்னை-1.